மாதம் இரு முறை

# எங்கள் தேசம்

QD/28/NEWS/2013

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே! Engal Thesam එංගල් දේසම්

மலர்: 12 | இதழ்: 23 | 2013 டிசம்பர் 01-14 | ஹிஜ்ரி: 1435 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 258

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.



## பட்ஜட் வெறும் கணக்கறிக்கை மட்டுமே

07



## முத்தையா முரளிதரனின் அரசியல் விளையாட்டு

09

## பலஸ்தீனர்களை வாழவிடு!

### ஜே.வி.பி. போராட்டம்



பலஸ்தீன் மக்களை அவர்களது சொந்த பூமியில் சுதந்திரமாக வாழவிடு!

இஸ்ரேல் அங்கு புரிந்துவரும் காட்டுமிராண்டித்தனத்தை

➡ 16

# முஸ்லிம்களை விரட்டியடிக்க சாகும்வரை போராடுவோம்

## -மாவனல்லையில் பிக்குகள் சூளுரை-



-பஷீர் அலி-

மாவனல்லை தெவனகல பிரதேசத்திலிருந்து முஸ்லிம்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என தெரிவித்து உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்த பிக்குகள், முஸ்லிம்கள் வெளியேறும் வரை நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாக சூளுரைத்தனர்.

மாவனல்லை ஹெம்மாதகம வீதியில், மாவனல்லையிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள உயன்வத்தை முஸ்லிம் கிராமத்துடன் இணைந்த தெவனகலை கிராமத்தில் இருநூறு மட்டிலான முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். அங்கு இரு பள்ளிவாசல்களும் உள்ளன.

தெவனகல பௌத்த விஹாரயை சூழவுள்ள மொத்த குடும்பங்களில் 25 வீதமானவர்கள் மட்டுமே முஸ்லிம்களாவர்.

➡ 16



சர்வதேச பலஸ்தீன் நற்புறவு தினத்தை முன்னிட்டு சோஸலிச இளைஞர் சங்கம் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த பலஸ்தீனுக்கு ஆதரவு தெரிவிக்கும் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க உரையாற்றுகிறார்.

படம்: அஷ்ரப் ஏ. சமத்

## சூதாட்டக்காரர்களுக்கு வாசி பொதுமக்களுக்கு கல்தா

### பட்ஜட் குறித்து ஹர்ஷ டி சில்வா எம்.பி



இலங்கையின் அபிவிருத்திக்கு அத்தியவசியமான ஏற்றுமதி கைத்தொழிலை ஊக்குவிக்க 2014ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் தவறிவிட்டதாக தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி சில்வா, இது சூதாட்டத்துக்கு சாதகமான, மக்களுக்கு எதிரான வரவு-செலவுத்திட்டமாகும் எனவும் தெரிவித்தார்.

கசினோ கலாசாரத்தைக் கொண்ட ஒரு சதவீதமான மக்கள் மட்டுமே இந்த வரவு-செலவுத் திட்டத்தால் நன்மையடைவர். இதுவொரு மக்கள் நேய அரசாங்கமாக இருந்திருப்பின் சூதாட்ட நிலையங்கள் மீது பல வரிகளை விதித்திருக்கும். அதைவிடுத்து அத்தியவசியப் பொருட்கள் மீது வரி விதித்திருப்பதானது சாதாரண மக்களுக்குச் செய்யும் பெரும் அநீதியாகும் எனத் தெரிவித்தார்.

## பால்மா விலை அதிகரிக்கிறது?

புதிய வரவு - செலவுத்திட்டத்தில் அத்தியவசிய பொருட்கள் சிலவற்றுக்கு விலை அதிகரிக்கும் என கூறப்படும் இத்தருணத்தில், தமது உற்பத்திகளின் விலைகளை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு நான்கு பால்மா உற்பத்தி நிறுவனங்கள் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

➡ 16

## விரும்பினால் எழுதுங்கள் இல்லாவிட்டால் திரும்பிச்செல்லுங்கள்

### ஆட்சேர்ப்பு பரீட்சையில் அதிரடி

கடந்த 2013.11.21ம் திகதி பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழியங்கும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபையினால் அலுவலக உதவியாளர் பதவி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு பரீட்சை நடத்தப்பட்டது. குறித்த பரீட்சைக்கு தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருந்தும் தனிச் சிங்கள மொழியிலேயே வினாத்தாள்கள் விநியோகிக்கப்பட்டன.

➡ 16

## அங்கோலாவில் இஸ்லாத்துக்கு தடை

### அங்கோலா மறுப்பு

ஆபிரிக்க நாடான அங்கோலா இஸ்லாத்துக்கு தடை விதித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. எனவே இஸ்லாத்தைத் தடை செய்யும் உலகின் முதல் நாடாக அங்கோலா பதியப்படுகிறது. இதன் முதற்கட்டமாக அங்குள்ள பள்ளிவாசல்கள் அனைத்தும் இடிக்கப்படும் என்றும் மேற்படி செய்திகளில் கூறப்பட்டுள்ளன. சட்டவிரோத மத பிரிவுகள் மீதான புதிய நடவடிக்

➡ 16

## தொலைபேசி ஒட்டுக்கேட்பு: மஹிந்தவையும் விட்டுவைக்காத அமெரிக்கா

### சந்தேகம் வெளியிடும் பாதுகாப்புத் தரப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினுடைய தொலைபேசி தொடர்புகளை அமெரிக்க பாதுகாப்புப் பிரிவினர் இரகசியமாக ஒட்டுக்கேட்கிறார்களா? என்பது தொடர்பில் இலங்கை பாதுகாப்புப் பிரிவினர் அவதானம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. சீனாவுடன் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணிவரும் இலங்கையின் செயற்பாடுகள் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்கும் அமெரிக்கா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு செயலாளர் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் தொலை

➡ 16

INSIGHT

After O/L What Next?

2 Month residential program in IT and English for girls

மாணவிகளுக்கான 2 மாத கால IT and English வதிவிடப் பயிற்சிநெறி

Diploma in Information Technology

Get up to speed in the information highway, learn the latest software and master the basics of computing.

Diploma in English

Whether you choose to pursue higher education or go for vocational education after your O/Ls, this diploma program would give confidence in using English with ease

பதிவுகளுக்கு: IT & English என டைப் செய்து 0773171722 என்ற இலக்கத்திற்கு SMS செய்யவும்

இடம்: மாவனல்லை

கட்டணம்: ரூபா. 36,000

(உணவு, தங்குமிட வசதி உட்பட)

பாதுகாப்பான இஸ்லாமியச் சூழல், நவீன கணினி வசதிகள், உயர் கல்வி வழிகாட்டல், குறைந்த கட்டணம் நிறைந்த பயன், முழுமையான இஸ்லாமியப் பயிற்சிகளுடன் இணைந்த கற்கை நெறிகள்.

Insight Institute of Management and Technology

18 A, Palmyrah Avenue, Colombo 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு 300 பேர் இலங்கை ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு 3000 பேர்



## சரத் பொன்சேகா

அமெரிக்க ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக 300-400 பேர் மட்டுமே கடமையில் ஈடுபடுகின்றனர். எனினும், போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட இலங்கை ஜனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மூவாயிரமாகும். இவர் மக்கள் மத்தியில் செல்ல அஞ்சுவதையே இது எடுத்துக்காட்டுகிறது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ராகம பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நமது நாடு பொருளாதாரத்தில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. நாட்டின் மொத்த சனத்தொகையில் 95 வீதமானவர்கள் மூன்றுவேளை உணவு உட்கொள்ள முடியாத வறுமையில் வாடுகின்றனர்.

இலங்கை, ஆசியாவின் ஆச்சரியமாக அன்றி, ஆசியாவின் நரகமாக மாறிவருகின்றது. நாட்டில் அதிவேக வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. 90 வீதமான மக்களினால் இந்த பாதைகளில் பிரவேசிக்க முடியாது. நாட்டில் ஊழல் மோசடிகளில் ஈடுபடும் தலைவரின் சகோதரர் கட்டுநாயக்க அதிவேக பாதையில் என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று கேள்வி எழுப்புகின்றார். ஒரு பிரச்சினையும் இல்லை. எனினும், ஒரு கிலோ மீற்றர் வீதி புனரமைக்க 1400 மில்லியன் ரூபா உலகில் வேறு எங்கும் செலவிடப்படவில்லை.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு வருடத்தில் 500 கைத்தொழிற்சாலைகளும் 200 ஆடைக் கைத்தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகளுக்காக அரசாங்கம் சூதாட்ட மையங்களை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. சில அமைச்சர்கள் பாலியல் தொழிலை சட்டரீதியாக்குமாறும் கசிப்பு வியாபாரத்தை சட்டரீதியாக்கு மாறும் கோருகின்றனர். இந்த நாட்டில் மூளை வளர்ச்சி குன்றிய அமைச்சர்களே பதவி வகிக்கின்றனர் என மேலுமவர் குறிப்பிட்டார்.

# ஆளுமைமிக்க 500 முஸ்லிம் தலைவர்களில் அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவு



இர்ஷாத் ரஹ்மத்துல்லாஹ்

உலகிலுள்ள 1.7 பில்லியன் முஸ்லிம்களில் பல் துறைகளில் அதிக செல்வாக்கை செலுத்தும் முதல் 500 முஸ்லிம்களின் தெரிவில் கைத்தொழில், வணிகத் துறை அமைச்சர் றிஷாட் பதியுதீனும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஜோர்தானை தலைமையகமாக கொண்டியங்கும் றொயல் இஸ்லாமிய கற்கை மையத்துக்கான ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டுள்ள தரப்படுத்தல் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2013, 2014 ஆம் ஆண்டுகளின் சிறந்த செல்வாக்குள்ள முஸ்லிம்களை ஆய்வுக்கு உட்படுத்தியபோது இலங்கையில் இருந்து அமைச்சர் றிஷாட் பதியுதீன் உள்வாங்கப்பட்டுள்ளமை இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளது. இவ்வாறு உலகளாவிய ரீதியில் சவூதி ஆரேபியாவின் மன்னர் அப்துல்லா பின் அப்துல் அஸீஸ் அல் சவுத், துபாய் நாட்டின் முடிக்குரிய இளவரசர் ஜெனரல் சேக் மஹம்மத் பின் செய்த் அல் நஹ்யான், ஈரான் நாட்டின் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லா கொமெய்னி, துருக்கிய பிரதமர் தையிப் அர்துகான், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரீப், டாக்டர் சாகிர் நாய்க் போன்றவர்களும் இப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.

# கிராண்பாஸ் பள்ளிவாசல் விவகாரம் தீர்வின்றி கிடப்பில் போடப்பட்டுள்ளது



-அலுவலக நிருபர்-

கடந்த மாதம் பௌத்த தீவிரவாதக்குழு ஒன்றினால் தாக்குதலுக்கு இலக்கான கொழும்பு கிராண்பாஸ் பள்ளிவாசல் விவகாரம் வாக்குறுதி அளிக்கப்பட்ட படி எதுவும் நடைபெறாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

குறித்த பள்ளிவாசலை விஸ்தரிப்பு செய்யக்கூடாது எனவும் தொழுகை நடத்தக்கூடாது எனவும் பௌத்த தீவிரவாதக்குழு ஒன்று தடையேற்படுத்தி, தாக்குதலையும் மேற்கொண்டது. இதையடுத்து ஏற்பாடு செய்யப்பட சமரச பேச்சுவார்த்தையில் குறித்த பள்ளிவாசாலை அதே இடத்தில் விஸ்தரிப்பது என இணக்கம் காணப்பட்டது. ஆனால், இதுவரை எந்தவொரு முன்னெடுப்பும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்விவகாரம் குறித்து உடனடியாகக் கவனம் செலுத்துமாறு அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் தினேஸ் குணவர்தன, இவ்விவகாரம் குறித்து அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டுவரவுள்ளதாக உறுதியளித்துள்ளார்.

# வடபுல மக்களை சர்வதேசத்திடம் அடகுவைத்து அடுத்த தேர்தலுக்கு பணம் சேர்க்கும் தமிழ்க் கூட்டமைப்ப

## குற்றம் சாட்டுகிறார் ஹுனைஸ் பாரூக் எம்.பி.



மட்டக்களப்பிலும் கொழும்பிலும் இருந்துகொண்டு வடக்கு மக்களுக்கு எதிராக செயற்படும் சில அரசியல்வாதிகள், வடபுல மக்களை சர்வதேசத்துக்கு அடகு வைத்து அடுத்த தேர்தலுக்காக பணம் தேடும் பணியினை ஆரம்பித்துள்ளனர். பொதுநலவாய மாநாடு முடிந்த கையோடு இலங்கைக்கு எதிரான தேசத்துரோக செயற்பாடுகளுக்கான அடித்தளம் வேகமாக இடப்படுகிறது எனத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், இந்த இனவாதிகளின் சதிவலைகளில் அப்பாவி தமிழ் பேசும் மக்கள் விழுந்துவிட வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்து அவர்களுக்கிடையில் நிரந்தரமான பிரிவை ஏற்படுத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் துடிக்கின்றனர். இதற்கு ஒருபோதும் இடங்கொடுக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருடங்களில் எமது மக்கள் இழந்தவைகள் ஏராளம். அவற்றில் முடியுமான சிலதையாவது பெற்றுக்கொள்ள முயற்சிளை செய்கின்றபோது, மீண்டும் வடக்கில் இனரீதியான மோதல்களை ஏற்படுத்த பிழையான அணுகுமுறைகளை இவர்கள் கையாள்கின்றனர். இந்திய அரசாங்கம் வழங்கிய வீடமைப்புத்திட்ட தெரிவு தொடர்பில் மக்களை பிழையாக வழிநடத்தி, அவர்களை வீதிக்கிறக்கி மோசமாக நடந்துகொள்கின்றனர். வீடமைப்புத் திட்ட தெரிவு தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளரிடம் தகவல் பெற்றுக்கொள்வதை விடுத்து, வடக்கில் அமைச்சர் றிஷாட் பதியுதீன் மீது பழிசுமத்துகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முத்தையா முரளிதரன் முதலமைச்சராகிறார்? கொழும்பு அரசியலில் புதிய நட்சத்திரம்



எதிர்வரும் மேல் மாகாண சபைத்தேர்தலில் ஆளுங்கட்சியின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக, கிரிக்கட் நட்சத்திரம் முத்தையா முரளிதரன் களமிறங்க இருப்பதாக செய்திகள் வெளியாகின்றன.

மேல் மாகாணத்தை அரசாங்கம் கைப்பற்றிக்கொள்ள ஜனரஞ்சகமான முதலமைச்சர் வேட்பாளர் ஒருவரைத் தேடிவந்த நிலையிலேயே முரளிதரன் சிக்கியிருப்பதாக அரசியல்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த பொதுத் தேர்தலில் நடிகர்களும் நடிகைகளும் களமிறக்கப்பட்டு அமோக வாக்குகளை அள்ளிக்கொண்டதன் அனுபவத்தின் அடிப்படையில் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் பிரபலங்களைத் தேடி வலைவீசி வருகின்றன.

ஏற்கனவே கிரிக்கட்டிலிருந்து ஓய்வுபெற்று அரசியலுக்கு வந்த அர்ஜுன ரணதுங்க, சனத் ஜயசூரிய வரிசையில் இன்று முத்தையா முரளிதரனும் இணைந்துகொள்ளப் போகின்ற செய்தி அவரது ஆதரவாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது.

இதற்கிடையில், முரளியின் அரசியல் வருகையின் பின்னணியில் அவரது சகோதரர் ஒருவரின் சிறை விவகாரமே உள்ளதென சிங்கள இணையத்தளமொன்றும் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு பெருந்தொகையான எத்தனோல் மதுசாரம் இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் முரளியின் சகோதரர் ஒருவர் பெருந்தொகை பணத்தை அபராதமாக செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த விசாரணைகளை மூடிமறைக்கவே அரசுடன் முரளி கைகோர்ப்பதாக அந்த இணையதள செய்தி தெரிவிக்கிறது.

# பிரதீபா பிரபா விசேட விருது

ஏ.கே.ஏ. ரவூப்

ஆசிரியர்களின் சிறப்பான சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பிரதீபா பிரபா விசேட விருதை அக்கரைப்பற்று வலய உடற்கல்வி ஆசிரியர் ஆலோசகரான அட்டாளைச்சேனை எம்.எச். ஹம்மாத் பெற்றுக்கொண்டார்.

இலங்கையில் பிரதீபா பிரபா விருது பல அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டாலும் விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட அதிபர், ஆசிரியர்கள் பத்துப்பேராவர். இவர்களில் இரண்டு பேர் மாத்திரமே முஸ்லிம்கள். அவ்விருவரில் ஒருவர் பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரி அதிபரும் இலங்கை வானொலியின் சிரேஷ்ட அறிவிப்பாளருமான அல்ஹாஜ் ஏ.ஆர். எம். ஜிப்ரி, மற்றவர்தன் உடற்கல்வி ஆசிரியர் ஆலோசகர் எம். எச். ஹம்மாத். இவர்கள் இருவரும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எம்.எச். ஹம்மாத் ஆசிரியர் அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் உயர் கல்வியையும் கற்ற பின்னர், 1999 இல் உடற்கல்வி ஆசிரியராக நியமனம் பெற்றார். அட்டாளைச்சேனை அரபா வித்தியாலயம், அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மஹாவித்தியாலயம், பள்ளிக்குடியிருப்பு பாயிஸா மஹாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் சேவையாற்றியுள்ளார்.

இவர் தேசிய மட்ட ஆசிரியர்களுக்கான கிரிக்கட் போட்டியில் 2009, 2010ஆம் ஆண்டுகளில் இரண்டாம் இடத்யையும் 2011, 2012ஆம் ஆண்டுகளில் சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டார். 2012ஆம் ஆண்டு ஆசிய பசுபிக் பிராந்திய சாரணா ஜம்போரியில் 29 நாடுகள் பங்குபற்றின. இதில் அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மஹாவித்தியாலய மாணவர்களையும் பங்குபற்றச் செய்த பெருமை இவருக்குண்டு.

# தேசிய மட்டத்துக்கு தெரிவு



அக்கரைப்பற்று - பள்ளிக் குடியிருப்பு பாயிஸா மஹாவித்தியாலயத்தில் 8 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி எம். வை. தஸ்னீம் நுதைசா தேசிய மீலாத் விழா கிழக்கு மாகாண மட்ட அரபு மொழி பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளதாக அதிபர் எம்.ஏ.ஏ. இஸ்ஸதீன் தெரிவித்தார்.

இவர், 79/2 பள்ளிக்குடியிருப்பு பள்ளி வீதியைச் சேர்ந்த முஹம்மது யூசுப் - றிஸ்வானா தம்பதியரின் புதல்வியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவமயமாக்கலால் வடக்கு, கிழக்கு பெண்கள்அச்சத்துடன் வாழ்கின்றனர்

வடக்கு கிழக்கு பிரதேசங்கள் இராணுவ மயப்படுத்தப்பட்டதாலும் இராணுவப் படைகளின் அதிகரித்த நடமாட்டத்தினாலும் இங்குள்ள பெண்கள் தமது பாதுகாப்பு குறித்து அஞ்சுவதாக விழுது ஆற்றல் பேரவை மையத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் சாந்தி சச்சிதானந்தம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், புத்தளம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள விதவைகளின் குடும்பங்களுக்கு தலைமைதாங்கும் பெண்களின் மாநாடு மட்டக்களப்பு கிறீன் கார்டன் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் கணவனை இழந்த விதவைகள் சுமார் 90,000 பேர் உள்ளனர். இவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தே தமது குடும்ப வாழ்க்கையை ஓட்டுகின்றனர்.

வடக்கு, கிழக்கு இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளமையால் பௌதிக ரீதியாக பாதுகாப்பின்றி எமது சுதந்திர நடமாட்டங்கள் தடைப்படுகின்றன. இதனால், கல்வி, தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதிலும் சுகாதாரம் போன்ற சேவைகளை பெற்றுக் கொள்வதிலும் நாம் பல்வேறு தடைகளை எதிர்நோக்குகின்றோம்.

எமக்கு பாதுகாப்பான நிரந்தர வீட்டு வசதிகள் அளிக்கப்படாமை எமது பாதுகாப்பின்மையை இன்னும் அதிகரிக்கின்றது. இராணுவத்தினரின் பிரசன்னமானது விசேடமாக பொதுவிடங்களில் பாலியல் வன்முறைகளுக்கும் பாலியல் தொந்தரவுகளுக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றது.

எம்மைப் பாதுகாக்க வேண்டிய கடமையுள்ள பொலிஸாரும் எமக்கெதிரான வன்முறைகள் அதிகரிக்க காரணிகளாக இருக்கின்றனர்.

எனவே, எமது பிரதேசங்களில் இராணுவத்தினரின் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும். எம்மைப் பாதுகாக்க கடமைப்பட்டுள்ள காவல்துறையினர், தமது கடமைகளைச் சரிவர மேற்கொள்ள வேண்டும்.



கஹடோவிட்ட முஸ்லிம் வாலிபர் முன்னணி இஸ்லாமிய புது வருடத்தை முன்னிட்டு வதுபிடிவல ஆதார வைத்தியசாலைக்கு தளபாடங்களை அன்பளிப்பு செய்தது. தேர்தல் உதவி ஆணையாளர் எம்.எம். முஹம்மத் உட்பட பிரமுகர்களையும் படத்தில் காணலாம். படமும் தகவலும். ஸினான்

# நல்லிணக்க அரசியலாலேயே இன உறவைகட்டியெழுப்ப முடிந்துள்ளது

## -நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் தலைமையிலான கூட்டமைப்பு-

முஸ்லிம்-தமிழ் உறவு பிளவுபட்டிருப்பதால் இரு சமூகங்களின் பிரச்சினைகளையும் பரஸ்பரம் தெரிந்து கொள்வதற்கான வாசல் தடைப்பட்டிருக்கின்றது. இரு சமூகங்களும் தமக்கிடையேயான பிரச்சினைகளை பரஸ்பரம் தெரிந்து கொண்டு தமிழ்-முஸ்லிம் உறவை மீளக் கட்டியெழுப்ப வடக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள நல்லிணக்க அரசியலாலேயே முடிந்துள்ளதாக நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் தலைமையிலான கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் வழங்கியுள்ள வாக்குறுதி குறித்து கருத்துத் தெரிவித்துள்ள நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் தலைமையிலான அரசியல் கூட்டின் ஊடகப் பேச்சாளர் அஷ்ஷெய்க் நஜா முஹம்மத்:

மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் வசிக்கின்ற முஸ்லிம்களின் குடியேற்றம் தொடர்பில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து சந்திப்புகளை மேற்கொண்டிருந்தோம். மீள்குடியேற்றத்திலுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவர்கள் கருத்து வெளியிட்டனர். இக்கருத்துக்களை வடமாகாண முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து அப்போதுதான் அவருக்கு தெளிவு கிடைத்தது. முஸ்லிம்களில் பல பிரச்சினைகள் தமிழ் தரப்புக்கு தெரியப்படுத்தப்படாமல் இருப்பதை நாம் கண்டு கொண்டோம். அதேபோன்று, தமிழ் மக்களின் பல பிரச்சினைகள் முஸ்லிம் தரப்புக்கு தெரியாமலுமுள்ளன.

பரஸ்பரம் உறவின்றி, அரசியல் நல்லிணக்கமின்றி பயணித்ததன் விளைவே இதற்குக் காரணமாகும்.

கடந்த வடமாகாண சபைத் தேர்தலில் எமது அரசியல் கூட்டு தமிழ்த் தேசிய கூட்டணியுடன் செய்துகொண்ட நல்லிணக்க அரசியல் உடன்படிக்கையின் பயனாகவே தற்போதாவது பரஸ்பரம் இரு சமூகங்களினதும் பிரச்சினைகள் தெரியவருகின்றன.

எனவே, நாடுதழுவிய ரீதியில் இணக்கப்பாட்டு அரசியலை மேற்கொள்வதன் மூலமே மூவினங்களுக்குமிடையிலான உறவை கட்டியெழுப்ப முடியும்

## ஒரு பன்முக சமுதாயத்தில் முஸ்லிம்களின் பங்கு பேராதனை வளாகத்தில் தேசிய ஆய்வு மாநாடு



பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் மாதம்பை இஸ்லாஹிய்யா அரபுக்கல்லூரி இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஒரு பன்முக சமுதாயத்தில் முஸ்லிம்களின் பங்கு என்ற கருப்பொருளிலான தேசிய ஆய்வு மாநாடு பேராதனை வளாகத்தில் அமைந்துள்ள கலை பீட விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக முன்னாள் சர்வதேச நீதிமன்ற பிரதி நீதியரசர் கலாநிதி வீரமந்திரி கலந்து சிறப்பித்தார். சிறப்பு அதிதிகளாக: கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, கலை பீட பீடாதிபதி ஏ.எம். நவரத்ன பண்டார, பேராசிரியர் எச். திரனந்த, கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ், கலாநிதி எம்.ஏ.எம். சித்தீக், கலாநிதி நுஃமான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைக்கு உதவிகோரல்

கடந்த 38 வருடங்களாக ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் மத்ரஸா விரிவுரையாளராகவும் கல்விப்பணி புரிந்து வந்த வெலிகம, கல்பொக்கை, ஜின்னா வீதி, இல. 37 இல் வசிக்கும் மௌலவி எம்.எச்.எம். புர்கான்-பாரி (வயது 64) சிறுநீரக வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளார்.

எனவே, இவருக்கு சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை மேற்கொள்ள 'O' பொசிட்டிவ் சிறுநீரகமும் இரத்தமும் அவசரமாகத் தேவைப்படுவதாக சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.எம். செனவிரத்ன தெரிவித்துள்ளார். இதற்காக பரோபகாரிகளிடமிருந்து உதவியை மௌலவி புர்கான் நாடுகிறார். சிறுநீரகம், இரத்தம் வழங்கக்கூடியவர்களுக்கு சன்மானம் வழங் கவிருப்பதாக அவரது குடும்பத் தவர் அறிவிக்கின்றனர்.

தொடர்புகளுக்கு:
0774450317/ 0777410799

வங்கிக் கணக்கு இல:
07720014000523 மக்கள் வங்கி, வெலிகம கிளை



எழுத்தாளர் நாசிக் மஜீதின் 'மௌனத்தின் பின்னரான' கவிதை நூல் வெளியீட்டு விழா கிண்ணியா பொதுநூலக கேட்போர்கூடத்தின் நடைபெற்றது. பிரதம அதிதி திருமலை பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக், சிறப்பு அதிதிகளான கிண்ணியா ஜம்இய்யதுல் உலமா தலைவர் அஷ்ஷெய்க் ஹிதாயத்துள்ளாஹ் (நளீமி), கிண்ணியா நகரசபை முதல்வர் சட்டத்தரணி டாக்டர் ஹில்மி முஹம்மட், பிரதி முதல்வர் சபருள்ளா, நீதிமன்ற பதிவாளர் நியாஸ் ஆகியோர் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

எங்கள் தேசம்
மலர் : 12 இதழ் : 23 2013 டிசம்பர் 01 - 14
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

# பெருகிவரும் வன்முறைக்கு முடிவுகட்ட வேண்டும்


சென்ற ஆண்டில் மட்டும் 7418 சிறுவர்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டமை அரச பதிவுகளில் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் பெண்கள் வல்லுறவு தொடர்பான எண்ணிக்கையைக் குறிப்பிடவில்லை. களவு, கொள்ளை, கொலை வாகன விபத்து, தற்கொலை பற்றிய புள்ளிவிபரங்களையும் பொலிஸ் திணைக்களம் குறிப்பிடுமானால் ஆசியாவின் ஆச்சரியத்தை நோக்கிச் செல்வதாக கூறும் இலங்கையில் ஒரு நாளைக்கு எத்தனை வன்முறை சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதை கணிப்பிட முடியும்.


மூன்று லட்சம் ரூபாவுக்காக ஒரே குடும்பத்தில் ஐவரைக் கொலைசெய்த இளைஞன் பற்றிய செய்தி ஊடகத்தில் வந்தது. மனைவியைக் கொலை செய்து விட்டு தானும் தற்கொலை செய்து கொள்வது இன்று ஒரு கலாசாரமாக மாறிவிட்டது. சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் தங்கள் சொந்த வீடுகளில் கூட பாதுகாப்பில்லை என்ற நிலை. பாடசாலைகளில், கல்விக்கூட தனியார் வகுப்புகளில், பயிற்சிக் கூடங்களில் தந்தையின் தாயின் ஸ்தானத்திலிருந்து பாதுகாக்க வேண்டியவர்களே பிள்ளைகளை வல்லுறவுக்குட்படுத்தும் பரிதாப நிலை வேகமாக விருத்தியடைந்து செல்கிறது.

கலாசார விழுமியங்களும் மனிதப் பெறுமானங்களும் போற்றப்படும் ஒரு நாடாக இலங்கை இருந்துவந்தது. மனித நேயம், விருந்தோம்பல் எல்லாப் பிள்ளைகளையும் சொந்தப் பிள்ளைகளாக மதிக்கும் பாங்கு, தீமையை தடுத்து நிறுத்தும் போக்கு, தீமைகளில் ஈடுபடுவோரை வெறுக்கும் மனப்பாங்கு, சமூகத்தில் அத்தகையவர்களின் நிலை இழிவாகக் கருதப்படும் வழக்காறு என்பன நாட்டில் இருந்துவந்தன. இன்று அவையெல்லாம் எப்போதோ நடந்த வரலாறுகளாக மாறிப்போய் விட்டன. பணம், பட்டம், பதவி, அதிகாரம், உலகமோகம், உலகத்தின் இன்பங்களை முழுமையாக அனுபவிப்பதிலுள்ள வேகம் என்பவை இத்தகைய இழிந்த செயல்களின் பால் மனிதனைத் தூண்டுகின்றன. புத்திஜீவிகளும் அதிகாரத்தில் உள்ளோரும் பார்வையாளர்களாகவே இருக்கும் நிலையில் எல்லா வகைத் தீமைகளும் பஞ்சமா பாதகங்களும் கண்முன்னே அரங்கேறுகின்றன.

மனிதனின் நம்பிக்கையில், மனப்பாங்கிலுள்ள கோளாறுதான் இதற்கான பிரதான காரணம் என்று கூறலாம். மரணத்துடன் வாழ்க்கை முடிந்துவிடும் என்று நம்பும் மனிதன் அதில் முடியுமான உச்சளவில் அனுபவித்து விட முனைகிறான். அங்கு விழுமியங்களுக்கோ, பண்பாட்டிற்கோ, சமய சமூக பெறுமானங்களுக்கோ சிறிதும் இடமில்லை. ஆசை, மோகம், மனோ இச்சைப்படி நடக்கும் வேட்கையெல்லம் இன்று மனிதத் திறமைகளாகவும் தந்திர உபாயங்களாக மதிக்கப்படுகின்றன. புத்திசாலித்தனத்தின் குறிகாட்டிகளாக பல சமூகக் குழுக்களால் அங்கிகரிக்கப்படுகின்றன. மனித வாழ்வு மரணத்துடன் முடிவடைவதில்லை என்பதை நம்ப மறுக்கும் மனிதன் முடியுமான அளவு சுகபோகத்தில் மிதக்க முயல்கிறான். மரணம் வரும், அடுத்த வாழ்வுக்கு ஒரு பரீட்சையுள்ளது அதில் சகல செயல்களும் விசாரணைக்கு உட்படுத்தப்படும் என்பதை நம்பிக்கை கொள்ளாததால் இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது. தன்வாழ்வுக்கு வகைகூற வேண்டும் என்ற மனப்பாங்கு மனிதனிடமிருந்து அகன்றுள்ளது. மனித வாழ்வின் அடுத்த அத்தியாயம் மறுமையில் விசாரணையாக நடந்து நிரந்தரமான உலகில் சுவர்க்கம் அல்லது நரகம் விதிக்கப்படும் என்பதை ஏனோ மனிதன் நம்ப மறுக்கிறான். எந்த சமயத்தை நாட்டை சேர்ந்வர்களாயினும் இந்த அவநம்பிக்கைதான் இந்தளவு வெட்கக்கேடான செயல்களின்பால் மக்களை ஊக்குவிக்கின்றது என்று கூறுவது பிழையாகாது. இவற்றையெல்லாம் இழிவளவாக்க யார் நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்ற அங்கலாய்ப்பு எல்லோருக்குமுண்டு.




## சொல் வெட்டு



■ பாராளுமன்ற விவாதங்களை நேரடி ஒளிபரப்பு செய்ய உத்தேசம்

–சபாநாயகர் சமல் ராஜபக்ஷ–

*நல்ல ஐடியா! கொரட்டவிடும் நம்ம பிரதிநிதிகள நேரடியா பாக்கலாம்*

■ மேல் மாகாணத்தை வெற்றிகொள்ள ஐக்கியதேசிய கட்சி வியூகம் வகுத்துள்ளது

–கரு ஜயசூரியம் எம்.பி–

*அடப்போங்க சார்... ஒங்களுக்குள்ள மொரண்பாடுகள களயாம எந்தப் பருப்பும் வேகா...*

■ ஜனாதிபதியின் சுயரூபத்தைக்காட்ட 14 பில்லியன் ரூபா மாநாடு என்ற பெயரில் வீண்விரயம்

–ஐ.தே.க–

*வரிகட்டத்தான் மகா சனங்கள் இரிக்கக்குள்ள 14 பில்லியனெல்லாம் ஒரு காசா?*

■ பொதுநலவாய தலைமை மகுடமல்ல, முட்கிரீடம்; ஜனாதிபதி விரைவில் உணர்ந்து கொள்வார்

–மங்கள சமரவீ எம்.பி–

*ஒங்களுக்கு ஏன் குத்துது...?*

■ ஒவ்வொரு இலங்கையரும் மூன்று லட்சம் ரூபா கடனாளியாக உள்ளனர்

–அரசாங்கம் தெரிவிப்பு–

*ஒங்களயெல்லாம் மெத்தயில வெச்சத்துக்கு நீங்க தாற பரிசா இது...?*

■ பொருட்களின் விலை அதிகரிப்புக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை

–அமைச்சர் ஜோன்ஸ்டன்–

*பெற்ரோல ஊத்திப்பொட்டு நெருப்பே, நெருப்பே எரியொண்டானாம்...*

எங்கள் தேசம் சந்தா விபரம்

உள்நாடு
தனிப்பிரதி: 30.00
வருட சந்தா: 1200.00
ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு
இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00
மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00
அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00
இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய ஒரு மீள்பார்வை

மூனா ஹானா

CHOGM மாநாட்டுக்கு எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்று இதுவரை அறிவிக்கப்படவில்லை. 1400 கோடி என்று ஐ.தே.க. கூறியுள்ளது. அரசாங்கம் அதை ஏற்கவோ, மறுக்கவோ இல்லை. வர்த்தக மாநாட்டினால் நன்மை கிடைக்க இன்னும் நீண்டநாள் எடுக்கும் என்று அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம கூறியதிலிருந்து உடனடி இலாபம் எதுவுமில்லை என்று தெரிகிறது. மாநாட்டு செலவுகள் ஏதோ ஒரு வடிவில் தம்மீது சுமத்தப்படும் என்று பொது மக்கள் நினைக்கின்றனர்.

மாநாட்டின் உடனடி விளைவுகளையும் அரசாங்கமும் சில வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் நடந்துகொண்ட விதத்தையும் பார்க்கும்போது இலங்கைக்கு எதிரான சக்திகள் நாட்டுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிராக இது ஏற்பாடு செய்யப்பட்டதா? என்ற சந்தேகத்தை எழுப்புகிறது. அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் தமது அழைப்பின்பேரில் இலங்கை வந்தவர்களுடன் நடந்துகொள்வது போல் இருக்கவில்லை. இலங்கையிடம் விசா பெற்று வந்த சில விருந்தினர்கள் எதிரிகள்போல் நடத்தப்பட்டனர். இந்தியா, கனடா, பிரித்தானியாவின் நடவடிக்கைகள் இவ்வாறு பார்க்கப்பட்டதால், பொதுநலவாயத்தின் தரக்கட்டுபாடுகள் பற்றி கேள்வி எழுப்பப்பட்டபோது இலங்கை கரடுமுரடாகவே எதிர்விளைவைக் காட்டியதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

சனல் 4 ஊடகக் குழுவினருக்கும் இலங்கையில் கசப்பான அனுபவமே ஏற்பட்டது. இலங்கையெங்கும் பிரயாணம் செய்து நிலைமையை நேரடியாகக் கண்டறியலாம் என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டு விமான நிலையத்தில் இறங்கியது முதல் பல தடைகளும் ஏற்படுத்தப்பட்டன. வடக்குக்கான விமான சேவை நிறுத்தப்பட்டது. புகையிரதப் பயணம் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதன் முன்னணியில் நின்ற செயற்திட்ட அமைச்சருக்கு உடனடியாகவே கபினட் அந்தஸ்துள்ள அமைச்சு வழங்கப்பட்டதிலிருந்து இதன் பின்னணியை விளங்கிக் கொள்ளலாம். உண்மையில், கலம் மக்ரே குழுவினருக்கு விசா மறுக்கப்பட்டிருந்தால் என்ன தீய விளைவுகள் என்று பயப்பட்டார்களோ, அதைவிட பத்து மடங்கு தீய விளைவுகள் அவருக்கு விசா வழங்கிய பின் அரசாங்கம் நடந்து கொண்ட முறைமூலம் ஏற்பட்டது என்பதே நோக்கர்களின் கருத்தாகவுள்ளது.




மாநாட்டின் மூலம் இலங்கையின் இமேஜ் அதிகரித்ததா, குறைந்ததா என்றால் இரண்டாவதைத்தான் விடையாகக் கூறமுடியும். விழா ஏற்பாடு, இலங்கையின் அழகு, கொழும்பு நகரின் நேர்த்தி போன்ற எதுவும் சர்வதேசத்துக்கு போகாது. மாறாக, ஏலவே உள்ள ஊடகச் சுதந்திரம் மறுப்பு போன்ற விடயங்கள் மேலும் உறுதிப்படுத்தப்பட்ட சம்பவங்களே முதலிடம் பெற்றன. மாநாடு முடிந்து குறுகிய காலத்திலேயே அது காட்டியுள்ளது. மேற்கின் தாளத்துக்கு ஆட முடியாது என்பது உண்மையாகும். ஆனால், நாமே நாடுகளை அழைத்து காட்சிப்படுத்தும் நிகழ்வுகள் உச்சளவு பயனைப் பெறுவதாக அமைந்திருக்க வேண்டும். கலம் மக்ரேயின் அடுத்த ஆவணப்படம் சிலவேளை முன்னயதைவிட அதிக தாக்கம் கொண்டதாக அமையயக்கூடும்.

53 தலைவர்களில் 37 பேரினது வருகையை உறுதிப்படுத்தியதாக கூறப்பட்டாலும் 23 பேரே வருகை தந்தனர். அண்மைய ஆண்டுகளில் ஆகக் குறைந்த தலைவர்கள் பங்குபற்றிய மாநாடாகவே இது கருதப்படுகிறது. 1999 இல் தென் ஆபிரிக்காவில் 47 பேரும் 2003 நைஜீரியாவில் 38 தலைவர்களும் 2005 இல் மோல்டாவில் 38 தலைவர்களும் 2009 ட்ரினிடாவில் 34 தலைவர்களும் 2011 இல் அவுஸ்திரேலிய மாநாட்டில் 36 தலைவரும் பங்குபற்றியிருந்தனர்.

வருகைதராத இந்தியா, கனடா, மொரிசியஸ் ஆகிய மூன்று நாடுகளின் தலைவர்களும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவே மாநாட்டை புறக்கணிப்பு செய்தனர். வருகைதந்த பிரித்தானியா கராராக நடந்துகொண்டதற்கும் அதுவே காரணமாகக் கூறப்பட்டது. மொரிசியஸ் தலைமை மாநாட்டில் பங்கு பற்றாமையால் ஏலவே தீர்மானித்திருந்த படி 2015 மாநாட்டை அந்த நாட்டில் நடத்துவது பிரச்சினையாக வந்தது. இதனால் மோல்டா அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. 2005 இலும் மோல்டாவில் CHOGM நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

CHOGM காலத்தில் இலங்கையின் ஹோட்டல்கள் நிரம்பி வழியும் என்று அடிக்கடி பிரசாரம் செய்யப்பட்டிருந்தாலும் கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல்களிலும் 55 வீதமான அறைகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. அதுவும் நவம்பர் 10-13 காலத்தில் 30 வீதமும் 13-14

➡ 16

# எய்ட்ஸ் இல்லாத மனித சமுதாயத்தை உருவாக்குவோம்



டிசம்பர் 01 எய்ட்ஸ் தினமாகும். எய்ட்ஸ் நோய் உலகிற்கு ஓர் அச்சுறுத்தல். இந்நோயானது வெகுவிரைவில் மரணத்தை சம்பவிக்கக்கூடியது. இந்நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதன் மூலமே முற்காப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லலாம் என உணரப்பட்டு, எய்ட்ஸ் பற்றிய உலக மகாநாடு 1994 டிசம்பர் முதலாம் திகதி பாரிஸில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து எய்ட்ஸ் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

எய்ட்ஸ் (AIDS) என்பது Acquired, Immune Deficiency Syndrome என்ற தொடரின் சுருக்கமாகும். அதாவது, தேடிப் பெற்ற நீர்ப்பிடணக் குறைபாட்டு நோய்த் தொகுதி என்பதாகும். HIV என்னும் வைரஸ் மூலமே, இந்நோய் உருவாகிறது. HIV வைரஸ் உடலினுள் புகுந்து வெண்குருதி கலங்களைத் தாக்கி நோய் எதிர்ப்பு சக்தியைப் பலவீனப்படுத்துகிறது. இதனால் எய்ட்ஸ் பீடிக்கப்பட்ட ஒருவர் விரைவில் மரணத்தைத் தழுவுகிறார்.

HIV வைரஸ் ஒருவருக்கு 3 வழிகளில் கடத்தப்படுகிறது: நோயுற்றவர்களுடன் பாதுகாப்பற்ற முறையில் உடலுறவு கொள்ளுதல்,

நோயாளரின் குருதியை மற்றையவருக்கு மாற்றுதல் அல்லது நோயாளிக்கு பாவித்த ஊசியை வேறுறொருவருக்கு பயன்படுத்துவது, HIV நோயுள்ள தாயிலிருந்து தன் கருவிலுள்ள குழந்தைக்கு கடத்தப்படுதல் போன்றவையே இம்மூன்று வழிகளுமாகும். இந்நோயின் பாதிப்பிலிருந்து சிறுவரைப் பாதுகாக்க பாலியல் கல்வி மூலம் அறிவு வழங்கப்படுகிறது. அதேவேளை, பெற்றோருக்கும் இது பற்றிய விழிப்புணர்வு அவசியமாகும்.

இலங்கையில் முதலாவது எய்ட்ஸ் நோயாளி 1987 ஆம் ஆண்டு இனங்காணப்பட்டதை அடுத்து இந்நாடு தம்மை உசார்படுத்திக்கொண்டது. அன்று தொடக்கம் 31.10.1997 வரை 76 பேர் எய்ட்ஸ் நோய்க்கு இலக்காகி 61 பேர் இறந்தனர். இவர்களில் ஆண்கள் 46 பேர், பெண்கள் 15 பேர் ஆகும். 2012 ஆம் ஆண்டில் 1597 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 22 பேர் மரணமடைந்துள்ளதாகவும் தேசிய பாலியல் நோய் எய்ட்ஸ் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் பாலியல் தொழிலாளர்களுக்கு ஊடாகவே அதிகளவானவர்கள் HIV தொற்றுக்கு ஆளாகிறார்கள் என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. இந்த பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்கள் அவதானத்துடன் நோக்கப்பட வேண்டியவர்கள் என்று HIV எய்ட்ஸ் ஒழிப்பு அமைப்பின் அதிகாரி தரனி விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார். இலங்கையில் 35,000 - 47,000 வரையிலான பெண் பாலியல் தொழிலாளர்கள் உள்ளதாகவும் அவர்களிடம் பாலியல் தேவைகளை பூர்த்திசெய்யும் நோக்கில் நாளொன்றுக்கு 70,000 முதல் 94,000 வரை வாடிக்கையாளர்கள் செல்வதாகவும் HIV எய்ட்ஸ் ஒழிப்பு அமைப்பு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

2010 இன் புள்ளிவிபர முடிவுகளின் படி உலக சனத்தொகையில் 3 கோடி 40 இலட்சம் மக்கள் HIV தொற்றுடன் வாழ்ந்து வருகின்றார்கள். உலகில் தென் ஆபிரிக்காவே அதிகளவில் HIV நோயாளிகளைக் கொண்டிருக்கின்றது. இதைத் தொடர்ந்து நைஜீரியாவும் இந்தியாவும் உள்ளன. HIV எய்ட்ஸ் நோயாளிகள் வாழும் 162 நாடுகளில் இலங்கை 129 ஆவது இடத்தில் உள்ளது என உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வறிக்கையிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

HIV தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவோ அல்லது முழுமையாக மீள்வதற்கோ இன்னமும் தடுப்புமருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்ற போதும் உயிரியல் விஞ்ஞானிகள் அதற்கான தீர்வை நோக்கி வேகமாக பயணித்து வருகிறார்கள். HIV யை எதிர்க்கும் திறன் கொண்ட, நோய் எதிர்ப்பாற்றல் குருதியணுக்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரபல நோபல் பரிசுபெற்ற மருத்துவவியலாளர் டேவிட் பல்டிமோர் தமது பரிசோதனைகளை எலிகளில் நிகழ்த்தியபோது அனுகூல முடிவுகள் பெறப்பட்டதாக கூறுகிறார்.

ஆண்விருத்தி சேதனமானது HIV நோய்த் தொற்று அபாயத்தை அறுபது சதவிகிதம் குறைக்கின்றது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த நடவடிக்கையை ஆதரிக்கும் போக்கு மற்றும் கருத்து சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்குமென்றாலும் இது பல நாடுகளில் உத்வேகத்துடன் பரிந்துரைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நோய்த் தடுப்பு யுத்திகள் நன்கறியப்பட்டுள்ள போதிலும் கணிசளவு இளைஞர்கள் HIV எய்ட்ஸ் பற்றிய அறிவை பெற்றிருந்த போதிலும் தாங்கள் HIV தொற்றுதலுக்காளாகும் அபாயத்தைக் குறைவாக மதிப்பிட்டு பேராபத்து விளைவிக்கும் நடவடிக்கைளில் இறங்குகின்றனர். வாழ்க்கையில் வழிகெடுவதற்கான வாய்ப்புகள் இன்று தாராளமயப்படுத்தப்படுவதால் ஆபத்தான நிலையை இலங்கை மக்கள் எதிர்நோக்குகின்றனர். இலங்கை பாரம்பரிய மற்றும் மதக் கலாசாரங்களுக்கு கட்டுப்பட்டுள்ள மக்களைக் கொண்ட நாடு என்ற வகையில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எயிட்ஸ் பரவுதல் குறைவாகக் காணப்பட்டது. ஆனால், HIV தொற்றின் அண்மைக் கால அதிகரிப்பு இலங்கை தனது பாரம்பரியங்களிலிருந்து மெல்லத் தூரமாகச் செல்வதாகத்தான் உணர வேண்டியுள்ளது.

பாலியல் தொழிலாலும் ஓரினச் சேர்க்கையாலும் எய்ட்ஸ் நோய் பரவுகிறது. பாலியல் தொழிலைக் கட்டுப்படுத்த வேண்டிய எமது அரசு இன்று கசினோக்களை அறிமுகப்படுத்தி விபச்சார கேளிக்கைகளுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்த முனைவது கவலைக்குரிய விடயமாகும். இது எய்ட்ஸ் நோய் பரவும் வாய்ப்பை இன்னும் அதிகப்படுத்தும். பாலியல் தொழிலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எய்ட்ஸ் நோய் இல்லாத மனித சமுதாயத்தை உருவாக்கலாம். இதற்கான பொறுப்பு இந்நாட்டில் ஒவ்வொருவருக்குமுள்ளது.

எம்.எப்.எம். இக்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஒஸ்மானியா கல்லூரியின் பொன்விழா

1959 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி டி.பி. ஜாயா அவர்களால் யாழ் ஒஸ்மானியா கல்லூரிக்கான அடிக்கல் நடப்பட்டு வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலை உருவாக்கத்தில் தனவந்தரான வி.எம்.எம்.எஸ். அப்துல் காதர் ஹாஜியார், முன்னாள் யாழ். மாநகர மேயரும் வழக்கறிஞருமான ஏ.எம். சுல்தான், கிராம விதானையார் எஸ்.ஏ. றஸீன் ஆகியோர் அயராது பாடுபட்டனர்.

1963 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் இக்கல்லூரியை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தார். இதன்போது பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் இஸ்லாத்தின் மூன்றாம் கலீபாவாகிய உஸ்மான் (ரழியல் லாஹூ அன்ஹூ) அவர்களை நினைவுபடுத்தி ஒஸ்மானியா கல்லூரி என்ற நாமத்தை சூட்டினார். அன்றிலிருந்து இன்றுவரை இக்கல்லூரி ஒஸ்மானியா கல்லூரி என்ற பெயருடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

இக்கல்லூரிக்கு சீ.எம்.ஏ. ஜிப்ரி அவர்கள் முதலாவது அதிபராக பதவி வகித்தார். இவருடன் ஆசாரியஸ் பொன்னாந்து, பொ. சிவஞான சுந்தரம், எஸ். ஸ்ரீ தர்ம நாதன், எம்.யூ.ஏ. தையும், எம்.ஐ. எம். சாபி, எம்.ஸீ. சலீம் ஆகியோரும் ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். கல்லூரி கீதத்தை கவித்துவ புலமை மிக்க ஆசிரியர் ஆசாரியஸ் பொன்னாந்து அவர்கள் இதமாக இயற்றிக் கொடுத்தார்கள். இந்தியாவின் தேசிய கீத மெட்டிற்கு அமைவாக இக் கல்லூரி கீதம் அமைக்கப்பட்டது.

01.02.1964 இல் எம்.எம். யூஸுப் அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். இவரின் பதவிக் காலத்தில் பல முக்கிய விடயங்கள் இடம்பெற்றன. குறிப்பாக, பச்சையும் வெள்ளையும் கலந்த கல்லூரி கொடி அறிமுகமும் ஒ.எஸ். எம்.ஏ. கபூர் ஆசிரியரால் கல்லூரியின் இலச்சினையும் வரைவாக்கம் செய்யப்பட்டன. விளையாட்டு வளர்ச்சியை கருத்திற்கொண்டு இல்லங்கள் உருவாக்கப்பட்டன. மேலும், எம்.எம். அப்துல் குத்தூஸ் ஏ.எச். ஹாமீம் எம்.ஏ.ஆர்.ஏ. றஹீம் ஆகியோர் அதிபர்களாக சேவையாற்றி கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தனர்.

1990 - 2003 ஆம் ஆண்டுவரை நாட்டின் அசாதாரண நிலைமை காரணமாக ஒஸ்மானியா கல்லூரி மூடப்பட்டிருந்தது கவலைக்குரிய விடயமாகும்.

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால்
யாழ்ப்பாணம்

22.09.2003 ஆம் திகதி எம்.எஸ்.ஏ.எம். முபாரக் மௌலவி அவர்கள் அதிபராக பதவியேற்றார். ஒஸ்மானியா கல்லூரியானது பொன்விழா காணும் இச் சந்தர்ப்பத்தில் அதிபர் முபாரக் அவர்களின் ஆலோசனையின் பேரிலும் யாழ் மாநகர சபை பிரதி மேயர் சட்டத்தரணி எம்.எம். ரமீஸ் அவர்களின் முயற்சியாலும் யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் முதன் முதலாக பெண்களுக்கான அல்ஹம்தியா மகளிர் அரபுக்கல்லூரி கடந்த 25.10.2013 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இவ் அரபுக்கல்லூரியில் யாழ் ஒஸ்மானியா கல்லூரியின் மாணவிகளுக்கு மாலைநேர வகுப்பும் ஏனையவர்களுக்கு பகல்நேர வகுப்பும் நடைபெறுகிறன.

யாழ் ஒஸ்மானியா கல்லூரியின் பொன்விழா நிகழ்வு இம் மாதம் 6,7,8, ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது. மாணவர்களின் கலை நிகழ்ச்சி, கல்விக் கண்காட்சி, பொன்விழா மலர் வெளியீடு, கௌரவிப்பு நிகழ்வு, பழைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கல்விக் கண்காட்சியின் ஓர் அங்கமாக யாழ். முஸ்லிம்களின் ஆரம்பகால வரலாறு, மூதாதையர் புகைப்படங்கள், சரித்திர குறிப்புகள், கல்வெட்டுக்கள் போன்றவையு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

# பேனா பதிப்பகம் வழங்கும் பேனா கலை இலக்கிய விருது - 2013

பேனா பதிப்பகம் அதன் செயற்பாட்டாளர்களுடன் இணைந்து 2013 முதல் ஆண்டு தோறும் ஈழம் மற்றும் புலம்பெயர் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம் பேனா கலை இலக்கிய விருதை அறிமுகப்படுத்துகிறது. இதன் அடிப்படையில் 2013 இல் வெளிவந்த சிறுகதை, கவிதை, நாவல், சிறுவர் இலக்கியம் போன்ற சிறந்த நூல்களுக்கும் மற்றும் உயர் கலை இலக்கிய விருது என ஆறு விருதுகளை வருடம் தோறும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளன. இவ்வருட விருதுக்காக 2013 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான நூல்களை படைப்பாளிகள் அனுப்பிவைக்கலாம்.

சிறுகதை: எழுத்தாளர் கலாபூஷணம் ஏ. எம்.எம். அலி பேனா விருது. (சிறந்த நூல் பணப் பரிசு 5000 ரூபா) நான்கு நூல்களுக்கு சிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கவிதை: கிண்ணியா அண்ணல் (சாலிஹ்) பேனா விருது. (சிறந்த நூல் பணப் பரிசு 5000 ரூபா) நான்கு நூல்களுக்கு சிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

நாவல்: எழுத்தாளர் ஏ.சீ. ஜரீனா முஸ்தபா பேனா விருது. (சிறந்த நூல் பணப் பரிசு 5000 ரூபா) நான்கு நூல்களுக்கு சிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சிறுவர் இலக்கியம்: இலக்கிய ஆர்வலர் பதிஸ் பாரூக் பேனா விருது. (சிறந்த நூல் பணப் பரிசு 5000 ரூபா) நான்கு நூல்களுக்கு சிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

வாழ்நாள் சாதனையாளர் உயர் கலை இலக்கிய விருது, அஹமது லெப்பை மஹ்மூதுலெப்பை பேனா விருது (பணப் பரிசு 6000 ரூபா)

சாதனையாளர் பேனா உயர் கலை இலக்கிய விருது, எழுத்தாளர் தர்மினி பத்மநாதன் பேனா விருது. (பணப் பரிசு 6000 ரூபா)

போட்டி நிபந்தனைகள்:

- ஈழம் மற்றும் புலம்பெயர் படைப்பாளிகள் இப்போட்டியில் பங்குபெறலாம்.

- போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புகள் தனது சொந்த படைப்பாக இருத்தல் வேண்டும்

- போட்டிக்காக நூல்களில் இரு பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும்.

- நூல்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2014 பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னர்.

தொடர்புக்கு: பேனா கலை இலக்கிய விருது - 2013
செயலாளர்,
பேனா பதிப்பகம்,
92/4 உமர் ரழி வீதி,
மஹ்ரூப் நகர்,
கிண்ணியா - 03,
இலங்கை.

கை பேசி:
+9477 93 00 397,
+9477 67 51 510


# துணுக்குச் செய்திகள்

தொகுப்பு: எஸ்.எம். அர்ஷத்தீன்



இந்த வருடத்தின் இந்திரா காந்தி அமைதிக்கான விருதுக்கு ஜேர்மன் அதிபர் எங்கலா மேர்க்கல் தெரிவாகியுள்ளார். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான குழுவினர் இந்த விருது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். சர்வதேச நிதி நெருக்கடியின்போது, ஐரோப்பிய வலயத்தில் அங்கலா மேர்க்கல் வகித்த தலைமைத்துவ பொறுப்புக்கு பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படவுள்ளது. அத்துடன் ஜேர்மனியின் பொருளாதார வளர்ச்சியில் அவர் பாரிய பங்கு வகித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் ஜேர்மன் அதிபர் ஏனைய நாடுகளுடன் நட்புறவின் அடிப்படையில் பழகிவருவதாலும் இந்த விருது அவருக்கு பொருத்தமானது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

2015ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 24ஆவது பொதுநலவாய மாநாடு தென் ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான மோல்டாவில் நடத்துவதற்கு அண்மையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த மாநாடு மொரீசியஸில் நடத்துவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மொரீசியஸ் பிரதமர் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டை புறக்கணித்ததுடன் அடுத்த மாநாட்டை தனது நாட்டில் நடத்தமாட்டேன் என்றும் அறிவித்திருந்தார். இதனையடுத்தே அடுத்த பொதுநலவாய மாநாடு மோல்டாவில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.




கிரிக்கெட் உலகில் மாஸ்டர் பிளாஸ்டர், லிட்டில் மாஸ்டர் என்று வர்ணிக்கப்பட்ட இந்திய கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்காரின் சாதனை நிறைந்த கிரிக்கெட் பயணம் நவம்பர் 16, 2013 அன்று முடிவுக்கு வந்தது. அதேவேளை இந்திய அரசு அவரை கௌரவிக்கும் வகையில் உயர் விருதான பாரதரத்னா விருதை அறிவித்துள்ளது. சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற சாதனைக்குச் சொந்தமான சச்சின், மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான 2ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார். 1973ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் திகதி மும்பையில் பிறந்த ரமேஸ் சச்சின் டெண்டுல்கார் தனது 11 ஆவது வயதில் கிரிக்கெட் விளையாட ஆரம்பித்தார். 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தனது 16 ஆவது வயதில் பாகிஸ்தான் அணிக்கெதிராக தனது சர்வதேச போட்டி அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார். 24 வருடகால கிரிக்கெட்டில் 100 சதங்களைப் பெற்ற ஒரே ஒரு வீரர் என்ற மைல்கல்லை எட்டியுள்ள சச்சின் டெண்டுல்கார், சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சதத்தைப் பெற்ற முதலாவது வீரராவார்.

மனிதர்களின் முழங்கால் பகுதியில் முன்னெப்போதும் அறியப்படாத தசைநார் ஒன்று காணப்படுவதை கண்டறிந்துள்ளதாக பெல்ஜியத்தின் முழங்கால் மருத்துவ நிபுணர்கள் அறிவித்திருக்கின்றனர். தொடை எலும்புக்கு மேற்புறத்திலிருந்து முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் இடைப்பட்ட முன்னங்கால் வரையான பகுதிவரை இந்த தசைநார் அமைந்துள்ளதாக மருத்துவர் க்ளஸ் மற்றும் பேராசிரியர் ஜோஹன் பெல்லெமன்ஸ் ஆகிய மருத்துவ நிபுணர்கள் இருவரும் கண்டறிந்துள்ளனர். நாம் நடந்து செல்லும் போது திடீரென்று திசைமாற்றி கால்களை திருப்பி நகர்த்தும்போது இந்த தசைநார்கள்தான் கால்களுக்கான பாதுகாப்பு அரணாக அமைவதாக இவர்கள் கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பட்ஜட்



## வெறும் கணக்கறிக்கை மட்டுமே



எம்.எச்.எம். ஹஸன்

முப்பதாண்டு கால சிவில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போது பாதுகாப்புச் செலவு குறைவதால் அவ் வொதுக்கீடு நாட்டின் அபிவிருத்திக்கு பயன் படுத்தப்படும் என்று அரசாங்கம் கூறியது. ஆனால் யுத்தம் முடிந்து 5 ஆவது வரவு-செலவு திட்டத்தை முன்வைத்த போதும் பாதுகாப்புச் செலவு குறையவில்லை, மாறாக கூடியிருக்கிறது. அபிவிருத்திக்கு அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டின் கல்விக்கு தேசிய வருமானத்தில் ஐந்து சதவீதத்தையாவது ஒதுக்கவேண்டும் என்று அனைத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தினாலும் அவ்வாறு செய்யப்பட வில்லை.

ஆசியாவின் ஆச்சரியமாக நாடு மாற்றப் படும் என்ற நற்செய்தி நாட்டு மக்களுக்கு கூறப்பட்டது. இன்று கஸினோ, மதுபானம், ஹெரோயின், ஊழல், மோசடி, இலஞ்சம் நிறைந்த நாடாக மாறியுள்ளதாக வரவு-செலவு திட்ட விவாதத்தில் பங்குகொண்டு பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார். வீதி அபி விருத்தி, கீழ்க்கட்டமைப்பு அபிவிருத்தி நடைபெற்றாலும் கடன்பளு குறைய வில்லை, விலைவாசிகள் குறையவில்லை. தலாவருமானம் அதிகரித்ததாக மத்திய வங்கி கூறினாலும் மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரிக்கவில்லை. ஏழை-பணக்கார இடைவெளி அதிகரிக்கச் செய்கிறது. பஸ் கட்டணங்கள் உட்பட அத்தியவசியப் பொருட்களின் விலைகள் வெகுவாக அதி கரிக்கப்பட்டுள்ளன. அரச ஊழியர்களுக்கு போதிய சம்பள அதிகரிப்பு வழங்கவில்லை. ஒரு நாளைக்கு 40 ரூபா என்ற மிகக் குறைந்த தொகையாகவே அதிகரிக்கப்பட் டுள்ளது. நான்கு பேருள்ள குடும்பத்துக்கு ஒரு நாளைக்கு ஒருவருக்கு பத்து ரூபா அதி கரித்து, என்ன செய்ய முடியும் என்று கேள்வி எழும்புகின்றது. ஓய்வூதியம் பெறுபவருக்கு ஒரு நாளைக்கு வெறும் பத்து ரூபாய்தான் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடனில் தங்கியுள்ளது. அர சாங்க உள்நாட்டு வங்கிகள் கடன் பெறுவ தால் தனியார் கடன்பெறும் வாய்ப்பு குறைந்துள்ளது. வட்டியைக் குறைப்பதால் மக்களின் சேமிப்பு வருமானம் குறைந் துள்ளது. வங்கிகள் இப்போதெல்லாம் தனி யாருக்கு கடன் கொடுப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. அரசாங்கமே மிகப் பெரிய கடன் பெறுநராக இருப்பதால் இந் நிலமை நீடிக்கிறது. நாட்டின் கடன் தொகையை புள்ளிவிபரமாக பார்த்தால் மாரடைப்பு வந்துவிடும். ஒரு பில்லியன் என்பது 100 கோடி ரூபா, ஒரு ட்ரிலியன் என்பது 1000 பில்லியன். யுத்தம் நடை பெறும் காலத்தில் இலங்கையில் கடன் சுமை (2003- 2008) 1.72 ட்ரிலியன்களாக இருந்துள்ளது. யுத்தம் முடிவில் மேலும் 3 ட்ரிலியன்களாக அதிகரித்து, இப்போது (2013) உள்நாட்டு கடனாக 6.83 ட்ரிலியன் ரூபாவும் வெளிநாட்டுக் கடனாக 3 ட்ரிலியன்ரூபாவும் செலுத்த வேண்டியுள்ளன. யுத்தம் முடிவடைந்தாலும் கடன் குறைவ தற்கு பதிலாக மென்மேலும் அதிகரித்த போது இதற்கான பிதான காரணமாகக் கூறப்படுவது, கடன் பணம் மீள்வருமானம் பெறும் அபிவிருத்தியில் பயன்படுத்தப்பட வில்லை என்பதாகும். இக்கடன் தொகை யில் பெருமளவு அபிவிருத்திக் கடனாக அன்றி, அதிக வட்டியிலான வர்த்தக கடன் (Commercial loan) என்பதும் குறிப்பிடத் தக்கது. கடனையும் வட்டியையும் குறுகிய காலத்தில் திருப்பி செலுத்தக்கூடிய வரு மானம் குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டங் களினூடகக் கிடைக்காமையும் பிரச்சி னைக்குரிய மற்றுமொரு காரணமாகும். அண்மைக் கால கடனின் வட்டியை சீனா தன்னிச் சையாக அதிகரித்ததாலும் புதிய நெருக்கடி களுக்குக் காரணமாய் அமைந்துள்ளது.

பல அத்தியவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கும் நிலை தோற்றுவிக்கப் பட்டதற்கு அவற்றின் மீது வரி விதிக்கப் பட்டமையே காரணமாகும். அத்தியவசிய உணவுப் பொருட்களான சீனி, நெத்தலி, டின்மீன், பயறு, கடலை, மாசி, கருவாடு, நிலக்கடலை, சீரகம், பெருஞ்சீரகம், மஞ்சள், கொத்தமல்லி, மரக்கறி எண்ணெய், சீஸ், மாஜரீன், பட்டர், யோகட் போன்ற பொருட்களின் விலை அதிகரிக்கும் என்று இறக்குமதி நிறுவனங்கள் எதிர்வுகூறியுள் ளன. சீனிக்கான இறக்குமதி வரி 27 ரூபா விலிருந்து 30 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது. கருவாடு 27 ரூபாவாலும் நெத்தலி 16 ரூபாவாலும் மாசி 27 ரூபா வாலும் மரக்கறி எண்ணெய் ஒரு லீற்றர் 10 ரூபாவாலும் ஏனைய பொருட்கள் குறைந்த பட்சம் இரண்டு ரூபாவாலும் அதிகரிக்கப் படும் என்று அவர்கள் கணிப்பிட்டுக் கூறியுள்ளனர். இதனைவிட வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பழ வகைகளின் வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளாக அதன் இறக்குமதியாளர்கள் கூறுகின்றனர். இதன்படி பெயாஸ், காய்ந்த திராட்சை போன்றவற்றின் விலை கிலோ 120 ரூபா வினால் அதிகரிக்கும். எனினும், தோடம் பழத்தின் விலையும் ஐந்து ரூபாவினால் அதிகரிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள் ளது. அப்பிள், திராட்சை போன்ற வற்றில் மாற்றமில்லை என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.




**அரசாங்க உள்நாட்டு வங்கிகள் கடன் பெறுவதால் தனியார் கடன்பெறும் வாய்ப்பு குறைந்துள்ளது.**

வாகனத்தின் விலை மீண்டும் அதிகரிக் கும் நிலை ஏற்பட்டுள்ளது. பாவித்த வாகன இறக்குமதி வரி 25 வீதத்தினால் அதிகரிக்கப் பட்டுள்ளது. பாவிக்கப்பட்ட வாகனங்கள் இறக்குமதியின்போது கையாளப்பட்ட தேய்வுப்பெறுமான வரிமுறை நீக்கப்பட் டுள்ளமையால் உள்நாட்டு வாகனச் சந்தை மோசமாக வீழ்ச்சியடையும் ஆபத்து இருப்ப தாக வாகன இறக்குமதியாளர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. கொழும்பில் நடந்த ஊடக சந்திப்பில் வாகன இறக்குமதி சங்கத் தலைவர் மஹிந்த சரத்சந்திர இதனைத் தெரிவித்தார். புதிய ஏற்பாட்டின் படி பாவித்த வாகன இறக்குமதியின்போது அதன் பாவனைக்கான தேய்வுப் பெறுமானம் கணக்கிலெடுக்கப்படாது புதிய வாகன மாகக் கருதியே பெறுமான வரி விதிக்கப் படும் என்றும் அவர் கூறினார். அதனால் brand new ஆகவே கருதி வரிவிதிக்கப்படும். ஏலவே ஆறுமாதங்கள் பாவித்த வாகனங் களுக்கு அதன் வரிப் பெறுமானத்தில் 90 வீதம், ஒரு வருடத்துக்கு 80 வீதம், ஒன்றரை வருடத்துக்கு 75 வீதம் வரி என்ற நடை முறை பின்பற்றப்பட்டது. புதிய முறையில் 12 முதல் 24 மாதங்கள் வரை ஒரே அல காகக்கொண்டு வரிப் பெறுமானத்தில் 90 வீதம் என்ற நடைமுறை ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதனால் இறக்குமதி செய்யப் படும் கார்களின் விலை 3 முதல் 5 இலட் சங்களும் வானின் விலை 15 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கும் என்று அவர் விளக்கமளித்துள்ளார். இது மிகவும் அநி யாயம். எனினும், வாகன விற்பனை நிலை யங்கள் 1000 அளவு இந்நாட்டில் இயங்கு கிறது. 10000 பேர் வேலைவாய்ப்பு பெற் றுள்ளதால் இவையனைத்தும் மூடப்படும் ஆபத்து இருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். புதிய வாகனத்தை விற்கும் நிலையங்கள் 12 மட்டுமே காணப்படு வதாகவும் அவர்களுக்கு நன்மையேற்படும் விதத்திலேயே செலவுத்திட்ட யோசனை காணப்படுவதாகவும் அவர் சாடியுள்ளார். இதுபற்றி ஜனாதிபதியிடம் சந்தித்து பேச வுள்ளதாகவும் சங்கத்தினர் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழி பெயர்ப்புத் தொடர்

(தொடர் 28)

இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்) தன்னுடைய அர்ரிஸாலா என்ற புத்தகத்தில் 'பாபுல் இலல்' யின் இறுதியில் வெளியூரிலிருந்து மக்கள் கூட்டமொன்று வந்திருந்த காரணத்திற்காகவே உழ்ஹிய்யா இறைச்சியை சேமிப்பதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தடுத்தார்கள் என்பதை உறுதியாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனை பின்வரும் சம்பவமும் உறுதி செய்கிறது: பெருநாள் தினமொன்றில் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மக்களுக்கு தொழுகை நடத்தினார். பின்னர் அவர்களுக்கு குத்பாப் பிரசங்கம் செய்தார். அப்போது அவர், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது தடையுத்தரவை நினைவூட்டி, மூன்று நாட்களுக்கு மேல் உழ்ஹிய்யா இறைச்சியை சேமிக்க வேண்டாம் என தடுத்தார். தடையுத்தரவு நஸ்க் செய்யப்பட்டுவிட்டது என்று கூறுவோர் அலி (ரழியல்லாஹு அன்ஹு) வின் இச்செயலைக் கண்டு தடுமாற்றம் அடைந்துள்ளனர். நஸ்க் செய்யப்பட்ட விடயம் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை எட்டவில்லை என அவர்களில் சிலர் கூறுகின்றனர். ஆனால், சேமிப்பை ஆகுமாக்கிய விடயம் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு எட்டியிருந்தது என்பதை காட்டக்கூடிய அறிவிப்புகளை இமாம் அஹ்மத் பதிவு செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே, அலி (ரழியல்லாஹு அன்ஹு) மக்களுக்கு உழ்ஹிய்யா இறைச்சி தேவைப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அப்படிக் கூறினார்கள் என்பதுவே ஏற்புடைய சிறந்த கருத்தாகக் கொள்ளப்படுகின்றது. இப்னு ஹஸ்மும் இக்கருத்தையே பத்ஹுல்லாஹ் பாரியில் வந்துள்ளவாறு உறுதிபடக் கூறியுள்ளார்.

> **நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது இத்தடையுத்தரவை மக்கள் விவகாரங்களுக்கு பொறுப்பான தலைவரின் நடவடிக்கையாகவும் அப்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு எடுக்கப்பட்ட அரசியல் தீர்வாகவும் அவர்கள் நோக்கியிருந்தால், தமது கருத்துச் சிக்கல்களிலிருந்து அவர்களுக்கு விடுதலை பெற்றிருக்க முடியும்.**

அப்போதைய நிலைமையை கருத்திற்கொண்டே மூன்று நாட்களுக்கு மேல் சேமிக்க வேண்டாம் என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நாட்களை வரையறுத்தார்கள். உழ்ஹிய்யா இறைச்சியை முழுமையாக பகிர்ந்தளித்தால் மாத்திரமே அப்போதைய தேவையை (உதாரணத்திற்கு) நிறைவுசெய்ய முடியுமாக இருந்திருப்பின் ஓரிரவுகூட அவற்றை சேமிப்பதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அனுமதியளித்திருக்கமாட்டார்கள் என ஹாபிழ் இப்னு ஹஜர் பத்ஹுல் பாரியில் கூறுகின்றார்.

ஷாபிஈக்களில் சிலரை ஆதாரங்காட்டி அர்ராபிஈ பின்வருமாறு கூறுகின்றார்: குறிப்பிட்ட ஒரு காரணத்திற்காகவே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உழ்ஹிய்யா இறைச்சியை சேமிப்பதைத் தடுத்தார்கள். அக்காரணம் நீங்கிய வேளை சட்டமும் நீங்கியது. ஆனால், அக்காரணம் திரும்ப நிகழ்ந்தால் சட்டமும் மீள அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது அவசியமில்லை. ஹாபிழ் இப்னு ஹஜர் பத்ஹுல் பாரியுல் இக்கருத்துக்கு ஆதரவாகப் பேசியிருந்த போதிலும் சில அறிஞர்கள் இதனை பொருத்தமற்ற கருத்தாகவே நோக்குகின்றனர்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது இத்தடையுத்தரவை மக்கள் விவகாரங்களுக்கு பொறுப்பான தலைவரின் நடவடிக்கையாகவும் அப்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு எடுக்கப்பட்ட அரசியல் தீர்வாகவும் அவர்கள் நோக்கியிருந்தால், தமது கருத்துச் சிக்கல்களிலிருந்து அவர்களுக்கு விடுதலை பெற்றிருக்க முடியும். அனுமதிக்கப்பட்ட (முபாஹ்) ஒன்றை வரையறை செய்ததையும் சந்தர்ப்பத்தைக் கருத்திற்கொண்டு பிறருக்கு உதவி செய்வதை கடமையாக்கியதைத் தவிர அதில் பெரிதாக வேறொன்றுமில்லை. அல்லாஹ்வின் அருளால் அவ்விடயத்தில் சிக்கலேதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இமாம் ஷாபிஈ தனது அர்ரிஸாலா என்ற புத்தகத்தில் உழ்ஹிய்யா இறைச்சியை சேமிப்பதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தடைசெய்ததையும் பின்னர் அனுமதித்தது (முரண்பாடான ஹதீஸ்கள்) தொடர்பாகவும் பேசியுள்ள விடயங்களுக்கு பின்னிணைப்பாக பேரறிஞர் அஹ்மத் ஷாக்கிர் ரிஸாலா குறித்த திறனாய்வில் அறிவார்த்தமான, தெளிவான கருத்துக்களை முன்வைத்திருப்பதை என்னால் கண்டுகொள்ள முடியுமாகவிருந்தது. அவர் கூறுகின்றார்: இது குறித்து ஷாபிஈ தீர்க்கமான கருத்து எதனையும் முன்வைக்காதிருந்ததை உங்களால் அவதானிக்க முடியுமாக இருந்திருக்கும். ஹதீஸ் நஸ்க் செய்யப்பட்டுள்ளது என ஒருமுறை கூறுகின்றார். இத்தடையுத்தரவு மக்களின் தெரிவுக்கு விடப்பட்டிருந்தது. அவர்கள் மீது கடமையாக்கப்படவில்லை என அடுத்த தடவை கூறுகின்றார். நபியவர்கள் தடுத்தார்கள் என்ற விடயம் உறுதிசெய்யப்பட்ட போதிலும் ஏதோ ஒரு காரணத்திற்காகவே அப்படிச் செய்தார்கள் எனப் புலப்படுவதாக மூன்றாவது தடவை கூறியுள்ளார். வெளியூர்வாசிகள் விருந்தினராக வந்திருந்த காரணத்திற்காகவே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மூன்று நாட்களுக்கு மேல் உழ்ஹிய்யா இறைச்சியை சேமிக்க வேண்டாம் எனத் தடுத்தார்கள் என்பதையே நான் மிகச் சிறந்த கருத்தாகக் கருதுகின்றேன். அது மக்கள் நலனை கருத்திற்கொண்டு தலைவர் என்றவகையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையாகும். மாற்றமாக, அது பொதுவிவகாரத்தில் மேற்கொள்ளப்பட்ட நிரந்தரமான சட்டவாக்கமல்ல.

---

# பூமியும் இயற்கையின் சமநிலைத் தன்மையும்

ஆலிப் அலி (இஸ்லாஹி)
aalifali@gmail.com /www.aliaalif.tk


சென்ற இதழ் தொடர்

ஆனால், இது இவ்வாறு நடக்காமல் சிலந்திகள் அவற்றின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துகின்றன.

கொசுக்களைப் போன்றுள்ள லட்சக் கணக்கான பூச்சிகளை சிலந்திகள் கொன்று தின்கின்றன. குறிப்பாக, ஒரு பெண் சிலந்தி தன்னுடைய வாழ்நாளில் 250 கொசுக்களையும் 33 பழப் பூச்சிகளையும் கொன்று தின்கின்றதாம். மேலும் வேறுவகை சிறு பூச்சிகள் அதன் இனத்தையே உண்டு வாழ்கின்றன. இந்த பூச்சிகள் அதன் இனத்தை சாப்பிடுவதை நிறுத்திவிட்டால் ஒரு வருடத்தில் இயற்கையே நடுநிலை தடுமாறிவிடும். அவை தாவரங்களை மட்டுமே சாப்பிட வேண்டும் என்ற நிலையேற்பட்டால் அதன் ஓர் இனப்பெருக்க காலத்திலேயே தாவர வர்க்கத்தையே இந்த பூமியிலிருந்து அழித்துவிடும். அங்கும் மிக அருமையான முறையில் இயற்கை சமநிலைப்படுத்தப்படுகின்றது.

இதுபோன்று ஆயிரம் ஆயிரம் பூச்சிகள் மற்ற பூச்சி இனங்களை தின்று அதை பெருக விடாமல் இயற்கை சமநிலையை சரி செய்கின்றன. இருப்பினும் அந்த இனம் முழுமையாக அழிந்துவிடாமல் அந்த இனங்களே தற்காத்துக் கொள்கின்றன. அல்லது அதை சாப்பிடும் இனங்கள் அந்த இனத்தை அழிவிலிருந்து பாதுகாக்க அதை வளரவிட்டு விடுகின்றன. இதுபோன்ற நிகழ்வு அனைத்து இடங்களிலும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

கடலில் வாழக்கூடிய முட்டை இடும் உயிரினங்களுள் அதிகமான முட்டையிடும் வகை மீனான oceans sunfish அதன் ஓர் இனப்பெருக்க காலத்தில் முப்பதுகோடி முட்டைகள் வரை இடும். அதேபோன்று ஒரு சிப்பியானது (oyster) அதன் வாழ்நாளில் 20 லட்சம் முட்டைகள் வரை இடும், அப்படி இருந்தும் கடலை மூடக்கூடிய அளவிற்கு மீன்கள் இல்லையே ஏன்? ஏனெனில், அந்த மீன்களை உணவாக்குகின்ற மற்ற மீன்கள் இருக்கின்றன. அந்த வேறொரு இன மீன்கள் இந்த வகை மீன்களை அதன் எண்ணிக்கைக்கு மேல் அதிகமாகிவிடாமல் இருக்க சமநிலையைத் தக்கவைத்துக் கொள்கின்றன.



உயிரோடு இருக்கும்போது மட்டுமல்ல, ஒரு விலங்கோ அல்லது தாவரமோ இறந்த பின்பு அதை உண்பதற்காகவே சில பக்டீரியா (Bacteria), பங்கஸ் (Fungus) போன்ற நுண்ணுயிரிகளை இறைவன் உருவாக்கி வைத்திருக்கிறான். இவற்றை இயற்கையின் பாதுகாவலர்கள் என்றும் அழைப்பர். குறிப்பாக, Burying beetle என்ற வண்டு இனம் தொலைதூரத்தில் இறந்த விலங்குகளையும் அறிந்து உண்டு தீர்க்கக் கூடிய ஆற்றல் பெற்றுள்ளது. இதுபோன்று இன்னும் பல. இறந்த உயிரினங்களை இவை உண்ணவில்லை என்றால் இப்பூமியில் அடுத்த சந்ததிகள் வாழ்வதே இயலாத காரியமாக ஆயிருக்கும்.

தாவரங்களும் விலங்குகளும் மனிதனுடன் இணைந்து இயற்கையை நடுநிலைப்படுத்த காரணமாய் இருக்கின்றன. மனிதன் ஒக்சிசன் வாயுவை சுவாசித்து காபனீர் ஒக்சைட்டை வெளியிடுகிறான். ஆனால், தாவரங்களோ காபனீர் ஒக்சைட்டை உட்கொண்டு மனிதனுக்குத் தேவையான ஒக்சிசனை வெளியிடுகின்றன. அப்படியல்லாது அனைத்து தாவரங்களுக்கும் ஒக்சிசன் தான் வேண்டுமென்றால் உயிர்வாழ்வே சிதைந்திருக்கும்.


இறைவனின் படைப்புகள் அனைத்திலும் இந்த சமநிலைத் தன்மையைக் காணமுடியும். அவ்வாறுதான் அல்லாஹ் அனைத்தையும் படைத்திருப்பதாக அல்குர்ஆனில் (54:49) கூறுகின்றான். இவற்றை சரியான முறையில் பயன்படுத்தும் காலமெல்லாம் நம்மால் இயற்கைக்கு ஆதரவான நடுநிலைப்பாட்டை ஏற்படுத்த முடியும். இதை அலட்சியப்படுத்தும் போது அது இயற்கையாக அமையப்பெற்ற நடுநிலைத் தன்மையை சீர்குலைப்பதாகவும் எமக்கு சீர்கேடுகளை விளைவிப்பதாகவும் இருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-மலைஒளி

# முத்தையா முரளிதரனின் அரசியல் விளையாட்டு



இருபது முப்பது தாய்மார்கள் பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் செய்வதால் மட்டும் அது (காணாமற் போனோர், விதவைகள், அட்டூழியங்கள்) உண்மையாகிவிட முடியுமா? என்று ஆங்கிலத்தில் கேட்கிறார் முரளி.

பரபரப்பாகப் பேசப்பட்ட பொதுநலவாய உச்சி மாநாடு கொழும்பில் நடந்து முடிந்துவிட்டது. இதன் இலாப நஷ்டங்களை ஆய்வாளர்கள் சீர்தூக்கிப்பார்த்து வருகின்றனர். இந்த உச்சி மாநாட்டினால் எந்த இலாபமும் கிடையாது, மக்களுக்கு மென்மேலும் சுமைகள்தான் கிட்டப் போகின்றன என ஒரு சாராரும்; இல்லை, இல்லை பொருளாதார, முதலீடு ரீதியான இலாபங்கள் இலங்கையை வந்தடைய உள்ளன என இன்னொரு சாராரும் கூறிவருகின்றனர்.

கொழும்புவாசிகளோ, நகரின் சில பகுதிகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட அளவில் நன்மைகள் கிட்டியிருந்தாலும் இந்த செலவு எல்லாம் நம் தலையில்தான் ஏறப்போகிறது என்பதில் தெளிவாகவே இருக்கிறார்கள்.

சுமார் 400 வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இந்நாட்டுக்கு வந்ததில், உலகின் கவனம் இலங்கையின்பால் திரும்பும் என்றும் சுற்றுலாத்துறைக்கு இதனால் நன்மை கிடைக்கும் என்றும் அரசதரப்பில் சொல்லப்படுகிறது. தமிழ்த் தரப்போ, சுற்றுலாவுக்கு மட்டுமா வெளிச்சம் போடப்பட்டிருக்கிறது? தமிழ் மக்கள் படும்பாடுகளும் தமிழர் பிரச்சினைகளும் இந்த ஊடகங்களினால் உலக அரங்குக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன என்றளவில் நமக்கும் இலாபந்தான், பிரிட்டிஷ் பிரதமர் காட்டிய கோபமும் கறாரும் இலங்கையை புதிய சிக்கலுக்குள் மாட்டிவிட்டிருக்கிறது என்று மார்தட்டுகிறது.

இப்படியெல்லாம் நடந்து முடிந்திருக்க, அரசியல் தெரியாத ஒருவர் அரசியல் செய்யப்போய் இப்போது விழிபிதுங்கி நிக்கிறார். அவர்தான், என்றைக்குமே பெயரளவில் மட்டும் தன்னைத் தமிழனாகக் காட்டி வந்திருக்கின்ற முத்தையா முரளிதரன்.

கிரிக்கெட், திறமையுள்ளவர் கோடி கோடியாக சம்பாதிப்பதற்கான ஒரு களம். கண்டி லக்கிவேண்ட் முத்தையாவின் மகனான முரளிதரன் டி.பி. விஜேதுங்கவின் காலத்தில் அவரின் ஆசியுடன் தேசிய அரங்குக்குள் நுழைந்தார். தன் பந்துவீச்சுத் திறனால் உச்சத்தை எட்டினார்.

பொதுவாகவே தேசியமட்ட கிரிக்கெட் சிங்களமயமானது. தமிழர் ஒருவர் நுழைவதும் நீடித்து நிற்பதும் உச்சத்துக்கு போவதும் சிங்கள சமூக மற்றும் அரசியல் பிரமுகர்களால் விரும்பப்படுவதும் அசாத்தியமான விஷயங்கள். முத்தையா இவற்றை சாதித்துக் காட்டியது, அவரது சுழல் பந்து வீச்சுத் திறமையைவிடப் பெரிய சாதனையென்று தான் சொல்லவேண்டும்.

இதற்காக அவர் கொடுத்த விலை பெரியது. அதாவது, பெயரில் மட்டுமே இவர் தமிழனாக இருந்தார்; இருக்கிறார். இதற்கு மேல் தமிழனாக காட்டிக்கொண்டால் தான் தேசிய அணியில் நீடிக்க இயலாது, பணம் சம்பாதிக்கும் வாய்ப்பை இழக்க நேரிடும் என்பது இவரது நம்பிக்கையாக இருந்தது. எனவே, தமிழர்களுடன் பழகுவதைத் தவிர்த்தார். கண்டியில் தான் படித்த கல்லூரிக்கு செல்வதையும் தவிர்த்தார். தமிழ்ப் பத்திரிகைகளுடன் பேசுவதைத் தவிர்த்தார். மொத்தத்தில் தமிழ்ச் சமூகத்தில் இருந்து முற்றிலுமாக தன்னை தனிமைப் படுத்திக் கொண்டார்.

இத்தனைக்கும் காரணம், தன்னைத் தமிழனாக காட்டிக்கொண்டால் பணம் கொழிக்கும் கிரிக்கெட் குழுவிலிருந்து தன்னை நீக்கிவிடுவார்களோ என்ற அச்சம் மட்டுமே. அவர் தன்னைத் தமிழனாக காட்டிக்கொண்டது சென்னையின் செல்வந்தக் குடும்பத்தில் பெண்ணைத் திருமணம் செய்துகொண்ட போது மட்டுமே. அதுவும் இத்திருமணம் சென்னையில் நடைபெற்றதால் 'பயமின்றி' தமிழ் முறைப்படி முரளிதரன் திருமணம் செய்துகொண்டார் போலும்.

முஸ்லிம்களோடு ஒப்பிடும்போது பெரும்பாலான தமிழர்களுக்கு, குறிப்பாக படித்த நடுத்தர வர்க்கத்தினர், தன்மைத் தமிழர்களாக வெளிக்காட்டிக் கொள்வதில் தயக்கம் இருக்கவே செய்கிறது. இது காரணமாற்ற அச்சமென்றால் முரளியின் தயக்கம் அல்லது தவிர்த்தல் என்பது காரணத்துடன் கூடியது. மேலும், விளையாட்டுத்துறையில் கிரிக்கெட்டில் தமிழ்த் துவேஷ அரசியல் இருக்கிறது என்பதை பட்டவர்தனமாக ஒப்புக்கொள்வதாகவே முரளியின் செய்கை அமைந்திருக்கிறது. இது தனியாக ஆராயப்பட வேண்டிய விஷயம்.

தமிழன் என்று வரும்போது தனக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்றால் முரளி அதை எதிர்த்திருக்க வேண்டும். பல தமிழர்களைப்போல திராணி இல்லையென்றால் மௌனமாக இருந்து பணம் பண்ணிக்கொண்டு, இப்போது செய்திருப்பதைப்போல போயிருக்க வேண்டும். விளையாட்டுத்துறையில் அவர் நன்றாகவே திருக்க வேண்டும். வெளிப்படையாக தமிழ் அரசியல் பங்களிப்பு காணப்படவில்லை. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தமிழ்ப் பிரமுகர்களின் பங்களிப்பும் காணப்படவில்லை. இந்நிலையில் அரசு தெரிவு செய்த 'தமிழ்ப் பிரமுகர்' முரளி மட்டுமே.

பிரிட்டிஷ் பிரதமர் அவரை விளையாட்டுத் திடலில் சந்தித்துப் பேசினார். பொதுநலவாய மாநாட்டு மண்டபத்தில், விருந்து வைபவங்களில் அவர் காணப்பட்டார், கறிவேப்பிலைபோல செயற்பட்டார். கெமருன் யாழ். விஜயம் செய்த போதுதான் முரளி மாட்டிக்கொண்டார். கெமருனின் விஜயத்தின்போது நடைபெற்ற தாய்மார்களின் வீதி ஆர்ப்பாட்டத்தை விமர்சிக்கப்போய் தன் சாயத்தை வெளுக்க வைத்துக் கொண்டார் முரளி.

அரசியல் செய்திருக்கிறார். அதை அங்கேயே நிறுத்திக்கொண்டிருக்க வேண்டும். இவர் ஏன் தனக்கு தெரியாத அரசியலில் மூக்கை நுழைக்கிறார்?

பொதுநலவாய உச்சி மாநாட்டில் தமிழ் அரசியல்வாதிகளின் பங்களிப்பு இருக்கவில்லை. ஆறுமுகன் தொண்டமான் போன்றோர் பின்னணியில் ஒத்தாசையாக இருந்

தன்னிடம் அரை மணித்தியாலத்துக்கு மேல் பேட்டி காணப்பட்டதாகவும் ஆனால் வெட்டிக் கொத்தி சிறு பகுதி மட்டுமே ஒலி/ஒளிபரப்பப்பட்டதாகவும் இப்போது விளக்கம் சொல்கிறார் முரளி.

ஆர்ப்பாட்டம் செய்த தாய்மார்களை பற்றிக் குறிப்பிடுகை யில்: இருபது முப்பது தாய்மார்கள் பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் செய்வதால் மட்டும் அது (காணாமற் போனோர், விதவைகள், அட்டூழியங்கள்) உண்மையாகிவிட முடியுமா? என்று ஆங்கிலத்தில் கேட்கிறார் முரளி. பிரிட்டிஷ் பிரதமரின் யாழ். விஜயம் மற்றும் அவரின் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பேசும் போதே முரளி இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் பிரதமரின் நடவடிக்கைகள் தொடர்பாக அரசியல் களத்துக்கு வெளியே யாரும் வாய்திறக்கவில்லை. வாய்திறந்து பேசியவர், இவ்விடயத்தில் முன்னனுபவம் எதுவுமில்லாத முரளி மட்டுமே. நாட்டின் பிரஜை என்றளவில் கருத்துச்சொல்ல அவருக்கு உரிமை இருக்கிறது. ஆனால், இருபது முப்பது தாய்மார்கள் என்று கூறப் போய்த்தான் மாட்டிக்கொண்டார் முரளி. அவரது இக்கூற்றுக்கு மனோ கணேசன் கடுமையான கண்டனம் தெரிவிக்க, ஊடகங்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்தன. மனோ கணேசனின் அறிக்கையை சென்னை ஊடகங்கள் வெளியிட்டன. டுவிட்டர், பேஸ்புக் போன்ற சமூக இணையதளங்கள் முரளியின் கருத்துகளை உலகம் முழுவதும் ஊதிவிட்டன.

சென்னையின் மருமகனே என்று முரளியை ஆராதித்த தமிழக தமிழர்கள் இன்று தவறு செய்து விட்டோமோ என யோசிக்கிறார்கள். முரளிக்கு விளையாட்டு அரசியல் தெரியும். இலங்கை அரசியலும் உலகத் தமிழ் அரசியலும் அவருக்கு புரிபடாது தான். தன் குடும்பம், தன் செல்வம் என ஒரு குறுகிய வாழ்க்கை வாழும் செல்வச் செழிப்பில் மிதக்கும் உயர் மட்டங்களில் பழகும் முரளிதரன், பேசாமல் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

இந்தப் பேச்சு, தமிழ் மக்கள் மத்தியில் அவர் செல்வாக்கை பாதாளத்தில் தள்ளி விட்டது. அதே சமயம், சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கை உயர்த்திவிட்டிருக்கிறது. அரசுக்கு இன்னொரு தமிழர் கிடைத்திருக்கிறார். எனினும், இந்தப் பேச்சு அவர் எதிர்பார்க்கும் பல சாதகமான விஷயங்களை அள்ளித்தரலாம்.

வெற்றிலைச் சின்னத்தில் ஊவா அல்லது மேல் மாகாண தேர்தலில் நிறுத்தப்படுவதற்கான வாய்ப்பிருக்கிறது. நிறுத்தப்பட்டால் வெற்றி பெறுவதற்கான சூழலும் இருக்கிறது. அல்லது வெளிநாட்டுத் தூதராகும் வாய்ப்புமுள்ளது. உயர் பதவியொன்று வழங்கப்படலாம். அல்லது அவரோ, அவரது குடும்பமோ எதிர் நோக்கக்கூடிய சிக்கல்களிலிருந்தும் விடுவிக்கப்படலாம்.

இந்த வகையில் பார்த்தால், இவற்றில் ஏதேனுமொன்று கிட்டுமானால், அவர் தன் வழமையான சுயநல அரசியலை சரியாகவே செய்திருக்கிறார் என்று கொள்ளலாம். எனினும் தமிழர் மத்தியில் அவர் மற்றொரு முரளிதரன் மட்டுமே, என்றென்றும்! ■

இந்தப் பேச்சு, தமிழ் மக்கள் மத்தியில் அவர் செல்வாக்கை பாதாளத்தில் தள்ளிவிட்டது. அதே சமயம், சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கை உயர்த்திவிட்டிருக்கிறது. அரசுக்கு இன்னொரு தமிழர் கிடைத்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைவரினதும் கூட்டு முயற்சியுடன்தான்

# கல்முனை மாநகர சபையை அபிவிருத்தி செய்யவேண்டும்

கல்முனையை 21 ஆம் நூற்றாண்டை நோக்கி கொண்டுசெல்லும் திட்டம் என்னிடம் இருக்கிறது. இந்த பட்ஜட்டிலிருந்து ஒவ்வொன்றாக நான் நிறைவேற்றுவேன். இது தனி மனிதனின் கனவல்ல. ஒட்டுமொத்த மக்களினதும் தலைவர் அஷ்ரஃப் அவர்களதும் கனவாகும். அதை நிறைவேற்றுவதற்கு மாநகர சபையின் அனைத்து உறுப்பினர்களினதும் மு.கா. அங்கத்தவர்களினதும் ஒத்துழைப்பு எனக்குத் தேவை. அனைவரினதும் கூட்டு முயற்சியால்தான் கல்முனை மாநகர சபையை அபிவிருத்தி செய்யவேண்டும் என ஆசைப்படுகிறேன் என்றார் கல்முனை மாநகர சபையின் புதிய மேயரும் சிரேஷ்ட சட்டத்தரணியும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளருமான எம். நிசாம் காரியப்பர். எங்கள் தேசத்திற்கு அவர் வழங்கிய செவ்வியின்போதே இவ்வாறு தெரிவித்தார். அவருடன் இடம்பெற்ற நேர்காணலை வாசகர்களுக்குத் தருகிறோம்.



நேர்காணல்: ஏ. முஹம்மத் பாயிஸ்
படப்பிடிப்பு: ஷபீக் ஹுசைன்

*கேள்வி: கல்முனை மாநகர சபையின் புதிய மேயராக பதவியேற்றுள்ள உங்கள் மீது மக்கள் எவ்வகையான எதிர்ப்பார்ப்புகளைக் கொண்டுள்ளார்கள்?*

பதில்: மக்களுடைய எதிர்பார்ப்பானது, நான் தேர்தல் காலங்களில் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில்தான் இருக்க வேண்டும் என நம்புகிறேன். முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பையெடுத்தால் ஆட்சி எப்படி இருக்கவேண்டும் என்ற திட்டம் வாலிப காலத்திலிருந்து எனக்கிருக்கிறது. குர்ஆன், ஹதீஸ் அடிப்படையிலான கொள்கையில் உருவாக்கப்பட்ட கட்சி, அதற்கு ஆட்சிசெய்யக் கிடைக்கும் ஒரேயொரு சந்தர்ப்பம் இந்த கல்முனை மாநகர சபை மாத்திரம்தான். பல்லின மக்கள் வாழும் நாட்டில் நூற்றுக்கு நூறு வீதம் அக்கொள்கைகளைக் கொண்டுபோக முடியாது போனாலும், அடிப்படையில் அதற்கு முரணாக இருக்கக்கூடாது. முக்கியமாக, பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழும் அதிகார பிரதேசத்தில் எடுத்துக்காட்டான ஓர் ஆட்சி என்பதுதான் இங்கு அவசியம். இந்த மேயர் பொறுப்பை நான் அமானிதமாக கருதுகிறேன். இனவாதம், பிரதேசவாதம் என்ற விடயங்களுக்கு அப்பாற்சென்று நேர்மை, வெளிப்படைத்தன்மை என்ற அடிப்படையில் சேவை வழங்கப்பட வேண்டும் என்பதுதான் எனது கொள்கையாக இருக்கிறது.

*கேள்வி: கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில் நீங்கள் போட்டியிட்டபோது அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று சிராஸ் மீராசாஹிப் மேயரானார். விருப்பு வாக்கில் இரண்டாம் இடத்தைப் பெற்று நீங்கள் உதவி மேயரானீர்கள். அப்போது அந்த மக்கள் தெரிவு குறித்து உங்களது கருத்து என்ன?*

பதில்: சாய்ந்தமருது மக்களிடம் தங்கள் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் ஏன் மேயராகக்கூடாது என்ற எதிர்பார்ப்பு நீண்ட காலமாக இருந்துவந்தது. இதற்கு முக்கிய காரணம், அஷ்ரஃப் அவர்களின் காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கல்முனை பிரதேச சபையின் அதிகாரத்தை முதன்முதலாக கைப்பற்றியபோது மருதமுனையைச் சேர்ந்த ஹமீட் அவர்கள் நியமிக்கப்பட்டார். அதன் பிற்பாடு கல்முனையைச் சேர்ந்த பள்ளிக்காக்கா இருந்தார். கல்முனை மாநகர சபையாக உயர்த்திப் பட்டபோதும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் இருந்தார். அதன் பின்னர் மருதமுனையைச் சேர்ந்த மசூர் மௌலான இருந்தார். இந்தப் பின்னணியில் கணிசமான வாக்குகளுள்ள சாய்ந்தமருது மக்களுக்கு ஏன் இந்த கௌரவம் கொடுக்கப்படவில்லை என்ற ஏக்கம் சாய்ந்தமருது மக்களிடம் காணப்பட்டது. அந்த ஏக்கம் சாதகமாக பயன்படுத்தப்பட்டதால் அத்தேர்தலில் சிராஸ் மீராசாஹிப் அவர்களுக்கு கணிசமான வாக்குகள் கிடைத்தன.

இந்தப் பிரதேசவாதத்தை அரசியலுக்காகப் பயன்படுத்துவதை நான் விரும்புவதில்லை. கல்முனைக் குடியான், சாய்ந்தமருதான் என்ற பார்வை என்னிடம் ஒரு நாளும் இருக்கவில்லை. அரசியல் யதார்த்தம் அதற்கு மாறுபட்டதாயிருந்தது. அதனடிப்படையில் சாய்ந்தமருது மக்கள் குறைந்தபட்சம் எங்களுக்கு ஒரு முறையாவது அந்த முதல்வர் பதவி கொடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் வாக்களித்திருந்தார்கள். இதையெல்லாம் கருத்திற்கொண்டு கட்சியெடுத்த தீர்மானந்தான் ஆகக்கூடுதலான வாக்கைப்பெற்ற சாய்ந்தமருதைச் சேர்ந்த சிராஸ் மீராசாஹிபுக்கு முதலாவது இரண்டு வருடமும் மீதமான வருடங்களுக்கு நிசாம் காரியப்பரும் பதவிவகிக்க வேண்டும்என்பது. இதன் அடிப்படையில்தான் இந்த பதவியை நான் வகிக்கிறேன்.

**எல்லாப் பிரதேசங்களிலும் குறுகிய அரசியல் இலாபத்திற்காக ஒருசில நபர்கள் இயங்கித்தான் வருகிறார்கள். அவர்கள் நேரடியாகவே ஒரு பிரதேச வாதத்தை கிளப்பினால், தங்கள் மீது பழி வரும் என்பதற்காக அரசியலில் வரும் நெருக்கடிகளை தனக்கு சாதகமாக பயன்படுத்துகிறார்கள். இதற்கு குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பது என்று சொல்வார்கள். சாய்ந்தமருது பிரதேசத்தில் பிரதேசவாதத்தையும் கிளப்பி, தனியான பிரதேச சபை கேட்கிற அளவுக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள் என்றால் இது ஒரு சிலரின் குறுகிய அரசியல் சிந்தனை. உண்மையில், அவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் கொள்கைக்கு அப்பாட்பட்டவர்கள்.**

*கேள்வி: மாநகர சபைத் தேர்தலிலும் அண்மையில் ஏற்பட்ட மேயர் பதவி விடயத்திலும் பிரதேசவாதம் மேலோங்கியதாக அல்லது தூண்டப்பட்டதாக பலராலும் விமர்சிக்கப்பட்டது. இதற்கான பின்னணி என்ன? ஏன் இவ்வாறான நிலைமை ஏற்படுகிறது?*

பதில்: எல்லாப் பிரதேசங்களிலும் குறுகிய அரசியல் இலாபத்திற்காக ஒருசில நபர்கள் இயங்கித்தான் வருகிறார்கள். அவர்கள் நேரடியாகவே ஒரு பிரதேச வாதத்தை கிளப்பினால், தங்கள் மீது பழி வரும் என்பதற்காக அரசியலில் வரும் நெருக்கடிகளை தனக்கு சாதகமாக பயன்படுத்துகிறார்கள். இதற்கு குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பது என்று சொல்வார்கள். சாய்ந்தமருது பிரதேசத்தில் பிரதேசவாதத்தையும் கிளப்பி, தனியான பிரதேச சபை கேட்கிற அளவுக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள் என்றால் இது ஒரு சிலரின் குறுகிய அரசியல் சிந்தனை. உண்மையில், அவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் கொள்கைக்கு அப்பாட்பட்டவர்கள்.

எதிர்காலத்தில் இப்படி பிரதேச வாதங்களைக் கொண்டுவருபவர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் இடமளிக்கக்கூடாது என கட்சியின் தலைமைப்பீடத்துக்கு அடிக்கடி சொல்லிவருகிறேன். இந்தப் பிரதேச தூண்டலானது கட்சியை பிளவுபடுத்த முனைந்த ஒரு விடயமாகத்தான் நான் பார்க்கிறேன்.

*கேள்வி: கல்முனை மேயர் பதவியை உங்களுக்கு வழங்குதற்காக பதவியை ராஜிநாமா செய்யுமாறு கட்சித்தலைமை சிராஸ் மீராசாஹிப் அவர்களை வேண்டிக்கொண்டபோது இழுபறி நிலவியது. இந்த இழுபறிக்கு என்ன காரணம் என நினைக்கிறீர்கள்?*

பதில்: முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் சரித்திரத்தை புரட்டிப் பார்த்தால், சுழற்சி அடிப்படையில் அதிகாரங்கள் தனிநபர்களுக்கிடையில் பகிரப்பட வேண்டும் என்று எடுத்த முடிவுகள் ஒன்றிரண்டைத் தவிர பெரும்பாலும் நிறைவேற்றப்படவில்லை. இந்த சர்ச்சை மறைந்த தலைவர் காலத்திலிருந்தே வருகிறது. காத்தான்குடியில் இது ஆரம்பித்தது. அதனால் ஓட்டமாவடி எங்களை விட்டுப்போனது.

இந்தப் பின்னணியில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமைப் பதவியை பாரமெடுத்தபோதும் அவருக்கும் இந்த சவால் நீண்ட காலமாக இருந்தது. ஆகவே, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். கட்சியும் கட்சித் தலைமையும் ஒரு முடிவெடுத்தால் அந்த முடிவுக்கு மக்கள் கட்டுப்பட வேண்டும். கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை அவர்கள் நிலைநாட்ட வேண்டும். இதற்கு தீர்வு காணும் பொருட்டு கல்முனை மாநகர சபை தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் எந்த விட்டுக்கொடுப்பும் இல்லாமல் தீர்மானமாக நின்று, வழங்கப்பட்ட வாக்குறுதியை நிலைநிறுத்தியது. இது அரசியல் முன்மாதிரியையும் மக்கள் மத்தியில் வரவேற்பையும் பெற்றுள்ளது. இந்த செயற்பாடானது முஸ்லிம் காங்கிரஸின் சரித்திரத்தில் ஒரு மைல்கல்லாகும்.

*கேள்வி: நீங்கள் புதிதாக கல்முனை மாநாகர சபையின் மேயராக பதவியேற்றுள்ளீர்கள். கல்முனை மாநகர சபையை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் ஏதும் வைத்துள்ளீர்களா?*

பதில்: முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரையில் கொள்கைகளை விட்டுக் கொடுத்து செய்கின்ற அபிவிருத்தியை விட அபிவிருத்தி செய்யாமல் இருப்பது நல்லதென்று நினைக்கிறேன். ஆனால், கல்முனை மாநகர சபை ஏனைய மாநகர சபைகளைப் போன்றதல்ல. தலைவர் அஷ்ரஃப் அவர்கள் கல்முனையை மாநகராக மாற்ற முயற்சித்தமைக்கு அரசியல் முக்கிய காரணமாக இருந்தது. அப்போது அவர் ஆசைப்பட்ட தென்கிழக்கு அலகு வந்தால், அதன் தலைநகராக கல்முனை விளங்கவேண்டும். அதற்கான முஸ்தீபாகவும் ஆரம்பக் கட்டமாகவும் கல்முனை நகரம் மாநகர சபையாக இருந்தால்தான் அதற்கான அந்தஸ்து கிடைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் என்ற அடிப்படையில்தான் மாநகர சபையாக ஆக்கப்படவேண்டும் என்று அப்பொழுதே தீர்மானித்தார். அந்தக் கனவுகளோடு உருவாக்கப்பட்ட கல்முனை மாநகர சபை நிருவாக ரீதியாகவும் பௌதிக ரீதியாகவும் உயர்ந்தமட்டத்தில் இருக்க வேண்டும்.

கல்முனையை 21 ஆம் நூற்றாண்டை நோக்கி கொண்டுசெல்லும் திட்டம் என்னிடம் இருக்கிறது. இந்த பட்ஜட்டிலிருந்து ஒவ்வொன்றாக நான் நிறைவேற்றுவேன். இது தனி மனிதனின் கனவல்ல. ஒட்டுமொத்த மக்களினதும் தலைவர் அஷ்ரஃப் அவர்களதும் கனவாகும். அதை நிறைவேற்றுவதற்கு மாநகர சபையின் அனைத்து உறுப்பினர்களினதும் மு.கா. அங்கத்தவர்களினதும் ஒத்துழைப்பு எனக்குத் தேவை. அனைவரினதும் கூட்டு முயற்சியால்தான் கல்முனை மாநகர சபையை அபிவிருத்தி செய்யவேண்டும் என ஆசைப்படுகிறேன்.

**கேள்வி:** அண்மைக்காலமாக முஸ்லிம்கள் மத்தியில் முஸ்லிம் காங்கிரஸின் போக்கு மற்றும் தலைமைத்துவ நடவடிக்கைகள் குறித்தும் பல்வேறு விமர்சனங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலைமை கட்சிக்கு ஏற்படுவது குறித்து உங்களது கருத்து என்ன?

**பதில்:** கட்சித் தலைமைக்கு இது ஒரு நெருக்கடியான கால கட்டம். ஏனென்றால், மத்திய அரசாங்கம் ஒரு பக்கம், இன்னொரு பக்கம் தெற்கில் சிங்கள பௌத்த விழிப்பொன்று ஏற்பட்டிருக்கும் காலகட்டத்தில்தான் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அத்தோடு, பயங்கரவாதத்தை தோற்கடித்து நாட்டை மீட்டெடுத்திருக்கிறோம் என்ற பிரமை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. அதற்கான முற்போக்கு தலைமைத்துவத்தைத்தான் ஜனாதிபதியும் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் சிறுபான்மை என்ற ரீதியில் அரசியல் ரீதியாக விட்டுக்கொடுப்புகள், நெகிழ்வுகள் ஏற்படுகின்றபோது முஸ்லிம்கள் மத்தியில் பாரிய அதிருப்திகள் காணப்படுகின்றன. இதனை எவ்வாறு கூட்டாக எதிர்நோக்கப் போகிறோம் என்ற விடயத்தில் சவால் இருக்கத்தான் செய்கிறது. இப்பொறுப்பை நூற்றுக்கு நூறு வீதம் கட்சி செய்திருக்கிறதா என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது. இந்தப் பொறுப்பை ஒரு தனிநபரிடம் கொடுப்பதை விட முஸ்லிம் சமூகத்திலுள்ள அனைத்து தரப்பினரும் பொறுப்பெடுக்க வேண்டும்.

என்னுடைய தனிப்பட்ட கருத்து; கட்சி எந்தவித விட்டுக்கொடுப்புகளையும் மேற்கொள்ளாமல் திடமாக விடயங்களை செய்திருக்கலாம். அதாவது, 18 ஆவது திருத்தம் சம்பந்தமாக கட்சி கடைசியாக எடுத்த முடிவுக்கு அதனுடைய செயற்பாடுகள் மாறாக இருந்தன. அத்தோடு அரசாங்கத்துடன் இணைவது தொடர்பினும் கட்சி முடிவுகள் மாறாக இருந்தது. ஆனால், கூட்டுப்பொறுப்பு என்ற வகையில் இப் பொழுது இதனை நான் விமர்சிக்க விரும்ப வில்லை.

**கேள்வி:** கிழக்கில் கட்சியை மீள் நிர்மாணம் செய்வதற்கு உயர்பீடத்தில் ஏதும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா?

**பதில்:** அண்மையில், அம்பாரை மாவட்ட குழுவிடம் கட்சியை கீழ்மட்டத்திலிருந்து மீள்நிர்மாணம் செய்வது தொடர்பில் கட்சித் தலைவர் அமைச்சர் றவூப் ஹக்கீம் அவர்கள் பிரகடனம் ஒன்றைச் செய்தார். அது முக்கியமாக எதிர்காலத்தில் உள்ளூராட்சித் தேர்தல் வட்டார அடிப்படையில் நடக்கப்போகின்றது என்பதால், வட்டார அடிப்படையில் கட்சியை திரும்பவும் புனர்நிர்மாணம் செய்வதற்கு நவடிக்கை எடுத்துவருகிறோம். இது சரியாக நடந்தால் கீழ்மட்டத்திலிருந்து எமது கட்சியை மீண்டும் கட்டியெழுப்பலாம் என நம்புகிறோம்.

அண்மையில் நிந்தவூர் பிரதேசத்தில் இடம்பெற்ற மர்ம மனிதர்கள் தொடர்பான பிரச்சினை மற்றும் அதோடு தொடர்பாக நடைபெற்ற ஹர்த்தால் ஆகியன தேசியரீதியாக பேசப்பட்டாலும் எந்தவித தீர்வும் தீர்மானங்களும் இல்லாமலேயே எழுந்தோய்ந்து விட்டன. நடந்து முடிந்துள்ள இச்சம்பவம் பற்றிப் பேசுவதைவிடவும் இது கற்றுத்தந்த பாடங்கள் பற்றிப் பேசுவதுதான் பொருத்தமானவையாகும்.

இச்சம்பவ தினத்தன்று சம்மாந்துறை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குறித்த சந்தேக நபர்களை மக்களின் அதற்கான அனுமதியை யார் வழங்கியது? என்பன இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறன.

நிந்தவூர் முஸ்லிம் சமூகமே இப்படி அவலப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் நமது அரசியல் தலைமைகள் சில விழா எடுத்து, பெருமைப்பட்டுக் கொண்டதுதான் மிகவும் கவலைதரும் விடயமாகும். நிந்தவூரில் அசாதாரண நிலை காணப்பட்டிருக்க, கல்முனையில் மற்றொரு தலைமை பிறப்பெடுத்ததற்கான வெற்றிக் கொண்டாட்டமும் பதவியேற்பும் ஒழுங்கு செய்யப்பட்டு வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டன. அங்கு குதூகலிக்க வந்திருந்த காங்கிரஸின் தலைவரும் செயலாளர் நிந்தவூர் பிரதேச இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினரும் பிரதேச சபை தவிசாளர் மற்றும் நிந்தவூர் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினரே வகைகூற வேண்டும்.

இந்த ஹர்த்தாலானது ஒரு தலைமைத்து வழிகாட்டலின் கீழ் ஒழுங்கமைக்கப்படாததால் பல்வேறு பாதிப்புகள் மக்களுக்கு இன்றுவரை ஏற்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் திருடர்களினால் எதிர்நோக்கி வந்த பாதிப்புகளையும் விட, தற்போது ஊர் மக்கள் பல இன்னல்களை இந்த ஹர்த்தாலின் பின் அனுபவித்து வருகின்றனர். அதிலொன்றுதான் பொதுச்

# நிந்தவூர் ஹர்த்தாலுக்கு பின்னுள்ள கேள்வி

சுற்றிவளைப்பிலிருந்து மீட்டுக்கொண்டு சென்றவர்கள், சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் அவர்களை தடுத்துவைக்காது அம்பாரை பொலிஸ் நிலையத்திற்கு பாதுகாப்பு நிமித்தம் மாற்றப்படுவதாகக் கூறி அன்றிரவு 1.45 மணியளவில் அனுப்பிவைத்தனர். பின்னர், குறித்த சந்தேக நபர்கள் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் எனவும் அவர்கள் கடமை நிமிர்த்தமே நிந்தவூருக்குள் வந்ததாகவும் பொலிஸார் அறிக்கை வெளியிட்டனர். இதனால் அதிருப்தியுற்ற மக்கள் பொலிஸாரினது மாற்றமான இந்நடவடிக்கைக்கு எதிராக ஹர்த்தால் ஒன்றை மேற்கொள்ள வழிவகுத்தது.



உண்மையில், இந்த ஹர்த்தால் சம்பவம் நடந்தேறுவதற்கு படையினரின் முன்னுக்குப் பின் முரணான செயற்பாடுகளே காரணமாக இருந்தன. நிந்தவூர் பிரதேச செயலகத்தில் 2013.11.17 ஞாயிற்றுகிழமை காலை நடைபெற்ற கூட்டத்தில், படையினரின் நடமாட்டம் பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸாரின் அனுமதியின்றி இடம்பெறுவதற்கு முடியாது என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். மற்றயது, களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் நிந்தவூரில் பாதுகாப்புக் கடமைக்காக வரவேண்டிய தேவை என்ன,

நாயகமும் அருகிலுள்ள நிந்தவூரில் மக்களுடைய பிரச்சினை பற்றி சற்றேனும் கவலைப்படாமல் வைபவம் முடிந்த கையோடு கொழும்புக்கு சென்றுவிட்டனர். 5 கிலோ மீற்றறுக்கப்பால் அநீதியிழைக்கப்பட்ட மக்கள் போராடிக் கொண்டிருப்பது நீதி அமைச்சருக்கு தெரியாமலிருந்ததா?

நிந்தவூர் ஹர்த்தாலானது பள்ளிவாயல் மூலமாகவோ, எந்தவொரு அரசியல் தலைமைகளாலோ ஒழுங்கமைக்கப்படவில்லை. மாறாக, நிந்தவூரில் தொடர்ச்சியாக இருந்த அசம்பாவிதங்களுக்கு எதிராக நின்ற இளைஞர்களின் ஒரு சிறு முயற்சியாகவே இருந்தது. உருப்படியான தலைமைத்துவ வழிகாட்டலின்றி இந்த ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டதன் காரணத்தால் எதுவித பலனையோ, தீர்வையோ பெற்றுக்கொள்ள முடியவில்லை, பாதிப்புகளே மிஞ்சின. இந்த இழப்புக்கு



சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டும். கலகமடக்க வந்த பொலிஸாரே பெக்கோ இயந்திரத்தைக் கொண்டு வீதியின் அருகில் கிடந்த மின்சார கட்டைகளையும் அருகிலிருந்த வடிகான்களையும் சேதப்படுத்தினர். இதற்கு ஊடகங்களில் வெளியான செய்திப் படங்களே போதுமான சான்றுகளாகும்.

நிந்தவூரில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பல்வேறு வினாக்கள் இன்னும் உள்ளன. மக்களின் வலைக்குள் சிக்கியது விசேட அதிரடிப்படையினரா? அவர்கள் ஏன் தம்மை அடையாளம் காட்டிக்கொள்ள அஞ்சினர்? அவர்கள் களுவாஞ்சிக்குடி முகாமிலிருந்து அந்த இரவில் வருவதற்கு காரணம் என்ன? இந்நிகழ்வுகள் நிந்தவூரில் மாத்திரம் இடம்பெறுவதன் மர்மம் என்ன? இதன் பின்னணியில் எவர்கள் உள்ளனர்? அதிரடிப்படை உறுப்பினர்களை பொலிஸார் ஏன் இன்னும் கைது செய்யவில்லை? வசமாக சிக்கிய அவர்களை ஏன் இன்னும் நீதிமன்றின் முன் கொண்டுவரவில்லை? இச்சம்பவம் தொடர்பில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் எவரும் துணிந்து பேச முன்வராதது ஏன்? என்பன போன்ற பல கேள்விகளுள்ளன.

சட்டத்தரணி ஸகி இஸ்மாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: அலா் அஹமட்

## எவரெஸ்ட் சிகரம் அடைந்த பாகிஸ்தானிய பெண்



பாகிஸ்தானிய பெண் ஒருவர் உலகில் மிக உயரமான எவரெஸ்ட் சிகர உச்சியை அடைந்ததன் மூலம் எவரெஸ்ட் சிகரத்தை தொட்ட 12ஆவது வீராங்கணையாகவும் 3ஆவது பாகிஸ்தானியராகவும் கருதப் படுகிறார்.

சமினா பெய்க் என்ற 21 வயதான யுவதியே 8848 மீற்றர் உயரமான எவ ரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர். கடின மான வானிலை மற்றும் சிரமமான பயணத்தின் மத்தியில் இச்சாதனையை நிறைவேற்றியுள்ளார்.

பாகிஸ்தானின் வடமாகாணத்திலுள்ள Huza Gojal கிராமத்தை சேர்ந்த இப் பெண் 4 வயது முதலே மலை ஏறிவந் ததுடன் 15 வயது முதல் தனது சகோதரன் மிர்ஸாவால் மலை ஏறுவதற்கு மேலும் பயிற்றுவிக்கப்பட்டார்.

மலை ஏறுவது வெறும் விளையாட்டு மட்டுமல்ல, பெண்களை ஊக்குவிக்கும் ஒன்றாகும். வளர்முக நாடுகளிலுள்ள பெண்கள் ஆண்களைப்போல் சக்தி யுள்ளவர்கள். பெண்களால் சமூகத்திற்கு பலமான சேவைகள் செய்ய முடியும் என சமினா கூறினார்.

## நியூசிலாந்தில் உலக முஸ்லிம் பேரவை



உலக முஸ்லிம் பேரவையை நியூசி லாந்தில் ஆரம்பிக்க உள்ளதாக நியூசி லாந்தின் மத விவகார அமைச்சர் ஜெடித் கோலின்ஸ் judith collins தெரிவித் துள்ளார்.

இப்பேரவை முஸ்லிம் சமூகத்தின் பயணத்திற்கான சிறந்த வாய்ப்பாகவும் நியூசிலாந்தில் முஸ்லிம்கள் தமது எதிர் கால பங்களிப்புகளை வழங்குவதற்கான சிறந்த களமாகவும் அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கலந்துரையாடல் மற்றும் பிரச்சினைகளை அடையாளங்காணல், தீர்வுகளை முன்வைத்தல் போன்றவை இப்பேரவையின் மூலம் தீர்த்துக்கொள்ள முடியுமெனவும் கலாசாரங்களுக்கிடை யேயான ஒத்துழைப்புகள் மூலம் சிறந்த வாய்ப்புகளையும் நன்மைகளையும் அடை யலாம் எனவும் அவர் மேலும் தெரிவித் தார்.

சமூக நல்லிணக்கத்தை உருவாக்குவதற் கான உலகின் சிறந்த முன்னுதாரமாக இப்பேரவை காணப்படும். இதனூடாக பன்மைத்துவத்தின் சிறந்த வாய்ப்புகளை அடையமுடியும் எனவும் அவர் தெரிவித் தார்.

இப்பேரவை மூலம் முஸ்லிம் சமூகத் திற்கும் ஏனைய சமூகங்களுக்குமிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த முடியும். 2005 இலிருந்து நியூசிலாந்தில் இதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

## லெபனானில் வசிக்கும் சஊதிய பிரஜைகளை நாட்டுக்கு வருமாறு அழைப்பு

லெபனானில் வசிக்கும் சஊதி நாட்டுப் பிரஜைகளை சொந்த நாட்டுக்கு திரும்பு மாறு சஊதி அரசாங்கம் அழைப்பு விடுத் துள்ளது. லெபனானின் ஈரானிய தூதரகம் அருகே நடத்தப்பட்ட இரட்டைக் குண்டுத் தாக்குதலின் பின்பே சஊதி இந்த அறி விப்பை விடுத்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களால் சஊதி நாட்டுத் தூதரகம் எமது நாட்டுப் பிரஜை களை நாடு திரும்புமாறு ஆலோசனை கூறி யுள்ளது என லெபனானுக்கான சஊதிய தூதுவர் அலி அவாட் ஆசிரி தெரிவித்துள் ளார்.

லெபனானிலுள்ள ஈரானிய தூதரகம் அருகே இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் 25 பேர் வரை உயிரிழந்ததுடன் 150 பேர் வரை காயமடைந்தனர். இக்குண்டுத் தாக்குதல் நடைபெற்ற பிரதேசம் ஹிஸ்புல்லா இராணுவத்தின் கோட்டையாகும்.

இத்தாக்குதலுக்கு அல்கைதாவுடன் தொடர்புடைய குழுவொன்று உரிமை கோரியுள்ளதுடன், சிரியாவிலுள்ள ஹிஸ் புல்லா இராணுவத்தை நாடு திரும்பக் கோரியே இத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதாகவும் அக்குழு தெரிவித்துள்ளது.

## ஈரானின் அணு உடன்படிக்கை வரலாற்றுத் தவறாகும்

### -இஸ்ரேலிய பிரதமர் பின்யாமின் நெதன்யாகு-



ஈரானுக்கும் அமெரிக்க அடங்கலான சில நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற ஜெனீவா உடன்படிக்கையானது வரலாற்று உடன்படிக்கையல்ல, அது வரலாற்றுத் தவறு என இஸ்ரேலிய பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.


இதேவேளை இவ்வுடன்படிக்கையை சஊதி அரேபியா, சிரியா உட்பட பல நாடுகள் வரவேற்றுள்ளதுடன் ஒப்பந்தம் அமுல்படுத்தும் வகையில் ஈரான் மீதான பொருளாதார தடையை ஐரோப்பிய யூனியன் விலக்கிக் கொள்ளவுள்ளதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

என்றாலும், இவ்வுடன்படிக்கையை அமுல்படுத்துவதில் பல சவால்கள் உள்ளன என ஒபாமா தெரிவித்துள்ளார். அணுசக்திப் பேச்சுவார்த்தை தொடர்ந்தும் நடைபெறும். ஈரானின் அணுசக்தி தொடர்பான அனைத்து அச்சுறுத்தல்களையும் தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இவ்வுடன்படிக்கையின் பின்னால் பல இராஜதந்திர காய்நகர்த்தல்கள் உள்ளதாக வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

## ஜனவரி 22 இல் சிரிய அமைதிப் பேச்சுவார்த்தை






எதிர்வரும் ஜனவரி 22 இல் சிரிய அமைதிப் பேச்சுவார்த்தை ஜெனீவாவில் நடைபெறவுள்ளதாக ஐ.நா. செயலாளர் பாங் கி மூன் தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சியாளர்களுக்கும் அரசுக்கு மிடையே சமாதான கலந்துரையாடல் மூலம் உள்நாட்டுப் போருக்கு முடிவுகட்டி சமாதானத்தை ஏற்படுத்துவதே இப் பேச்சுவார்த்தையின் நோக்கமாக கூறப் படுகின்றது.

இவ்வாய்ப்பை இரு தரப்பும் பயன் படுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வேண் டும் என பாங் கி மூன் தெரிவித்துள் ளார்.

## சீன உதவியுடன் கராச்சியில் அனல்மின் நிலையம்



பாகிஸ்தான் கராச்சி நகரில் சீன உதவி யுடன் 2117 மெகாவோட் மின் திறண் கொண்ட அணு மின் நிலையத்திற்கு அடிக்கல் நட்டப்பட்டது.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரிப் அடிக்கல் நட்டி பின் உரையாடுகையில்; பாகிஸ்தானில் மிகப்பெரிய அணுமின் நிலையமாக அமையவிருக்கும் இம்மின் உற்பத்தி நிலையம் நாட்டில் நிலவும் மின் பற்றாக்குறையை முடிவுக்கு கொண்டுவர உதவும் எனத் தெரிவித்தார்.

மின் உற்பத்தி நிலையம் உட்பட பாகிஸ்தானுக்கு பல துறைகளில் சீனா வழங்கிவரும் உதவிகளையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.


சீன-பாகிஸ்தான் நற்புறவு, சீன-இந்திய வர்தகப் போட்டிக்கான முக்கிய இராஜ தந்திரம் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசம்

# அர்தூகானும் சவால்களை மிகைக்கும் அரசியல் வியூகங்களும்

சகி பவுஸ் (நளீமி)



துருக்கியின் அரசியல் களம் மிகவும் வேகமாக தீப்பற்றக்கூடியது. காரணம், அதன் நான்கு எல்லைகளும் துருக்கியின் அரசியல் எதிரிகளால் அல்லது துருக்கியின் பிராந்திய அரசியல் ஆதிக்கத்தை ஓரக்கண்கொண்டு நோக்கும் நாடுகளினாலேயே சூழப்பெற்றுள்ளன. மேற்குப் புறமாக துருக்கியின் அரசியல் எழுச்சியை விரும்பாத ஈரான், கிழக்குப் புறமாக மூன்று தசாப்தங்களாக துருக்கியுடன் ஆயுதம் ஏந்திப் போராடும் குர்திஷ்கள், தென்மேற்குப் புறமாக துருக்கியின் பாதுகாப்பை அச்சுறுத்தும் சிரியா, தென்கிழக்குப் புறமாக சிரியாவினதும் ஈரானினதும் நண்பன் மாலிகியின் ஈராக்கிய ஷீயா அரசு என நிரல்படுத்திக் கொண்டே செல்லலாம். மேற்குறிப்பிட்ட நாடுகள் அனைத்தினதும் உள்ளக அரசியல் மாற்றங்கள் நேரடியாக துருக்கியின் பாதுகாப்பையும் பொருளாதாரத்தையும் அரசியல் ஸ்தீரப்பாட்டையும் பாதிக்கக்கூடிய இயல்பைக் கொண்டவை.

சிரியப் புரட்சியின்போது துருக்கியின் எல்லை நாடுகளான ஈரான், ஈராக் ஆகியன அஸதை பாதுகாக்க விரைந்தபோது, அர்தூகான் சிரிய மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்காக குரல் கொடுத்தார். இதனால், அந்நாடுகள் இஸ்தான்புலைப் பார்த்து கர்ஜித்தது மாத்திரமன்றி, அர்தூகானின் அரசுக்கெதிராக துருக்கிய ஷீயாக்களை தூண்டிவிடும் செயற்பாடுகளிலும் இறங்கின. போதாக்குறைக்கு, இஸ்தான்புல் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் பாதுகாப்பு அரண் என அந்நாடுகளின் மீடியார்க்கள் எழுதித்தள்ளின. எல்லாவற்றுக்கும் அப்பால், துருக்கியின் எல்லைப் புறங்கள் மிகப் பயங்கரமான பாதுகாப்பு அச்சத்துக்குட்பட்டன. பல இனந்தெரியாத குழுக்களால் குண்டுகள் கூட பிரதான எல்லைப் புற நகரங்களில் வெடிக்க ஆரம்பித்தன. இறுதியில், அயல் நாடுகளினால் துருக்கி தனிமைப்படுத்தப்பட்டது. இதை துருக்கிய அரசு பெறுமதியான தனிமை (precious loneliness) என வர்ணித்து சர்வதிகாரிகளுக்கு சார்பாக நிற்காமல் மக்களின் ஜனநாயக தாகத்திற்கு சார்பாக நின்றதால் துருக்கி தனிமைப்படுத்தப்பட்டது எனவும் தெளிவுபடுத்தியது.

> **“அங்கு குர்திஷ்தான் பிரதமர் மேடையில் இருக்கும் நிலையில் உரையாற்றிய அர்தூகான்: துருக்கியன்- குர்திஷ் என்ற வேறுபாடு தன்னிடம் இல்லை. நீங்கள் சமாதானத்தை விரும்பும் காலமெல்லாம் நாங்களும் விரும்புகிறோம் என தெரிவித்தார்.”**

சிரிய புரட்சியின் காரணமாக அயல் நாடுகளுடனான உறவுகள் பலவீனமடைந்தன. எகிப்திய இராணுவப் புரட்சியால் மத்திய கிழக்கின் ஆதிக்கத்திற்கு பெரும் தூணாக நின்ற இஸ்லாமியவாதிகளது அரசையும் துருக்கி இழந்ததோடு எகிப்தில் பல லட்சம் டொலர்கள் பெறுமதியான அதன் முதலீடுகளும் தேக்கம் அடைந்தன. மட்டுமன்றி, எகிப்திய இராணுவப் புரட்சிக்கு எதிராக துருக்கி நின்றதால், எகிப்திய மதச்சார்பற்ற இராணுவத்தின் அடிவருடிகள் மற்றும் அரபு மன்னர்கள் இணைந்து அர்தூகானின் அரசை கவிழ்ப்பதற்கு கனவு வேறு காண ஆரம்பித்தனர். இதே வரிசையில், சிரியாவின் அஸதைக் கவிழ்ப்பதற்காக மேற்கு நாடுகளுடன் துருக்கி இணைந்து கொண்டாலும் கூட, சமீபத்திய மேற்கின் அரசியல் போக்குகள் அஸதுக்கு சார்பாக மாறியுள்ளமையால் அர்தூகானின் அரசு இடைநடுவே மாட்டிக்கொள்ள நேரிட்டது. மற்றொரு புறத்தில் சென்ற வருடம் துருக்கியுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்ட குர்திஷ்கள் தமது உடன்படிக்கைகளை முறித்துக்கொள்ளப் போவதாக அலட்டிக் கொண்டிருந்தனர். இறுதியாக, பிராந்தியத்தில் பாரிய எதிரொலிகளை ஏற்படுத்திய ஈரான் மற்றும் அமெரிக்க கூட்டு துருக்கியின் அரசியல் வகிபாகத்தை முழுமையாக நசுக்கிவிட போதுமானது என அரசியல் அவதானிகள் பரவலாக கருத்துத் தெரிவித்தனர்.

இத்தனை சவால்களையும் நுணுக்கமாக அவதானித்து அர்தூகான் தந்திரமாக நகர ஆரம்பித்தார். துருக்கியின் அரசியல் களத்தில் சாதக மாற்றங்கள் கனியும் வரை அவரால் பொறுமையாக இருக்க முடியாது. காரணம், 2014ஆம் ஆண்டு இஸ்தான்புல் மாநகர சபைத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்பன ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறவிருக்கின்றன. அவற்றுக்குத் தயாராகவும் வேண்டும். அயல் நாடுகளுடனான முரண்பாடுகளுடன் தேர்தல் களத்தை சந்திப்பது அபாயமானது. எனவே, தேர்தலை சந்திப்பதற்கு முன் சுமுகமான அரசியல் களத்தை ஏற்படுத்த வேண்டும். இவை அர்தூகானின் தனிப்பட்ட உள்ளக அரசியல் இலாபங்களுடன் தொடர்புபட்டது. அதனைவிட, மேற்குறிப்பிட்ட சவால்களை அவசரமாகவும் சாணக்கியமாகவும் மிகைக்க அர்தூகான் தீர்மானிப்பதற்கு பிரதான காரணம், எகிப்திய இராணுவப் புரட்சியின் பின்னரான அரசியல் மாற்றங்கள் முஸ்லிம் உலகின் எதிர்காலத்தை பாதிக்கக்கூடிய வகையில் வேகமாக நகர்வதினாலாகும் என அரசியல் விமர்சகர் யாசிர் ஸஆதிரா வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்.

இந்த வகையில் சர்வதேச அரசியலில் மீண்டும் குதிப்பதற்காக அர்தூகான் உடைந்த அயல் நாடுகளுடனான உறவுகளை சீர் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதற்காக துருக்கியின் அர்தூகானும் வெளிநாட்டமைச்சர் அஹ்மத் தாவுத் தொக்லுவும் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகள் சர்வதேச அரசியல் விற்பன்னர்களை திகைப்படையச் செய்துள்ளன. அதைப் பற்றி பேசும் சில விமர்சகர்கள் Erdogan and Dawud thglu are political wolfs (அர்தூகானும் தாவுத் தொக்லுவும் சர்வதேச அரசியல் நரிகள்) என அதிர்ச்சியை வெளிப்படுத்துகிறார்கள்.



அதாவது, இரண்டு வருட காலங்களாக தொடர்ந்த முறுகல் நிலையை முடிவுக்கு கொண்டுவரும் நோக்குடன் துருக்கியின் வெளிநாட்டமைச்சர் தாவுத் துக்லோ ஈராக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டார். பொதுவாக ஈராக்கில் வசிக்கும் ஸுன்னி முஸ்லிம்களை ஷீயாக்களுக்கு எதிராக துருக்கி தூண்டிவிடுகிறது என ஈராக்கிய அரசால் இஸ்தான்புல் விமர்சிக்கப்பட்டது. எனவே, துருக்கியின் வெளிநாட்டமைச்சர் தனது விஜயத்தின்போது ஈராக்கில் அமைந்துள்ள கர்பலா மற்றும் நஜாப் போன்ற ஷீயாக்களின் பல முக்கிய தளங்களை தரிசித்தார். அங்கு உரையாற்றிய அவர் பிராந்தியத்தில் ஸுன்னி ஷீயா பிரிவினை வாதத்தை ஒழித்துக்கட்ட வேண்டிய பொறுப்பு ஈராக்கினதும் துருக்கியினதும் அடிப்படை பணி என குறிப்பிட்டார். அதனை ஈராக்கிய அரசு வரவேற்றது. விளைவாக, துருக்கியுடனான உறவுகளை பரஸ்பர நலன்களின் அடிப்படையில் மீண்டும் நிலைநிறுத்த விரும்புவதாகவும் தெரிவித்தது.

குர்திஷ்களது அழுத்தத்தை அடக்குவதற்காக அர்தூகான் கையாண்ட தந்திரம் ஒரே கல்லில் இரு மாங்காய்களை பறிக்கத்தக்க ஒரு வழிமுறையையாகும். அதாவது, குர்திஷ்களது சுயாட்சிப் பிராந்தியமான ஈராக்கின் குர்திஷ்தான் மாநிலத்தின் பிரதமர் துருக்கியின் குர்திஷ்கள் அதிகமாக வாழும் மாநிலத்திற்கு வருகை தருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்த சந்தர்ப்பத்தை சாணக்கியமாக பயன்படுத்திக் கொண்டார் அர்தூகான். துருக்கியில் குர்திஷ்கள் அதிகமாக வாழும் மாநிலத்திற்கு குர்திஷ்தான் பிரதமருடன் தானும் சேர்ந்து கொள்வதாக அறிவித்தார். அங்கு குர்திஷ்தான் பிரதமர் மேடையில் இருக்கும் நிலையில் உரையாற்றிய அர்தூகான்: துருக்கியன்- குர்திஷ் என்ற வேறுபாடு தன்னிடம் இல்லை. நீங்கள் சமாதானத்தை விரும்பும் காலமெல்லாம் நாங்களும் விரும்புகிறோம் என தெரிவித்தார். அர்தூகானின் வார்த்தைகள் குர்திஷ்களின் சமீபத்திய தடுமாற்றங்களை அப்படியே களைந்துவிட்டன.

மறுபுறத்தில், துருக்கியின் பிராந்திய எழுச்சியை ஓரங்கட்டுவதற்கு மேற்கு நாடுகள் ஈரானை வைத்து முயற்சிசெய்து கொண்டிருக்கின்றமை தெளிவானது. இதனைப் புரிந்துகொண்ட அர்தூகான் ஈரானை அச்சுறுத்தும் ஒரு வார்த்தையைக்கூட பயன்படுத்தாமல், ஈரானின் வெளிநாட்டமைச்சரை துருக்கிக்கு அழைத்து ஈரானினதும் துருக்கியினதும் பிராந்திய நலன்களுக்காக உழைப்பதற்கான திட்டங்களை தீட்டினார்.

→ 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Live:

## என்றும் உயிர்த்துடிப்புடன்...



### Live Blogging

சுடச்சுட செய்திகளைப் படிக்க யாருக்குத்தான் ஆசையிருக்காது? சூடான செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்வதில் ஆர்வம் மிக்கவர்களின் தேவையை நிவர்த்தி செய்வதே இந்த Live Blogging தான். ரியல் டைம் அப்டேட் என்ற ஒரு விடயத்தை நாம் ஏற்கனவே பார்த்திருந்தோம். அதாவது, உடனுடக்குடன் விடயங்கள் அப்டேட் செய்யப்படுவது போன்ற ஒரு வசதிதான் இந்த Real Time Update.

சிலபோது ஒரு நிகழ்வு தொடர்பான புதிய, புதிய அப்டேட்கள் வந்தவண்ணமிருக்கும். உதாரணமாக, எகிப்தில் மக்கள் போராட்டம் வெடித்தபோது செய்திகள் நொடிக்கு நொடி வந்துகொண்டிருந்தன. இவ்வாறு வந்த செய்திகளை உடனுக்குடன் மக்கள் அறிந்துகொண்டனர்.

இணையதளம் உபயோகிப்பவராக நீங்கள் இருந்தால் செய்தி இணையதளங்களில் பதிவேற்றப்படும் புதிய செய்தியைப் பார்க்க, அதனை Refresh செய்ய வேண்டும். ஆனால், LiveBlog ஐப் பொறுத்தவரையில் அப்படி செய்யவேண்டிய தேவையில்லை. அதுவாகவே அப்டேட் ஆகும்.

அல்ஜஸீரா இணையதளத்தில் இவ்வாறான LiveBlog கள் அவ்வப்போது சூடாக இயங்கும். எகிப்து போராட்டம், டியூனீசிய மக்கள் எழுச்சி, சிரிய கலவரம் என சூடான நிகழ்வுகள் உடனுக்குடன் பதிவேற்றப்பட்டு மக்கள் கவனத்தை ஈர்த்ததை இதற்கு எடுத்துக்காட்டாக கொள்ளமுடியும்.


ALJAZEERA

Cuba's old guard faces a new world

Communist Party members debate merits of market socialism at landmark conference

News | In Depth | Programmes | Video | Blogs | Business | Weather | Sport | Watch Live

Africa | Americas | Asia | Europe | Middle East | Imperium | Search

Live Blog

Tweet 0 | Like 11

44 min 24 sec ago - Syria There are 62 killed in fighting in Syria by the early evening, including three children and two defected recruits, according to the Local Coordination Committees (LCC), an activist network.

In the suburbs of Damascus, there were 16 deaths, in Kafar Batna, Saqba, Hamourya, Rankoos, Zabadany and Harasta.

Some 19 were killed in Homs, 15 in Hama, five in Idlib, four in Deraa and three in Saraqeb, Deir Ezzor and Damascus, the LCC said.

Tags: Syria death toll

Live Blogs

- Syria
- Egypt
- Yemen
- Bahrain

Al Jazeera Live

### Live Stream

நேரடி தொலைக்காட்சி அறிமுகமானபோது மக்கள் உலகின் எந்த மூலை முடுக்கில் நடக்கும் நிகழ்வையும் உடனுக்குடன் பார்த்து மகிழ்ந்தனர். தொலைக்காட்சி அலைவரிசை என்பது செலவு கூடியதும் அனைவராலும் சாத்தியப்படுத்த முடியாததுமாகும். ஆனால், தொலைக்காட்சி ஒன்றைக் கொள்வனவு செய்து அதில் பார்த்து மகிழ்வதென்பது இலகுவானதாக இருந்தது. எனவே, நிகழ்ச்சியை வழங்குபவர்கள் இதனை அவர்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

சமூக ஊடகம் என்பது மக்களின் கைகளில் ஊடகத்தை வழங்கி அதற்கான உரிமையையும் வழங்குவதாகும். ஊடக செயற்பாட்டில் இருக்கும் கட்டுப்பாட்டை உடைத்துக்கொண்டு மக்கள் கரங்களில் நேரடி அலைவரிசையை பெற்றுக்கொடுத்ததுதான் இந்த live Stream.

இதற்கு இணையவசதி மற்றும் கமரா வசதியுடைய மொபைல்போன் என்பன தாராளமாகப் போதும். இந்த வசதியை வழங்கும் சில நிறுவனங்கள் இருக்கின்றன. அவை இணையதளத்தில் இலவசமாகவும் சிறு தொகைக் கட்டணத்திலும் இந்த சேவையை வழங்கிவருகின்றன. இவ்வாறான இணையதளங்களில் நீங்களும் இந்த வசதியை பெற்றுக்கொள்ளலாம்.


Live Stream, U Stream என்பன அத்தகைய சேவைகளை வழங்கிவரும் நிறுவனங்களாகும். அவற்றிலிருந்து உங்களுக்கு ஓரிடத்தில் நடக்கும் நிகழ்வுகளை விரும்பியவாறு மற்றவர்களும் தொலைக்காட்சியில் பார்ப்பதுபோல நேரடியாக பார்க்கச் செய்யலாம்.

இவை மேம்படுத்தப்பட்ட பல சேவைகளை தன்னகத்தே கொண்டுள்ள சிறந்த நிறுவனங்களாகும். இவை Live Stream எனும் சமூக ஊடகத்தை ஏனைய சமூக ஊடகங்களுடன் இணைக்கும் சிறந்த சமூகத் தளமாக கருதப்படுகின்றன. இதுதவிர, லைவ் ஜேர்னல் போன்ற சமூக தளங்களும் உடனுக்குடன் பகிர்ந்து கொள்ளும் வசதியை வழங்குகின்றன.

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org

# மங்கல்யான்:

## இந்தியாவின் முதல் விண்கலம்



செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக இந்தியா முதன் முதலில் 'மங்கல்யான்' என்ற விண்கலத்தை ஏவியுள்ளது. இது கடந்த மாதம் 05 ஆம் திகதி ஆந்திரா மாநிலம் சிறீஹரி கோட்டாவில் உள்ள சதீஸ்தவான் விண்வெளி மையத்தின் ஏவுகத்திலிருந்து ஏவப்பட்டது.

செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் வாழ்வதற்கான சூழ்நிலைகள் உள்ளதா என்பதை விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக ஆய்வு செய்து வருகின்றனர். இந்த ஆராய்ச்சிக்காக முதன் முதலில் 1960 ஆம் ஆண்டு 'போர்பல் - 4' என்ற செயற்கைக் கோளை ரஷ்யா செவ்வாய்க் கோளுக்கு அனுப்பியது. ஆனால், அந்த முயற்சி வெற்றியடையவில்லை. அதன்பிறகு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் செவ்வாய்க் கிரகத்திற்கு செயற்கைக் கோள்களை அனுப்பின. அந்த செயற்கைக் கோள்கள் மூலம் செவ்வாயில் தண்ணீர் மற்றும் செம்மண் காணப்படுகிறது என்ற பல்வேறு முடிவுகள் உலகுக்கு அறிவிக்கப்பட்டன.

இந்நிலையில், இந்தியா செவ்வாய்க் கிரகத்திற்கு முதன் முறையாக 'மங்கல்யான்' என்ற விண்கலத்தை ஏவியுள்ளது. இதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ) 18 மாதங்களில் விண்கலத்தையும் அதை ஏவுவதற்கான பி.எஸ்.எல்.வி.சி 25 ர்ராக்கெட்டையும் 450 கோடி செலவில் தாயரித்தது. மங்கல்யான் விண்கலத்தில் செவ்வாயில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளும் வகையில் பல நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் கருவிகள் செவ்வாயில் தண்ணீர், மீத்தேன் வாயு மேற்பரப்பின் குளிர்ச்சித்தன்மை, கனிம வளம், செவ்வாயின் பரப்பளவு மற்றும் தன்மை என்பனவும் மனிதன் வாழ்வதற்கு தேவையான சூழல் உள்ளதா என்பது குறித்தும் ஆய்வு செய்யும் வகையில் உருவாக்கப்பட்டன.

செவ்வாய்க் கிரகத்துக்கு விண்கலம் அனுப்பும் முயற்சியில் உலக நாடுகள் தீவிரமாக ஈடுபட்டு வந்தன. இருப்பினும் 40 முயற்சிகளில் 23 முயற்சிகள் தோல்வியில்தான் முடிந்துள்ளன. இதில் 1909 ஆம் ஆண்டு ஜப்பான் அனுப்பிய விண்கலமும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சீனா அனுப்பிய விண்கலமும் அடங்கும்.

பி.எஸ்.எல்.வி. ராக்கெட் செய்ய 110 கோடியும் செயற்கைக் கோளான மங்கல்யான் விண்கலம் தயாரிக்க 150 கோடியும் ராக்கெட், விண்கலம் ஆகியவற்றை ஏவுவதற்கான ஏனைய செலவுகளாக 90 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் செவ்வாய்க் கிரகத்தை மங்கலகாரன் என்று அழைப்பார்கள். 'மங்கல்' என்றால் செவ்வாய் என்றும் 'யான்' என்றால் பயணம் என்றும் அர்த்தப்படும். எனவே, செவ்வாய்க்கு அனுப்பும் விண்கலத்துக்கு மங்கல்யான் என்று பெயர் சூட்டினார்களாம்.

மங்கல்யான் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் செவ்வாய்க் கிரகத்தை நீள்வட்டப் பாதையில் சுற்றி ஆய்வுகள் செய்யும். நீள்வட்டப் பாதையில் விண்கலம் சுற்றும்போது செவ்வாயிலிருந்து குறைந்தபட்ச தொலைவு 377 கி.மீ, அதிகபட்ச தூரம் 80,000 கி.மீ. எனக் காணப்படும்.

இந்தியா 2015 ஆண்டுக்குள் இரண்டு அல்லது மூவர் இயக்கும் மனித விண்வெளிக் கலத்தை தயார் செய்யத் திட்டமிட்டுள்ளது. அதற்கான நிதி மதிப்பு 242 மில்லியன் டாலர் (1240 கோடி). மேலும், இந்திய அரசு மனிதப் பயணத்திட்டத்துக்கு 95 கோடி ரூபாய் நிதித் தொகையை அளித்துள்ளது. விண்வெளிப்பயண பயிற்சிக்கு 1000 கோடி செலவில் பங்களூரில் பயிற்சிக் கூடம் ஒன்றையும் அமைக்கவுள்ளது.

இந்தியாவின் இம்முதல் முயற்சி சாதனை படைக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது. செவ்வாய்க்கு விண்கலம் அனுப்புவதில் இதுவரை ரஷ்யா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் மட்டுமே வெற்றி பெற்றுள்ளன. இந்தியாவின் 'மங்கல்யான்' பயணம் வெற்றிபெறும் பட்சத்தில், செவ்வாய்க் கிரகத்தை அடைந்து சாதனை படைக்கும் நான்காவது நாடாக இந்தியா திகழும்.

எஸ்.எல். உஸ்மான் அகீல்
இறக்காமம்




### இவ்வார சிந்தனைக்கு

பொதுவாக மனிதர்கள் உண்மைக்கு அதிகமாக தோற்றத்தை வைத்து தீர்மானம் செய்கிறார்கள்.
எல்லா மனிதர்களுக்கும் கண்கள் உண்டு. ஆனால், சிலபேருக்குத்தான் கூர்ந்து நோக்கும் தீச்சண்ய பார்வை உண்டு.

-மக்க வள்ளி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# மூமின் தாத்தா: சில ஞாபகங்கள்

சமீலா யூசுப் அலி

மூமின் அல்லது மூமின் தாத்தா படுத்த படுக்கையாகக் கிடக்கிறார் என்ற செய்தி ஒரு வாரத்துக்கு முன் என்னை வந்தடைந்த போது அவரை பார்க்கச்செல்ல வேண்டும் என்ற உந்துதல், பல்வேறு பணிகளுக்குள் இந்த முன்னுரிமை இழந்திருந்தது.

மூமின் தாத்தா காலமாகிவிட்டார்; இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

நினைவு தெரிந்த காலம் முதலே பாதைகளிலும் வீட்டிலும் பலமுறை மூமின் தாத்தாவைக் கடந்து எனது பால்யப்பருவம் சென்றிருக்கிறது.

அவரும் அவரது குடும்பமும் மிகுந்த வசதியுடன் வாழ்ந்தவர்கள் என்பது என் தாய் சொல்லி தெரிந்த கதை. வீட்டில் ஜின் இருக்கிறது என்ற அச்சத்தை விதைத்து அவர்களை சொந்த வீட்டிலிருந்து வெளியேற்றியது முதல் சொத்துக்களை அபகரித்துக் கொண்டது வரையிலான பல சம்பவங்களை ஊரில் பலரும் சொல்லுவதுண்டு. இவற்றின் உண்மைத்தன்மை எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் மூமின் தாத்தா என்ற தனி மனுஷியும் அவர் சார்ந்த ஞாபகங்களுந்தான்.

மூமின் என்ற பெயர் சொல்லும்போது ஒல்லிய உடல்வாகும் காண்போருடனெல்லாம் மிகுந்த அக்கறையுடன் உரையாடுவதுமான களைத்துப்போன ஒரு பெண்ணின் உருவம் மனக்கண்ணில் நிழலாடுகிறது.

பாடசாலையில் படித்த கதைகளையும் பாடல்களையும் தன்னுடன் படித்தவர்களெல்லாம் ஆசிரியைகளாக ஆகிவிட்ட கதைகளையும் ஆர்வம் இழையோட



கேட்டுக் கொண்டிருப்போம். இடையில் உம்மா தேநீர் ஊற்றிக்கொடுப்பார், நாங்களெல்லாம் வளர்ந்தவுடன் மூமின் தாத்தாவின் கதை கேட்பதற்கான சுவாரசியம் குறைந்துவிட்டது. அதற்கான நேரமும் இல்லையென்றாகிவிட்டது.

அவரை வைத்து பகிடி பண்ணும் கூட்டம் ஊரில் இல்லாமலில்லை. அதைக் கண்டு பல பொழுதுகளில் மனம் வெதும்பியுமிருக்கிறது.

மூமின் தாத்தா உடைந்த சில வார்த்தைகள் பேசுவார். அதை உடைந்த என்று சொல்வதை விட உடைந்த ஆங்கிலம் என்று சொல்வதே பொருத்தமானது. எங்கே கற்றுக் கொண்டார் என்பது இறைவனுக்கே வெளிச்சம்.

பம்பாய் முட்டாய் எனப்படும் பஞ்சு மிட்டாய் செய்வதில் பிரபல்யமானது மூமின் தாத்தாவின் குடும்பம். வாயில் வைத்தவுடனேயே கரைந்துவிடும் அந்த மிட்டாய் பாடசாலைக் காலங்களில் சாப்பிட்டிருக்கிறேன். இப்போதோ அந்தத் தரத்திலும் சுவையிலும் பம்பாய் முட்டாய் கிடைப்பதேயில்லை.

மூமின் தாத்தா நன்றாகப் பாடுவார். படிப்பிலும் முன்னுக்கு இருந்ததாகத் தான் சொல்லுவார்.

மூமின் தாத்தாவுக்கும் ஆசைகள் இருந்திருக்கலாம், எதிர்பார்ப்புகளும் சில கனவுகளும் இருந்திருக்கலாம், அவை வெறும் கானல்நீராய் கரைந்து போயிருக்கலாம்.


எந்த இடத்தில் எது பிழைத்தது என்பது தெரியாது. ஆனால் கடைசி காலத்தில் மிகவும் சிரமப்பட்டார். அப்படிச் சொல்லும்போது மூமின் தாத்தா வாழ்க்கையில் எப்போதுதான் சிரமப்படவில்லை என்ற விடயம் உறுத்துகிறது. ஊரில் பலரும் அவருக்கு உதவிசெய்தது மறக்கப்படக் கூடியதல்ல. எனினும், யானைப் பசிக்கு சோளப்பொரிதாம் அவை.

நோயின் பிடியிலிருந்து விடுபட்டு மரணத்தின் நீண்ட உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் மூமின் தாத்தா இனியேனும் நிம்மதியாக உறங்கட்டும். அல்லாஹ் அவரது பாவங்களை மன்னித்து அவரை பொருந்திக் கொள்ளட்டும்.

மூமின் தாத்தாவை ஒத்த பலர் எமது சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தேவைகளும் சொல்லொணாத் துயரங்களும் இருக்கின்றன. நாம் அவர்களுக்காக என்ன செய்தோம், என்ன செய்யப்போகிறோம்? என்ற காலத்தின் வினாக்களுக்கு நாம் என்ன விடையை வைத்திருக்கிறோம்.

---

# மூட்டு அழற்சிக்கு 'இயன்' மருத்துவ சிகிச்சை




வயதானவர்களில் பெரும்பலானோர் முழங்கால் மூட்டுவலியினால் நீண்டகாலம் துயரப்படுவதை அவதானித்திருப்போம். அவர்களால் நீண்ட தூரம் நடந்துசெல்லவோ, படிகளில் ஏறிச்செல்லவோ, ஒரு குறித்த நேரம் நின்று வேலை செய்யவோ இயலாத நிலையையும் கண்டிருப்போம்.

பெரும்பாலான வயோதிப ஆண்கள் மற்றும் பெண்களைத் தாக்கும் மிகப் பிரதானமான நோய்களுள் மூட்டு அழற்சியும் ஒன்றாகும். எமது உடலில் காணப்படும் மூட்டுகளிலேயே இந்நிலை ஏற்படுகின்றது. பொதுவாக, கை மற்றும் கால் விரல் மூட்டுக்கள், மணிக்கட்டு மூட்டு, முள்ளந்தண்டு மூட்டுக்கள் போன்றவற்றில் இம்மூட்டு அழற்சி ஏற்படுகின்றது. மேலும், கூடுதலாக பாரங்களைத் தாங்கக்கூடிய மூட்டுக்களான தொடை, முழங்கால் மூட்டுக்களிலும் இந்நிலை ஏற்படுகின்றது. ஆய்வறிக்கையொன்றின் பிரகாரம் ஐக்கிய இராச்சியத்தில் 8 மில்லியன் மக்களும் அமெரிக்காவில் மாத்திரம் 27 மில்லியன் மக்களும் மூட்டு வலியினால் அவதிப்படுகின்றனர்.

**மூட்டு அழற்சி ஏற்படுவதற்கான காரணங்கள்**

- அதிகரித்த உடற்பருமன்
- வயோதிபம்
- தொடர்ச்சியான பாரம் உயர்த்தலுடன் தொடர்பான வேலை
- மூட்டுகளில் ஏற்படும் காயங்கள்
- மாதவிடாய் நிறுத்தம்
- தொடர்ச்சியாக நின்றுகொண்டு பணிபுரிதல்

எமது உடலில் பின்வரும் அறிகுறிகளை இனங்கண்டு கொள்வதன் மூலம் மூட்டு அழற்சியிலிருந்து மீளுவதற்கான ஆரம்ப சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியும்:

- காலையில் தூக்கம் விட்டெழுந்ததும் முதல் அரைமணி நேரத்துக்கு மூட்டுக்களில் வலி ஏற்படுதல்
- மூட்டுக்கள் வீங்கிய நிலையில் காணப்படல்
- மூட்டுக்களின் அசைவு வீதம் குறைவடைந்து காணப்படல்
- மூட்டுக்கள் அசையும்போது இலேசான கிளிக் என்ற சத்தம் தோன்றுதல்
- மூட்டுக்களில் எரிவு போன்ற வலி உருவாதல்
- மூட்டுக்களை அசைக்கும்போது அல்லது தொடும்போது தசை இறுக்கத்தை உணர்தல்

எமது உடலில் இரண்டு பெரிய என்புகள் இணையும் மூட்டுக்களின் அந்தங்கள் ஒருவகை கசியிழையத்தினால் சூழப்பட்டிருக்கும் (cartilage). எனவேதான், நாம் மூட்டுக்களை அசைக்கும்போது இவ்விரு என்புகளுக்கிடையில் சுமுகமான அசைவு இடம்பெறுகின்றது. எனினும், இக்கசியிழையமானது சில காரணிகளால் சிதைவடைய ஆரம்பமாகும். இவ்வாறு சிதைவடைய ஆரம்பித்து ஒரு குறிப்பிட்ட காலங்களின் பின்னர் இக்கசியிழையம் முற்றாக இறந்துவிடும். இதன்போது இவ்விரு என்புகளும் ஒன்றுடன் ஒன்று தொடுகையுறும். எனவே, மூட்டுக்கள் அசையும்போது உராய்வு ஒலி உருவாவதை எம்மால் உணரமுடியும். இந்நிலையே மருத்துவத்தில் 'மூட்டு அழற்சி' என அழைக்கப்படுகின்றது.

ஆனால், கசியிழையத்தின் சிதைவடையும் வேகத்தை இடைநிறுத்த முடியும். ஏற்கனவே சிதைவடைந்த இறந்த பகுதியான கசியிழையத்தை மீள உயிர்ப்பிக்க முடியாது. எனவே, உரிய நேரத்தில் சிகிச்சையை பெறுவதன் மூலம் கசியிழையம் முற்றாக இறந்து செயலிழப்பதிலிருந்து எமது உடல் நிலையை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இயன் மருத்துவம் என்றழைக்கப்படும் Physiotherapy சிகிச்சை முறைகளே மூட்டு அழற்சிக்கான மிகச் சிறந்த தீர்வாகும். மிக நவீன பௌதீக சிகிச்சை முறைகளை உள்ளடக்கியதே இயன் மருத்துவமாகும். இது எவ்வித பக்கவிளைவுகளுமற்றவை. இச்சிகிச்சை முறைகள் மூட்டுகளிலுள்ள வலியை குறைப்பதோடு, கசியிழையம் சிதைவடைதலையையும் இடைநிறுத்தி எமது மூட்டுக்களை ஆரோக்கிமான நிலைக்கு இட்டுச் செல்வன. மேலும், வீக்கமடைந்து இறுகிய நிலையில் அசைவுகள் மட்டுப்படுத்தப்பட்ட மூட்டுக்களை தொழிற்படும் நிலைக்கு மீட்டுவர இயன் மருத்துவ சிகிச்சைகள் பெரிதும் பங்களிப்பு செய்கின்றன.

மூதூர் யூ.எம். லுத்பி
பேராதனை பல்கலைக்கழகம்

---

## ஆரோக்கிய தேசம்

சமூக உளவியல் — தொடர் 18

## மாணவர் நினைவாற்றலை அதிகரித்துக்கொள்ள செய்ய வேண்டியவை

01. பொருள் உணர்ந்து படிக்க வேண்டும்

02. படிக்கும் சூழல்

அமைதியான சூழலில் படித்து பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களும் உண்டு. இரைச்சலான சூழலில் படித்து அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களும் இருக்கிறார்கள். படிக்கும் இடத்தை விட மனம் தெளிவாக இருப்பதே முக்கியமாகும்.

03. நினைவுக்குக் கொண்டுவருதல்

படிக்கும் பாடத்தை அடிக்கடி நினைவுக்கு கொண்டுவரல் வேண்டும். மீட்டிப்பார்த்தல் மூலம் பாட விடயத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

04. மனப்பாடம் வேண்டாம்

மனப்பாடம் செய்வதால் பலனில்லை. குறிப்பிட்ட விடயத்தை நன்றாக புரிந்து உள்வாங்கிக்கொள்ள வேண்டும். செயல்முறை கற்றல், கற்பித்தல் நடவடிக்கை மூலமாக மாணவர்கள் விடயத்தை நன்றாக புரிந்துகொள்வர்.

05. அன்றே படித்தல் வேண்டும்

அன்று கற்பதை அன்றே படித்தல் வேண்டும்

மாவனல்லை எம்.வய்.எப். சியாமா
மெய்யியல் உளவியல் துறை பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்தூகானும்...



(13ஆம் பக்கத் தொடர்)

இன்னும், எதிர்வரும் ஜனவரியில் பிரதமர் அர்தூகான் ஈரானுக்கு விஜயம் செய்வதாகவும் பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது. அவ்விஜயத்தில் ஈரானின் அனைத்து புனித இடங்களையும் பிரதமர் தரிசிக்க இருப்பதாகவும் அர்தூகான் வேறொரு சந்தர்ப்பத்தில் பகிரங்கப்படுத்தினார். நிலைமை இவ்வாறிருக்க அர்தூகானின் சமீபத்திய ரஷ்ய விஜயம் வேறொரு திருப்பத்தை ஏற்படுத்தியது. அதாவது, சிரிய விவகாரத்தில் துருக்கிக்கும் ரஷ்யாவிற்குமிடையிலான உறவுகளில் தளம்பல் ஏற்பட்டிருந்தது. ரஷ்ய விஜயத்தின்போது அர்தூகான் ரஷ்யாவுடன் பல பெற்ரோல் மற்றும் உல்லாசப் பயணத்துறை உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டது மாத்திரமின்றி, சிரியாவில் அல்லல்படும் மக்களை காப்பாற்றுவது தொடர்பாகவும் பல கருத்துக்களை பகிர்ந்துகொண்டார். அர்தூகானின் இத்தகைய அதிரடி விஜயங்களை அவதானித்த அரரஃய் அல்யவ்ம் பத்திரிகையின் ஆசிரியரும் அரசியல் விற்பன்னருமான அப்துல் பாரி அத்வான் டெல் போகின்ற போக்கில் அவீவுக்கும் சென்று இறங்கிவிடுவார் போலிருக்கிறது என தனது வியப்பை வெளிப்படுத்தினார்.

உண்மையில், அர்தூகான் இவ்வறான மேற்கு நாடுகளுக்கு சார்பான மாற்றுப் பாதையை தெரிவுசெய்ய பல காரணங்கள் உண்டு. அதாவது, இன்று இஸ்லாமிய இயக்கங்களின் அரசியல் கட்சிகள் மிக ஆபத்தான முறையில் ஓரங்கட்டப்படும் அபாயம் நிலவுகின்றது. எனவே, நாளை மீண்டுமோர் இஸ்லாமிய அரசியல் எழுச்சி ஏற்பட வேண்டுமாக இருந்தால், அதனை அடைவதற்கு பலமான பொருளாதார, அரசியல் பலத்தைக் கொண்ட நாடு என்ற வகையில் துருக்கியின் அர்தூகானின் அரசு நிலைப்பது இன்றியமையாதது. எனவே, இக்கட்டான சூல் நிலையில் தனது அரசை பாதுகாப்பது என்பது, அர்தூகானின் அரசியல் எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக என்று சொல்வதைவிட, முஸ்லிம் உலகின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டே மேற்கிற்கு சார்பான மாற்றுப் பாதையில் அர்தூகான் நகர்கிறார் என புரிந்துகொள்ள முடியும்.

## முஸ்லிம்களை விரட்டியடிக்க....



முன் பக்கத் தொடர்

இவர்கள் அனைவரது காணிகளுக்கும் 100 வருடங்களுக்கு முற்பட்ட காணி உறுதிப் பத்திரங்கள் உள்ளன. இருந்தபோதும் குறித்த விஹாரை புனித பூமி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து முஸ்லிம்கள் உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் கோரி ஆறு பௌத்த தேரர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.

பின்னர், இந்த உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டாலும் திட்டமிட்ட அடிப்படையிலான இவர்களது செயற்பாடுகள் குறித்து அச்சநிலை உருவாகியுள்ளது.

தெவனகலை விஹாரையின் 1876 ஆம் ஆண்டு காணி வரைபடத்தில் விஹாரையை சூழவுள்ள 73 ஏக்கர் காணிகளும் குறித்த விஹாரைக்கு சொந்தமானதாகக் குறிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த எல்லைக்குள் குடியிருக்கும் முஸ்லிம்கள் வெளியேற வேண்டும் எனவுமே இந்த தேரர் தரப்பால் கோரப்பட்டுள்ளது.

அது உண்மையானால் விஹாரைக்கு சொந்தமான காணியில் வசிக்கும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களை விடுத்து முஸ்லிம்களை மட்டும் வெளியேறக் கோருவது நியாயமற்றது என பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

குறித்த விஹாரையை சூழவுள்ள 400 மீற்றர் பரப்பளவான பிரதேசம் கடந்த 2004 ஆம் ஆண்டு தொல்பொருள் ஆய்வு திணைக்களத்தினால் தொல்பொருள் விஷேட தளமாக பிரகடனப்படுத்தப்பட்டது. குறித்த பரப்பளவில் கட்டிட நிர்மாணப் பணிகளோ, புனர்நிர்மாணங்களே மேற்கொள்ளப்பட வேண்டுமானால் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என கோரப்பட்டிருந்தது.

இச்சட்டத்தில் முஸ்லிம்கள், பௌத்தர்கள் என எந்த வரையறையும் இல்லாத போதும் முஸ்லிம்களை மாத்திரம் வெளியேறிக் கோரும் அடாவடித்தனத்துக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றன.

கடந்த காலங்களிலும் இப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களை வம்புக்கிழுக்கும் பல செயற்பாடுகளில் ஒரு சில இனவாதக் குழுக்கள் செயற்பட்டு வந்ததாகவும் அது உரிய முறையில் அணுகப்பட்டதால் இனவாதிகள் தோல்வி கண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் வரிசையிலேயே தற்போதைய உண்ணாவிரத போராட்டமும் முன்னெடுக்கப்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

விஹாரைக்கென பிரகடனப்படுத்தப்பட்ட எல்லைக்குள் பெரும்பான்மையாக வாழ்கின்ற சிங்களவர்கள் சிலர் அவ்வெல்லைக்குள் வசிக்கும் முஸ்லிம் குடும்பங்கள் மீது பழியைப்போட்டு தப்பித்துக் கொள்ளும் திட்டமாகவும் இது இருக்கலாமென பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிடுகின்றனர்.

முஸ்லிம்களை வெளியேறக் கோரும் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் அப்பிரதேசத்தை சேர்ந்தவர்களன்றி, வெளிப் பிரதேசத்திலிருந்து வந்தவர்களாக காணப்படுவதினால் இச்செயற்பாட்டின் பின்னணியில் வேறு திட்டமிட்ட காய்நகர்த்தல்கள் இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

## மாதம்பையில் வீடு விற்பனைக்கு

மாதம்பை பிரதேசத்தில் பள்ளிவாசல், பாடசாலை உள்ளிட்ட வசதிகளுடன் முஸ்லிம்கள் செறிந்துவாழும் பகுதியிலுள்ள வீடொன்று விற்பனைக்கு உண்டு. விலை விபரம் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்: 0770684816, 0755697596

## பால்மா விலை...

முன் பக்கத் தொடர்

இந்த வேண்டுகோள் தொடர்பில் விலை கட்டுப்பாட்டுக்குழு கூட்டத்தில் ஆராயவுள்ளதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.எம்.ஏ. டக்ளஸ் கூறியுள்ளார்.

உலக சந்தையில் பால்மா விலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை கருத்திற்கொண்டு இலங்கையில் பால்மா விலைகள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

## அங்கோலாவில்...

முன் பக்கத் தொடர்

நடவ்டிக்கையாகவே இது அமைந்திருப்பதாக அங்கோலாவின் நீதி மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் ரொசா க்ரூஸ் தெரிவித்துள்ளார்.

அங்கோலா கலாசாரத்திற்கு முரணான வழிபாடுகளுக்கு எதிராக தயவின்றி போராட வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். சட்டவிரோதமான ஏனைய நம்பிக்கைகள் போன்று இஸ்லாமும் கருதப்படுவதோடு அவர்களது வழிபாட்டு தலங்கள் மூடப்பட வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தடை விதிக்கப்பட்டிருக்கும் மதப் பிரிவுகள் பற்றிய பட்டியலை நீதி மற்றும் மனித உரிமைகள் அமைச்சு அங்கோலா பத்திரிகையான ஜொர்னல் டி அங்கோலாவில் வெளியிட்டுள்ளது. இந்த பிரிவுகளுக்கு மத வழிபாடுகளில் ஈடுபடுவது தடுக்கப்படுகிறது. இது குறித்து அங்கோல ஜனாதிபதி எடுவர்டோ டொஸ், இது எமது நாட்டில் இஸ்லாமிய தாக்கத்தை முடிவுக்கு கொண்டுவரும் இறுதிக் கட்டம் என்றார்.

ஆனால் இச்செய்தியில் எந்தவொரு உண்மையும் இல்லையென்று அமெரிக்காவிலுள்ள அங்கோல தூதரகம் தெரிவித்திருப்பதாகவும் வேறு செய்திகள் குறிப்பிடுகின்றன.

அங்கோலாவில் 80,000 - 90,000 க்கு இடையிலான முஸ்லிம்களே இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது.

## பலஸ்தீனர்களை...

முன் பக்கத் தொடர்

உடனடியாக நிறுத்த ஐ.நா. சபையே தலையிடு! என கோஷம் எழுப்பியது ஜே.வி.பி.

சர்வதேச பலஸ்தீன் நட்புறவு தினமான நவம்பர் 29 ஆம் திக்தி கொழும்பு மருதானை ஜும்ஆ பள்ளிவாசல் முன் நடைபெற்ற பலஸ்தீன மக்களுக்கு ஆதரவான கையெழுத்து வேட்டை மற்றும் கண்டனக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜே.வி.பி. இன்.சோஷலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க, மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஆப்தீன், பலஸ்தீன் நாட்டின் தூதுவர் கலாநிதி அன்வர் அல்அகா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கை, சிங்களவர்களுக்கு மட்டும் சொந்தமான நாடல்ல. இங்கு வாழும் அனைத்து இன மக்களுக்குமான நாடு. சிங்களவர்களுக்கு உரிமை இருப்பதுபோலவே முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் நூறுவீத உரிமையிருக்கிறது. இந்த நாட்டில் யார் முதலில் குடியேறினர் என்பது முக்கியமல்ல. தற்போது இங்கு வாழும் அனைத்து இனத்தவரும் இந்நாட்டு பிரஜைகளே.

அரசாங்கத்தினுள் சிலர் சிறு சிறு இனவாதக் குழுக்களையும் மதவாத அமைப்புகளையும் வைத்துக்கொண்டு இனவாதத்தைத் தூண்டி அரசியல் செய்துவருகின்றனர்.

பலஸ்தீன் மக்களின் அடிப்படை உரிமைகள் நசுக்கப்பட்டு சுதந்திரமும் பறிக்கப்பட்டிருக்கின்றன. பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் மற்றும் சியோனிஷ சக்திகளின் அத்துமீறல் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது. இதற்கு எதிராக நாம் என்றும் குரல் கொடுத்துக் கொண்டே இருப்போம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

## விரும்பினால் எழுதுங்கள்...

முன் பக்கத் தொடர்

இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் இதுபற்றி வினவிய போது, விரும்பினால் எழுதுங்கள் இல்லாவிட்டால் திரும்பிச் செல்லுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதில் மொழிக்கொள்கை பின்பற்றப்பட வேண்டும் என பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும் சில தீய சக்திகள் வேண்டுமென்றே இனங்களுக்கிடையில் விரிசல்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய நடவடிக்கைகளால் அனைத்து இலங்கையர்களுக்குமான சமவாய்ப்புகளும் எதிர்காலத்தில் இல்லாதுபோகலாம்.

## தொலைபேசி...

முன் பக்கத் தொடர்

தொடர்புகள் வெளிநாட்டு ஒற்று சேவையினரால் இரகசியமாக ஒட்டுக் கேட்கப்படுவதாக அண்மையில் செய்தி வெளியாகியிருந்தது. இந்த நிலையிலேயே தற்போது ஜனாதிபதியின் தொலைபேசி தொடர்பும் ஒட்டுக்கேட்கப்படுகிறதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்பு பிரிவின் ஒற்று சேவைப் பிரிவினால் சுமார் 35 கும் மேற்பட்ட நாடுகளின் அரச தலைவர்களின் தொலைபேசி தொடர்புகள் ஒட்டுக்கேட்கப்படுவதாக அண்மையில் செய்தி வெளியாகியிருந்தது.

## பொதுநலவாய மாநாடு...

(05ஆம் பக்கத் தொடர்)

களில் 40 வீதமுமே பயன்படுத்தப்பட்டன என்று உல்லாசப் பிரயாண ஹோட்டல் அமைப்பின் தலைவர் சாந்தி குமார் தெரிவித்துள்ளார். 4000 ஹோட்டல் அறைகளில் ஆகக் கூடியதாக 2000 அல்லது 2100 அறைகளே நிரம்பியிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார். டெய்லி மிரர் பத்திரிகையில் இது பற்றி எழுதிய, பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர்: CHOGM இல்லாதிருந்தால் பொதுவாக நவம்பரில் 70-80 வீதம் வரை நிறைந்திருக்கும் என்று கூறியுள்ளார். எது, எவ்வாறாயினும் நடந்து முடிந்த நன்மைகளை அறுவடை செய்ய அரசாங்கம் ஆர்வம் கொள்ளாவிடின் பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய கதையாகவே வந்துசேரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புறவியல்

## கிழக்குத் தென்கோடி

ஏ.எம்.எம். ஸியாத் - இறக்காமம்

(சென்ற இதழின் தொடர்)



*அல்லையில பன்புழுங்கி*
*ஆபரணப் பாய் எழச்சி*
*போட்டுப் படுக்க ஒரு*
*புள்ளயத் தா ரகுமானே*

வயலும் வயல்சார்ந்த இடம் மருதம் ஆகும். மருத நிலச் சூழல் மிகுந்திருக்கும் பகுதிகளில் வயலோடு தொடர்புடைய பல தொழில்கள் காணப்பட்டன. வரம்பு கொத்துதல், வரம்பு கட்டுதல், அரவடித்தல், பல கையிழுத்தல், விதைத்தல், அனை போடல், எண்ணெய் அடித்தல், புல் புடுங்குதல், வெள்ளாம வெட்டுதல், உப்படி புரட்டுதல், கட்டுக் கட்டுதல், சூடடித்தல் என பலவற்றைக் குறிப்பிடலாம். அவற்றுள் பெண்களும் தமது குடும்பச் சுமைகளைப் போக்குவதற்காக சில வேலைகளில் ஈடுபடுவர். குறிப்பாக, புல் புடுங்குதல், உப்பட்டி புரட்டுதல் முதலானவற்றைக் குறிப்பிடலாம். தொடர்ச்சியாக குனிந்து நிமிர்ந்து, குனிந்து நிமிர்ந்து செய்யும் வேலையாக இருப்பதால், இது இடுப்பு வலியை ஏற்படுத்தக்கூடிய கடினமான தொழிலாகவே காணப்படுகின்றது. தனது வறுமையைப் போக்கிக்கொள்ள காலங்காலமாக புல் புடுங்கும் தொழிலைச் செய்யும் ஓர் ஏழைப் பெண்ணின் வாய்விட்டுச் சென்ற பாடலில், 'இறைவனின் விதி இப்படி இருந்தால் நாம் என்ன செய்யலாம்?' என்ற தொனி வெளிப் பாட்டை பின்வரும் பாடலில் நன்குணர லாம்:

*புல்லுப் புடுங்கி*
*பொறகாலதான் மேச்சி*
*அள்ளிச் செமக்க இந்த*
*ஆதி உட்ட கட்டளையோ?*

நாட்டாரியலில் பிரதான இடம் வகிக்கும் அம்சமாக பாடல்கள்/ கவிகள் காணப்படுகின்றன. மனித வாழ்க்கைக் கட்டங்கள் முழுவதையும் பிரதிபலிக்கும் வண்ணம் இவை காணப்படுவதே இதற்கு காரணமாகும். மனிதன் இவ்வுலகில் காலடி வைத்தது முதல் மரணமடையும் வரையான எல்மா நிலைகளுக்கும் கவிகள் ஊற்றெடுத்துப் பாய்ந்தன.

நாட்டார் பாடல்களை வாய்மொழிப் பாட்டு, ஏடறியாய் பாடல், கிராமத்துப் பாடல், நாட்டுப் பாடல், நாட்டுக் கவி, நாட்டுப்புறப் பாடல், எழுதாப் பாடல் என பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டபோதும் நாட்டாரியலை ஆராய்வோர், 'நாட்டார் பாடல்' என்ற தொடரையே கையாள்வதைக் காணமுடிகின்றது.

நாட்டார் பாடல்களை மனித மனத்தினின்றும் வெளிப்படும் உணர்ச்சிப் பிரவாகமாகக் கொள்ளலாம். நாளாந்தம் பேசும் பேச்சுத் தொடர்களும் உவமைகளும் செப்பனிடப்படா மொழிவடிவங்களும் ஓசை நயமும் வெளிப்படும் உணர்ச்சிக்கு வலுச்சேர்க்கின்றன.

கிராமத்து மக்கள் என்றாலே, இயற்கையோடு ஒன்றியவர்கள் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். இயற்கையின் ஈடுபாடும் இயல்பான அறிவும் அனுபவப் பேறுகளும் நாட்டார் பாடல்களை வெளித்தள்ளின எனலாம்.

எங்கோவோர் மூலையில் ஒருவன் பாடிய பாடல் வாய்மொழி, வாய்மொழியாகப் பரம்பரை, பரம்பரையாக கொண்டு, வரப்பட்டு இவ்வியல் வளர்ந்து வந்துள்ளது. பரம்பரை ரீதியான வாய்மாறுகைகள் பாடல்களில் கூட்டல் குறைப்புகளைச் செய்த போதும் அதன் உண்மை ஓசை வடிவம் குன்றிவிடாத வகையில் அது காணப்படுவது சிறப்பம்சமாகும். இதற்கு ஒரு சிறிய உதாரணத்தைப் பார்ப்போம்.

முறைக்கார மச்சான் ஒருவரை திருமணம் செய்ய விரும்பியிருக்கும்போது, அந்த முறைக்கார மச்சானோ வேறொரு பெண்ணை விரும்பியதைக் கேள்வியுற்று மாமன் மகளொருத்தி (மச்சி முறைக்காரி) இப்படிப்பாடுகிறாள்:

*ஓடையில்போற தண்ணி*
*தும்பிவிழும்*
*தூசிவிழும்*
*ஊட்டுக்கு வாங்க மச்சான்*
*நல்லதண்ணி நான்தாறன்.*

இப்பாடலில் இடம்பெறும் நல்லதண்ணி என்ற தொடருக்குப் பதிலாக 'குளுந்த தண்ணி' என்னும் தொடரைப் பயன்படுத்தி சிலர் பாடுகின்றனர். ஆனால், ஓசை ஒரே விதமாகவே காணப்படுகின்றது. நாட்டார் பாடல்களைப் பலரும் பலவிதமாக வகைமை செய்துள்ளனர். அவர்களின் தேடல்களுக்குட்பட்ட பாடல்களை வைத்து இவ் வகைமைகள் இடம்பெற்றுள்ளன என கருத முடியும். இதுபோன்றே தென்கிழக்குப் பகுதி முஸ்லிம்களால் வழங்கப்படும் பாடல்களையும் பின்வருமாறு வகைமை செய்யலாம்:

இறைநம்பிக்கைப் பாடல்கள்

*ஏகத்து வப் பாடல்கள்*
*தலாட்டுப் பாடல்கள்*
*விளையாட்டுப் பாடல்கள்*
*தொழிற் பாடல்கள்*
*காதல் பாடல்கள்*
*வாதுப் பாடல்கள்*
*நையாண்டிப் பாடல்கள்*
*பொல்லடிப் பாடல்கள்*
*வேறு பாடல்கள்*

# புரூணையில் சில நாட்கள்...

தொடர்-15



——பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com

இன்னொரு ரகசியம் தெரிமா உங்களுக்கு...?

சில பணக்காரர்களின் மகிமையை விளங்கப்படுத்த, 'தங்கத் தட்டில் சாப்பிடுபவர்' என்று சொல்வார்கள் தெரியுமா? புரூணை சுல்தான் இதற்கெல்லாம் மாற்றமானவர். சாப்பிடும் தட்டை விடுங்க; அவரது விமானத்திலுள்ள கழிவறையின் 'கொமட்' தங்கத்தால் செய்யப்பட்டிருக்கிறதாம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

அதுதான் அப்படியென்றால், சுல்தான் முடிவெட்டிக் கொள்வதற்காக 15,000 ஸ்ட்ரேலிங் பவுண்கள் செலவழித்து லண்டனை சேர்ந்த ஒரு சிகை திருத்தும் தொழிலாளியை விமானத்தில் அழைத்து வரச் செய்கிறாராம். ஒருமுறை சிங்கப்பூர் எயார்லைன்ஸ் விமானத்தில் தனியறை பதிவுசெய்து கென் மொடஸ்தோ என்ற சிகை திருத்துபவரை லண்டனிலிருந்து வரவழைத்தாராம். அவருக்கு பல ஆயிரம் டொலர்கள் கட்டணமாக கொடுக்கிறார். லண்டனில் 30 பவுண்கள் மட்டுமே வசூலிக்கும் கென், சுல்தானுக்கு 16 ஆண்டுகளாக முடிவெட்டுகிறார். ஹூம்... உலகத்தில் கொடுத்துவைத்த கத்தரிக்கோல் கென் மொடஸ்தோவுடையதுதான்.

கடலில் மிதக்கும் கப்பல்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால், கடலில் மிதக்கும் மாளிகைபற்றி கேள்விப்பட்டிருக்க முடியாது. ஆம், மத்திய தரைக் கடலில் மிதக்கும் மாளிகையொன்றை சொந்தமாக வைத்திருக்கும் நபர்தான் புரூணை சுல்தான். லண்டனில் அவருக்கே மட்டுமான மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டுள்ளது என்றால் மிதக்கும் மாளிகையைப் பார்த்து எதற்கு ஆச்சரியப்பட வேண்டும்? உலகின் பல நாடுகளிலுமுள்ள பெரு நகரங்களில் தங்குவதற்காக சொந்த மாளிகைகள் அமைத்திருக்கிறார் சுல்தான்.

கடந்த இதழில் சுல்தானுக்கு ஆயிரக் கணக்கான கார்கள் இருப்பதை எழுதியிருந்தேனல்லவா? அதை வாசித்த வாசகர் ஒருவர் கேட்டார், இத்தனை கார்களையும் எப்படி வைத்து ஓட்டுகிறார் என்று. சுல்தானின் மாளிகையில் 1888 அறைகள் இருக்கின்றன. ஓர் இரவில் ஓர் அறையில் தூங்கினாலும்கூட அனைத்து அறைகளிலும் தூங்கிமுடிக்க ஐந்து ஆண்டுகளாவது செல்லும். அத்தனை அறைகளிலும் அவர் தூங்கியெழும்புகிறாரா என்ன?

இப்படி படாடோபமாக வாழும் சுல்தான் மீது எதிர்க்கட்சிகள் தமது எதிர்ப்புக் கணைகளை அள்ளி வீசிக்கொண்டே இருக்கும். அரச சொத்துக்களை ஏப்பமிடுகிறார் என்று எதிர்ப்புத் தெரிவித்து நாட்டில் மூலை முடுக்கிலுள்ள சுவர்களிலெல்லாம் எதிர்ப்புப் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கும். அடிக்கடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்ற காட்சிகளே தொடர்ந்திருக்கும். புரட்டும் பக்கங்களெல்லாம் பத்திரிகைகளில் அரச சொத்துக்கள் துஸ்பிரயோகம் மற்றும் ஊழல் குறித்த செய்திகளே நிறைந்திருக்கும். வானொலிகளும் தொலைக்காட்சிகளும் இவற்றையே புட்டுப் புட்டு வைக்கும்... என்றெல்லாம் நீங்கள் நினைத்தீர்களென்றால் அது மகா தவறு.

நாட்டு மக்களுக்கு சுல்தானிடம் பெரும் மதிப்பிருக்கிறது. அவரை மிகவும் மதிக்கிறார்கள், கண்ணியத்துக்குரியவராக பார்க்கிறார்கள். அவரும் நாட்டு மக்களுக்காக அள்ளி இறைக்கிறார். நாட்டு மக்கள் விடயத்தில் கவனமெடுக்கிறார். இதனால் மக்களெல்லாம் கப்சிப் ஆகிவிடுவார்கள்.

நாட்டு வளம் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப பகிரப்படுகிறது. நாட்டில் எந்தவொரு நபருக்கும் தனிநபர் வருமானவரி இல்லையென்றால் பார்க்க வேண்டியதுதான்.

இனியென்ன எத்தனை வருடங்களானாலும் அவர்தான் சுல்தான்!

அவர் மரணித்ததன் பின்னரே அவரது மகனான டாக்டர் அல் முஹ்ததீ பில்லா (Al Muhtadee Billah) 31 ஆவது சுல்தானாக பதவியேற்பார். தற்போது அவருக்கு 38 வயதேதான் ஆகிறது.


இது சுல்தான் ஹஸனல் பொல்கியாவின் செல்வ செழிப்பு பற்றிய சிறு குறிப்பு மாத்திரந்தான். அவரது தந்தை பற்றியே 400 பக்க புத்தகம் ஒன்றிருக்கிறது என்றால் பாருங்கள்.

இன்னொரு செய்தி என்ன தெரியுமா? இந்தப் புத்தகத்தை எழுதியவர் நம் நாட்டுக்காரர்தான் என்றால் நம்புவீர்களா? இதே போன்று சுல்தான் பொல்கியா பற்றிய புத்தகமொன்றும் வெளிவரவிருக்கிறது. அதனை எழுதப்போவதும் நம்நாட்டைச் சேர்ந்த அதே கலாநிதிதான். இது இலங்கைக்கு பெருமையல்லவா? புரூணையிலுள்ள அந்த கலாநிதியின் வீட்டுக்குச் சென்று வட்டிலப்பம் சாப்பிட்ட கதையெல்லாம் இருக்கிறது.

அதுசரி இவ்வளவு சொத்துக்களையும் சுல்தான் எங்கிருந்து சம்பாதிக்கிறார். அந்த வழிமுறையைக் கொஞ்சம் சொன்னால் நாங்களும் பணக்காரர்களாகலாமே என்று கேட்கிறீர்களா?

மண்வெட்டியை கையிலெடுங்கள் சொல்கிறேன்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரம்



நேரம் நள்ளிரவை அண்மித்திருந்தது.

வீட்டுக்கு வந்துசேர வேண்டிய கடைசி நபரும் வந்துவிட்டதால் வீட்டு விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டுவிட்டன.

ஸியாதின் வீட்டு விளக்கு மட்டும் இன்னும் விழித்துக் கொண்டிருக்கிறது. அந்த விளக்கைப்போல ஷெரோஸியாவும் அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள்.

யாரோ தூக்கம்வராத இளைஞன் ஏழாவது அறிவுப் பாடலொன்றை நள்ளிரவு என்பதையும் மறந்து முழங்கி விட்டிருந்தான்.

நான் ஒரு முடிவு பண்ணிட்டேன்னா என் பேச்ச நானே கேக்கமாட்டேன், பக்கத்து வீட்டில் விஜய் சவால்விட்டுக் கொண்டிருந்தார்.

தொலைக்காட்சி அலைவரிசைகளும் ஒவ்வொன்றாக தூங்கி வழியத் துவங்கிவிட்டன. ரூபவாஹினியும் நமோ, நமோ மாதா பாட ஆரம்பித்துவிட்டது.

அலைவரிசைகளை மாற்றிப் பார்த்தாள். அவளது மனசைப்போலவே வரண்டு போயிருந்தது. வெறுப்போடு ஓப் செய்துவிட்டு ரெமோட்டை அருகில் வைத்தாள். மனது எரிச்சலோடு புகை கப்பிக்கொண்டிருந்தது.

இன்றாவது நேர காலத்துடன் வீடு வருமாறு சொல்லியிருந்தாள், இன்னும் ஆளில்லை. நடுச்சாமம் ஆகிறது. ஒவ்வொரு நாளும் இப்படித்தான் கழிகிறது. பல்துலக்குவான். குளிப்பான். ரெடியாகிப் போய்விடுவான். திரும்பி வரும்போது, நள்ளிரவாகிவிடும்.

வெள்ளிக்கிழமை மட்டுந்தான் அவன் கடை மூடுவது. கடை மூடப்படுமே தவிர, அவனுக்கு விடுமுறை இல்லை. சாமான் எடுக்கப்போவது, வியாபாரக் கணக்குகளைப் பார்ப்பது, பேங்குக்குப் போவது, கடையைத் துப்புரவு செய்வது இப்படி, வெள்ளிக்கிழமை விடுமுறையில் அவனுக்கென்றொரு வேலைப்பட்டியல் இருக்கும்.

இந்த லட்சணத்தில் கணவன் மனைவி மனம்விட்டுப் பேசிக்கொள்வது, பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவது, குடும்பத்தோடு ஓய்வாக வெளியிடங்களுக்கு செல்வது, இவற்றுக்கெல்லாம் எங்கே நேரம் இருக்கப்போகிறது?

டரு...

த்ரிவீல் சத்தம். ஸியாத் வந்துவிட்டான். கதவு திறக்கப்படுகிறது. வியர்வை நாற்றமும் பலசரக்கு வாசமும் கலந்து வீச உள்ளே நுழைகிறான். களைப்பினதும் சோர்வினதும் ரேகை அவனது முகத்தில் கூடுகட்டி அமர்ந்திருக்கின்றது.

"ஏன் இவ்வளவு லேட்?"

"இப்பதான் வேலகள் முடிஞ்சது"

"நாளைக்கு காலைல செய்யலாந்தானே?"

"இல்ல.. நாளைக் காலைல வேற வேலைகள் இருக்கு"

எதுவித உயிர்த்துடிப்பும் இல்லாத உரையாடல்.

"நுஸ்ரிக்கு காய்ச்சல். அந்தியிலிருந்து அழுதுகொண்டிருந்து இப்பதான் தூங்குது"

அக்கறையோடு கூடிய பதிலையும் பரிவான சில வார்த்தைகளையும் அவள் எதிர்பார்த்தாள்.

ஆனால், எறிப்பது போன்ற பார்வை ஒன்று மட்டுமே ஸியாதிடமிருந்து பதிலாகக் கிடைத்தது. அந்தப் பார்வையின் சூட்டில் தான் சாம்பலாகிப் போவதாக உணர்ந்தாள் ஷெரோஸியா.

"நான் கடையில இருந்து கஷ்டப்பட்டுட்டு வாறன். இங்க வந்ததும் கொஞ்சமும் நிம்மதியா இருக்க விடறாளில்லயே... கொஞ்ச நேரம் தனியாக இருக்க விடமாட்டாளா?"

இது, ஸியாத் தனக்குத்தானே கேட்ட கேள்வி.

நேராகப் படுக்கையறைக்குச் சென்றவன் உடைகளை மாற்றக்கூட இல்லை கட்டிலில் சாய்ந்தான்.

"நுஸ்ரிக்கு ஏன் சொகமில்ல. அதிக நேரம் கஷ்டப்பட்டிருப்பாளோ"

இது அவனது அடுத்த கேள்வி.

"சீ சீ.. நான் ஏன் கேக்கனும்? தினமும் நாய் மாதிரி கஷ்டப்பட்டு உழைச்சிட்டு வாறன். என்னப்பத்தி எந்த அக்கறையும் இவளுக்கில்லாமரிக்ககுள்ள...?" உடனே மனதை மாற்றிக்கொண்டான்.

பசி வயிற்றைக் கிள்ளியது. எரிச்சலும் தூக்க மயக்கமும் கிள்ளிய பசியை தள்ளிவைத்தன. கண்களை மூடினான். உறக்கம் அவனை ஆறத் தழுவிக்கொண்டது.

மூழமூழமூழ...

இது அவனது நீண்ட குரட்டை

ஷெரோஸியா அறைக்கு வருகிறள். உடுத்திருந்த ஆடையைக்கூட மாற்றிக் கொள்ளாமல் ஸியாத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

"பாவம், பசியோடு தூங்குறாரு..."

அவன் இருந்த களைப்பான தோற்றம் அவளை உறுத்தியது.

"சீ சீ... ஏன் நான் அவர் மேல பாவப்படனும்..? பெற்ற பிள்ளக்கி சொகமில்லண்டு சொன்னதக் கூட அலட்டிக்காத மனுஷன் மேல..." பரிவுகாட்ட முனைந்த மனதுக்கு அவளும் கடிவாளமிட்டாள்.

அவர்களது இத்தனை ஆண்டுகால திருமண வாழ்க்கை இப்படி பிடிப்பற்றதாகத்தான் கழிந்திருக்கிறது. சாப்பிட்டார்கள், உடுத்தினார்கள், குறைசொல்ல முடியாதளவு சராசரி வசதிகள் இருக்கவே செய்தன. ஆனாலும் நெருடல்கள் ஒரு பிடிப்பில்லை.

**ரிஸா ஜவ்பா**

தூங்கிக் கொண்டிருந்த ஸியாதை எழுப்பி சாப்பிடச் சொல்லலாமா? வேண்டாம். நாளை கடைக்குப் போகனும். என்ன ஏன் அனாவசியமா தொந்தரவு செய்ற என்று சீறி விழுந்தாலும் விழுவான். விளக்குகளை அணைத்துவிட்டு அவளும் அருகில் வந்து படுத்துக்கொண்டாள்.

அவர்கள் திருமணம் முடித்து சந்தோஷமாக கழிந்த ஆரம்ப நாட்கள் அவளுக்கு ஞாபகம் வந்ததோ, என்னவோ? ஓர் உஷ்னமான பெருமூச்சு அவள் ஆழ் மனதிலிருந்து வெளிப்பட்டது.

ஸியாதின் வீட்டு விளக்கு இப்போது அணைந்துவிட்டது. வாழத்தெரியாத மனிதர்கள் உலகத்தில் இத்தனை பேர் வாழ்கிறார்களோ என்ற கவலையில் பீறிட்டுப் பாயும் கண்ணீரைத் தவிர்க்க பகீரத பிரயத்தனம் செய்வதுபோல், ஏழாம் பிறை நிலவு மட்டும் கண்களை சிமிட்டிக் கொண்டே விழித்திருக்கிறது.

சிறு குறிப்பு

# முப்லிஹாவின் சிறுவர் கானங்கள்




நூல்: முப்லிஹாவின் சிறுவர் கானங்கள்

பக்கங்கள்: 69

விலை: 200

தொடர்புகளுக்கு: 0262236487

நெஞ்சு நிறைய சொற்சேர்ந்து
அஞ்சு விரலில் பேனா இடுக்கி
கெஞ்சி நின்றேன் கவிதைகேட்டு
எஞ்சி நின்றது ஒன்றுமில்லை

நான் சிறுவர் பாடலொன்றை எழுத முயற்சித்து முட்டித் திரும்பிய பொழுதில் எழுதிய கவிதை இது. சிறுவர் இலக்கியம் என்பது தனியோர் உலகம். அந்த உலகத்தை ஆட்சிசெய்ய கவி ரசனையும் கரிசனையும் வேண்டும். இப்படிப்பட்டவர்கள்தான் சிறுவர் இலக்கிய உலகில் சொந்தக் காலில் நிற்கிறார்கள்.

ஈழத்தில் அப்படிப்பட்டவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அதிலும் பெண்படைப்பாளிகள் சொற்ப மானவர்களே. கிழக்கில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய பெண் எழுத்தாளர்களில் ஜெனீரா ஹைருல் அமான் குறிப்பிட்டு சொல்லக்கூடியவர்.

சிறுவர் உலகுக்காக ஆறு பிரசவங்கள் செய்துள்ளார். 'முப்லிஹாவின் சிறுவர் கானங்கள்' அவரது தற்போதய பிரசவம்.

ஆசிரியையாக மாணவ மொட்டுக்களுடன் காலங்கடத்தும் அனுபவந்தான் அவரது உள்ளத்தையும் தொட்டு இப்படி கவி வரிகளாகக் கொட்டுகிறதோ ஜெனீராவிற்கு. இவர் வியக்கும்படி 69 பக்கங்களில் சிறுவர் உலகத்தை சுட்டியிருக்கிறார்; சுற்றியிருக்கிறார்.

முப்பத்தைந்து பாடல்களல்ல முத்துக்களைப் பதித்திருக்கிறார். சிறுவர்கள் எப்போதும் சூழலிலுள்ள உயிரினங்களுடன் ஆளப்பதிந்த உறவை கொண்டிருப்பவர்கள். அவற்றின் செயற்பாடுகளை நுணுக்கமாக ஆராய்பவர்கள். இந்த உளவியலை புரிந்துகொண்ட நூலாசிரியர் ரோசா, புள்ளிமான், தவளை வண்ணத்துப்பூச்சி, சேவல், பருந்து வயற்காட்சி மர நடுகை என பார்த்துப் பார்த்து தலைப்பிட்டு, பாடல்களாய் கோர்த்திருக்கிறார்.

பொருத்தமான படங்களிட்டு பாட்டுக் குழம்புக்கு கூட்டு சேர்த்திருக்கிறார். நாங்கள் 'விலை' கொடுக்கத் தயாராக இருந்தால் அந்தப் படங்களை மாணவர் உள்ளங்கள் கவரும்படி அவர் களர் களராய் பிரசுரிக்க தயங்கமாட்டார் என்பது எனது கருத்து.


ஜெனீரா அமானின் முப்லிஹாவை வாங்கிப் போடுங்கள் சுதி தாங்கா உங்கள் சிறுசுகளின் ஊஞ்சல்தானே ஆடும்.

ஆசிரியை ஜெனீராவின் பேனாவின் ஆரோக்கியத்துக்கும் இன்னும் பல இலக்கிய பிரசவிப்புகளுக்கும் வாழ்த்துகள்.

-பஷீர் அலி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவ்விய கனவு உறவுகள் தேடி...



பனிப் பொழுதில்
கண் சிமிட்டும் வெளிச்சமதில்
கண்ணாடி முன்னெழுந்து
கனவுகளை வாசித்தேன்

கடைசி இரவது
கலையாத கனவொன்று
நீளும் நிலாவின்
விடியாத பின்னிரவில்
சிறகடித்துப் பறந்து
சின்னாபின்னமானேன்

கனதியான இரவது
கறுப்பு நிலா
கனமான முள்வேலி
கண் சிமிட்டும் நேரத்தில்
குதித்தவன்
அருகேயே வந்துவிட்டான்

பாதி வழுக்கை
இருட்டின் நிறம்
வெட்டாத தலைமுடி
வெடுக்கென்ற வாசம்

மல்லிகை மணத்தில்
வளையும் பாம்புகள் வேறு!

பணியார வாசத்தில்
கூவியழும் பேய்களுடன்
தெருவோர நாய்களும்

கூட்டமாய்த்
துரத்தின

விழி பிதுங்கிய நிமிடம்
முன்வைக்க இடமில்லை
பின்வாங்க துணியவில்லை

மக்கிப்போன சிலந்தி வலையில்
இலையானின் கீறல்களும்
அத்துமீறி நுழைந்த
வௌவாலின் அலறல்களும்

காற்று நிறைந்த பலூன்கள்
காதோரம் வெடித்தன

தூரத்தில் கல்வெட்டு
மயான தேசத்தில்
மரணித்த தகவலது
எனது பெயர்
கொட்டையெழுத்தில்

நிமிடங்கள் மங்கின
விழி சற்று அகன்றதும்
பதறி விழித்தேன்

தணியாத ஆசையில்
பெற்றோர் வெறுத்து
வெட்டொன்று துண்டாக
வாய்வெட்டால்
வீழ்த்திட்டேன்

உறவதைப் பிரிந்ததில்
தனித்திருந்து
அனுபவித்தேன்
திடீர் முடிவெடுத்தேன்

கடைசி இரவானாலும்
உறவோடு வாழவேண்டும்

பதறாத பனித்துளி
இலை நுனியில்
கருத்தரிக்க
முன்பே
காற்றோடு பறந்தேன்
உறவுகள் தேடி

மீரா எம். அஸ்ஹர்
இறக்காமம்



# உயிர் மொழி


## பெண் பறவை

ஒட்டை குடிசைக்குள்
ஒதுங்கியிருந்து
சிந்தனைக்கு வடிவம்கொடுத்த
எத்தனை ஏழைப் பெண்களை
எம்மால் அறிய முடிகிறது?

தலைதூக்க முடியாத
குடும்பச் சுமைகள்
தலைமையால் தாங்க முடியாமல்
போகும்போது
தனியாக தாங்கவேண்டிய
சோகங்கள் ஏராளம்...

பட்டாம் பூச்சியாய்
பறக்கவேண்டிய பருவம்
வீட்டுப் பூச்சியாய்
விழுந்துவிட்டதை
எண்ணிச் சிந்திய கண்ணீர்த் துளிகள்
சிந்தனை முத்துக்களாய்
பிரவாகிக்க வேண்டாமா?

ஸபானா சுஹைறுப்
இஸ்லாஹிய்யா வளாகம்



# எகிப்து

எகிப்திய மண்ணின்
இரத்த ஆறுகளில் மிதக்கும்
எம்முறவுகளின்
ஏக்கம் நிறைந்த பார்வைகள்
கணவனை இழந்த மனைவி
மனைவியை இழந்த கணவன்
பெற்றோரை இழந்த பிள்ளைகள்
மொத்தத்தில் அனைவரும்
அநாதைகளாய்..

சப்னா ஜெய்னுல் ஆப்தீன்
ஜாமிஆ ஆயிஷா சித்தீக்கா



# கோடைக் கடல் மீன்கள்

அள்ளிக் கொடுக்கிறது
ஒவ்வொரு மீன்களாக
கடல்

சூரியன் இறங்கி
வெளிச்சம் காட்டி
கணக்குக் காட்டி
கணக்குத் தப்பாமல்
சரிசெய்து கொள்கிறது

கோடைக்கடல்
அலைகள் குறைவு
சிறு உறுமலுடன்
மட்டும்
நல்ல பாட்டம்
தோணி தள்ளியவன்
சால்வையை ஒருமுறை
மாறிப் போட்டு

சிரிப்புடன்
மீண்டும் தள்ளுகிறான்

நாட்கணக்கில்
பிலால் நாற்றம்
இல்லாமல் கிடந்த ஊருக்கு
பெரும்பாட்டம்
கடல் திறந்த கண்ணால்!

ஓலை உருவி
கோர்வை மாலையில்
மீன்கள்
நம் நாட்டு
மந்திரிகள் மாதிரி!

நாற்றம் கழுவ
வருகிறது
பெருமழை
மீன் தந்த கடல் மீண்டும்
வானத்தோடு தட்டிக்கொள்கிறது

-அபார்-

# கோடி சுகங்கள் பேசும்

உயிருக்குள் உயிராய்
அன்புக்குள் அவதாரமாய்
கனவுகளுள் இளவரசியாய்
நினைவுகளில் நீச்சலடிக்கும் கன்னியாய்
எனக்குள்ளே கரைந்துவிட்டு – நீ
இன்று எங்கே சென்றாய்?

சுவாசிக்கும் காற்றிலும் உன்னசைவுதான்
வாசம் சொல்லும் மலரிலும் உன் முகந்தான்
காண்பதெல்லாம் உறவின் ஞாபகங்கள்...
என்றிருந்த நீ, பிரியாவிடை
தந்து விட்டாயே!
இது – ஓர் உள்ளத்தில்
பதிந்திட்ட நட்பின் வலிகள்...

ஒன்றாய்க் கூடி
பக்கத்திலிருந்து கதைசொன்ன,
அன்புச் சண்டைகள் பிடித்து – நாணமாய்
புன்னகை விரிந்த நாட்கள்...



'அன்பு' தான் வாழ்க்கையென்ற
நிரந்தரப் பொழுதுகள் – அதோ
அவளது மூச்சில் சுழல்கிறது

அற்ப இன்பங்களெல்லாம் –
யதார்த்தத்தில்
உயிரை விடவும் மேலாகி
படைத்தவனையே மறந்துகிடக்கும்
நன்றிகொன்ற நெஞ்சங்கள்தான்
பாதைகளில் பிச்சை கேட்கின்றன

சோதரியே!
ஒன்று சொல்கிறேன் – இதில்
ஓராயிரம் உண்மைகள்
புதைந்திருக்கின்றன
வெறும் புழுதியாய் கிளம்பவிடாமல்
உன் உழலும்
உயிருக்குள் நுழைத்துக்கொள்!
"உன்னை வாழப்படைத்தவன்

ஆர்த்தி


இன்னொருவனை நினைத்து
உன்னை
இழந்து விடுவதற்காகவல்ல...
உன்னால்,
கருங்கல்லாயிருந்த – ஓர்
உண்மையாவது மென்மையாகிட
வேண்டுமென்பதற்காகவே "

சோதரியே!
போலிப் புதருக்குள் – உன்
அன்புகளை அலைக்கழித்திடாதே
இறையன்பை
முதலாய் ஏந்து!
பின்பு எல்லாமே அதனுள்
அடிமை கொண்டு மண்டியிடும்
அதன் சுகமோ – கோடிகள்
தரும்
அனுபவங்கள் பேசும்
இன்றே இடங்கொடு
அவனது அன்புக்கு!

பின்த் அன்ஸார், இஸ்லாஹிய்யா வளாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு படம் பல எண்ணம்...



எனக்குத் தெரியாது நான்
யாருக்காக காத்திருக்கிறேன்
என்று...
Mohamed Azmath

இரையை சாப்பிட போய்-
இரையாகும் ஜீவன்களின்
தூக்கு கயிறு...
Riyas Mohamed

ஒரு மடையனின் முன்னுதாரணம்
விட்ட தூண்டிலில் இரையை
இணைக்காதது
Abdul Waheed

வடிவமைக்கப்பட்டேன்
வடிவுக்காகவல்ல
வதைப்பதற்காகவே
தப்பறியா
தமையன்களை
தூண்டில் எனும் பெயரால்
துடிதுடிக்க செய்யவே
மனமுடயவில்லை
மகிழ்ச்சியே
பசி தீர்க்கும்
பணிசெய்த திருப்தியே
Wasim Akram

நீலக்கடலின் நீர்தனிலே
நீந்தி வரும் தூண்டிலதில்
மீன் வந்துண்ண
இரையுமில்லை
நாம் பிடித்துண்ண
மீனுமில்லை!
Miraaj Fairoon

சிறுவர்களின்
விளையாட்டுப்பொருளாய்
தரையில் சுற்றியபோது
சுதந்திரமோ என்னுடமை
புன்னகையோ சிறுவருடமை...
நீருக்குள் விட்டபோது
இரண்டுமே எவரோ ஒருவரின்
தனியுடமை....
Fathima Shehara

ஏவியவன் கரையிருக்க
காத்திருந்த உன்னால் இதை
மட்டுமே
செய்யமுடியும்
அப்பாவிகளின் கருணைக்கொலை!
Sakeel Sarjoon Sakeel

துடிக்கும் புழுவின் பின்
தூண்டில் இருப்பது தெரிந்தும்
முள்ளின் ருசிக்காக
மெல்லும் மீன்கள் நாம்!
Rasoolsha Mohamed Sharoofi

நம்மில் நாமே நமக்கு
வைத்துக்கொள்ளும் ஆப்பு...
Rmrishafi Rishafi

திரைக்கடல் மீது
இரை தேடும் மீனதை
கரை கடந்த
குறை குணத்தவனுக்கு
வைத்த
மறைதந்த இறைவன்
அன்பு
வரையறை அற்றது
Imthath Basar

ஆழ் கடலில் பனிப்பாறை
மிதந்தால் மாந்தரை பேரறிவு
காணும் அதன் அடி உலகிலே
ஓடையில் நான் மிதந்தால்
மீனினமே
சுடுகாடு காணும் - எந்தன்
முடியுலகிலே...
Mohammed Mafaz

ஆசையை தூண்டிவிட்டு
அழகு மீனை தூண்டிலிட்டு
பாசமாய் கூண்டிலிட்டு
பக்குவமாய் எடுத்துச்சென்று
நாசமாய்போன மனிதன்
வேஷமதை கலைக்கும் வேளை
மோசமதை உணரும் மீனோ
முடிவிலா நெருப்பை தீண்டும்...
Ibrahim Nihrir

உயிருக்கும் உணவுக்கும் இடையில்
கெட்டவனாக ஒருமுனைக்கு
நல்லவனாக மறுமுனைக்கு
ஒரு வரியில் சொல்லவா...
"மனிதன் "
Mohamed Anshad

புழுவின் மீது மீனுக்காசை
மீனின் மீது மனிதனுக்காசை
ஆனால்...
புழுதான் கடைசியில் ஜெயிக்கிறது
இதை மனம்தான் உணர
மறுக்கிறது
Mohamed Iksab

மறந்தும் நினைக்காதே
மனிதன் உனக்கு நண்பனல்ல
பின்நோக்கம் நிறைவேற- உன்
முன் பாசவலை போடுகிறான்
Mohamed Fazeel

ஊடகப் பங்காளி
**The Puttalam Times**
பேஸ்புக் குழுமம்


Diploma in
FASHION DESIGN
MODULES
✓ Introduction to Fashion and Textiles
✓ Fashion Illustration
✓ Visual Communication
✓ Concept Development in Fashion
✓ Fabric and Textile understanding and Manipulation
✓ Fashion Research (RVJ)
✓ Techniques and Process of Fashion
✓ Garment Manufacturing
✓ Fashion Marketing
✓ Development of the Fashion Collection for the final Fashion Show
✓ In House Trial of the Show (In House Fashion Show)
✓ Fashion Show with the Final Outfits
English for Improvement & Accommodation Facilities are Avaible
REGISTER BY – 20/12/2013
06 MONTHS - RS. 15,000/= (PER MONTH)
1st Batch: Saturdays 2.00 p.m. - 6.00 p.m. Sundays 9.00 a.m. - 1.00 p.m.
2nd Batch: Mondays 9.00 a.m. - 1.00 p.m. Wednesdays 9.00 a.m. - 1.00 p.m.
HOT LINE: 0711 60 10 40 Tel: 011 4545082/83 Mob: 077 2166222
LONDON SCHOOL OF FASHION
No. 155/1A, Galle Road, Dehiwala. (Near Arpico Supercentre)
Bambalapitiya 0776 346913 | Nugegoda 0774 323131 | Dematagoda 0774 833444 | Dehiwala 0712 357412 | Kandy I 0775 492944 | Kandy II 0711 601050



இப்பொழுது ஜே.எம்.எப் T-Shirt
விற்பனையில்
மட்டுப்படுத்தப்பட்ட T-Shirtகளே
கையிருப்பில் உள்ளதால் இன்றே
தொடர்பு கொள்ளுங்கள்.
சகோதரர் ரீ. முஸ்தாக் - 0777 396 306



edexcel : UK Assured
இலங்கையில் BCAS CAMPUS மாத்திரமே வழங்கும்
CAD & BS Computer Aided Design & Building Studies
With * MEP Mechanical Electrical & plumbing
ரூபா 75,000.00
Duration: 6 Month
பாடநெறி முடிவில் 4 சான்றிதழ்கள்
• Professional Diploma in CAD (Awarded By Edexcel UK & BCAS Campus)
• Certificate in Building Studies
• Certificate in MEP Applications
• Certificate in Technical English
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Corporate Office: 32, Dharmarama Road, Colombo 06, Sri Lanka. Tel: 011 2501145 Email: info@bcas.lk
www.bcas.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org